ஸ்ரீ:

ஸ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:.

ஸ்ரீக்ருஷ்ண த்வைபாயநாய நம:.

ஸ்ரீ மஹாபாரதம்.

ஆச்ரமவாஸிகபர்வம்.

முதலாவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம்.

[1] நாராயணம் நமஸ்க்ருத்ய நரம் சைவ நரோத்தமம் ।
தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீரயேத் ॥

(யுதிஷ்டிரரின் அரசாட்சியும், குந்திமுதலியோர் காந்தாரியிடம் மரியாதையாயிருத்தலும், பீமன்தவிர மற்றையோர் யுதிஷ்டிரர்கட்டளைப்படி திருதராஷ்டிரனை அநுஸரித்ததும்.)

ஜனமேஜயர், "(முனிவரே!) என்னுடைய முன்னோர்களுக்குப் பிதாமஹர்களான பாண்டவர்கள் தம்முடைய பாட்டன்மார்களின் ராஜ்யத்தை அடைந்து மஹாத்மாவான திருதராஷ்டிர மஹாராஜனிடத்தில் எவ்விதம் இருந்தார்கள்? மந்திரிகளும் புத்திரர்களும் கொல்லப்பட்டவனும் ஆதாரமற்றவனும் செல்வத்தைஇழந்தவனுமான அந்தத் திருதராஷ்டிர ராஜனும் துக்கிக்கத்தக்கவளான காந்தாரியும் எவ்விதம் இருந்தார்கள்? மஹாத்மாக்களும் என்னுடைய முன்னோர்களுமான அந்தப் பாண்டவர்கள் ராஜ்யத்தில் எவ்வளவுகாலம் இருந்தார்கள்? இவற்றை எனக்கு விவரித்து உரைக்கக்கடவீர்" என்று வினவ, வைசம்பாயனர் சொல்லலானார்.

"மஹாத்மாக்களும் பகைவர்களைக்கொன்றவர்களுமான பாண்டவர்கள் ராஜ்யத்தை அடைந்து திருதராஷ்டிரனை முன்னிட்டுக்கொண்டு

1. இதன் உரைவிசேஷங்களை ஆதிபர்வம் முதற்பக்கம் குறிப்பிற்காண்க.

பூமியைப் பரிபாலித்தனர். கௌரவர்களுள் சிறந்தவரே! விதுரரும் ஸஞ்சயனும் தாஸீபுத்ரனும் மேதாவியுமான யுயுத்ஸுவும் திருதராஷ்டிரனை ஆராதித்தனர். பாண்டவர்கள் பதினைந்து வருஷங்கள் எல்லாக் காரியங்களையும் அந்த அரசனிடம் தெரிவித்து அவனால் அனுமதிசெய்யப்பட்டு நடத்திவந்தார்கள். அந்த வீரர்கள் தர்மராஜருடைய கருத்துக்கு உட்பட்டு எப்பொழுதும் அந்தத் திருதராஷ்டிரராஜனை அருகிற் சென்று பாதங்களில் நமஸ்கரித்து உபாஸித்து (அவரால்) சிரஸில் மோக்கப்பட்டு எல்லாக்காரியங்களையும் செய்துவந்தனர். குந்திபோஜன்மகளான குந்தியும் காந்தாரியை அனுஸரித்திருந்தாள். த்ரௌபதியும் ஸுபத்ரையும் மற்றுமுள்ள பாண்டவஸ்திரீகளும் அவ்விரண்டு மாமிமார்களிடத்திலும் விதிப்படி பணிவிடையை ஸமமாகச் செய்துவந்தனர். மஹாராஜரே! யுதிஷ்டிரர் திருதராஷ்டிரனுக்கு அரசர்களுக்கே முழுதும் ஏற்றவைகளான மிகச்சிறந்த சயனங்களையும் ஆடைகளையும் ஆபரணங்களையும் பலவிதமான பக்ஷணங்களையும் ஆகாரங்களையும் கொடுத்துவந்தார். அவ்விதமே, குந்தியும் காந்தாரியினிடத்தில் குருவினிடத்தில் நடப்பதுபோல நடந்துவந்தாள். கௌரவரே! விதுரரும் ஸஞ்சயனும் யுயுத்ஸுவும், பிராயமுதிர்ந்தவனும் புத்ரர்களையிழந்தவனுமான அவ்வரசனுக்குப் பணிவிடை செய்தனர். துரோணருடைய மைத்துனரும் அன்பரும் ப்ராம்மணரும் மஹானும் சிறந்த வில்லாளியுமான க்ருபரும் அப்பொழுது அவனுடைய ஸமீபத்தில் வஸித்துவந்தார். பகவானும் புராணரிஷியுமான வியாஸரும் தேவர்கள் ரிஷிகள் பித்ருக்கள் ராக்ஷஸர்கள் இவர்களுடைய கதையைச் சொல்லிக்கொண்டு எப்பொழுதும் அரசனோடு இருந்தார். யுதிஷ்டிரர், திருதராஷ்டிரனால் அனுமதிகொடுக்கப்பட்டு, தர்மத்தோடுகூடினவைகளும் வ்யவஹாரத்தோடுகூடினவைகளுமான கார்யங்களைச் செய்வித்தார். அந்தத் திருதராஷ்டிரன், [1]ஸாமந்தர்களிடமிருந்து பிரியமானவைகளும் மிகப்பெரியவைகளுமான காரியங்களையும் விதுரருடைய நல்லநீதியினால் மிகச்சிறிய பொருள்களால் அடைந்தான். அவன், சிறையில் வைக்கப்பட்டவர்களையும் கொல்லத்தக்கவர்களையும் விடுவித்தான். அரசரான தர்மபுத்ரர் ஒருபொழுதும் ஒன்றும்சொல்லவில்லை. வேடிக்கையாக உலாவும் காலங்களிலோ, கௌரவராஜரான யுதிஷ்டிரர், எல்லாஇஷ்டமான வஸ்துக்களையும் கொண்டுவந்து திருதராஷ்டிரனுக்கு அளித்தார். [2]ஆரா

1. பக்கத்து நாட்டரசர்கள்.

2 'சாகவிசேஷங்களைச் சமைப்பவர்கள்' என்பது பழைய உரை.

ஷிகர்களும் [1]ஸூபகாரர்களும் [2]ராகஷாடவிகர்களும் திருதராஷ்டிர ராஜனை முன்போல உபசரித்தனர். பாண்டவர்கள் மிகச்சிறந்த உடைகளையும் பலவிதமாலைகளையும் காலம்தவறாமல் திருதராஷ்டிரனுக்குக் கொடுத்தார்கள். [3]மைரேயத்தையும் [4]மதுவையும் மாம்ஸத்தையும் தெளிந்த பானகங்களையும் விசித்ரமான பலவிதத் தின்பண்டங்களையும் அவனுக்கு முன்போலச் செய்துகொடுத்தனர். ஆங்காங்கிருந்து வரும் எல்லா மன்னர்களும் கௌரவஸ்ரேஷ்டனை திருதராஷ்டிரனை முன்போல உபசரித்தனர். புருஷஸ்ரேஷ்டரே! குந்தியும் த்ரௌபதியும் ஸாத்வதகுமாரியும் புகழ்பெற்றவளுமான ஸுபத்ரையும் நாககன்னிகையான உலூபியும் சித்ராங்கதையென்னும் தேவியும் திருஷ்டகேதுவின் [5]ஸஹோதரியும் ஜராஸந்தனுடைய [6]பெண்ணும் ஆகிய இவர்களும் மற்றுமுள்ள அநேகம் ஸ்திரீகளெல்லாரும் வேலைக்காரிகளாயிருந்துகொண்டு ஸுபலனுடைய புத்ரியான காந்தாரிக்குப் பணிவிடை செய்தனர். யுதிஷ்டிரர், 'புத்ரர்களையிழந்த இவர் சிறிதும் துயரப்படாமலிருக்கவேண்டும்' என்று எப்பொழுதுமே தம் ஸஹோதரர்களுக்கு உத்தரவு செய்துவந்தார். அப்பொழுது, அந்தப்பாண்டவர்கள் சிறந்த பொருளுள்ளதான தர்மராஜருடைய இவ்வித வசனத்தைக்கேட்டு, பீமன் ஒருவனைத்தவிர, மற்றவர்கள் (அவ்விதமே) விசேஷமாக நடந்துவந்தனர். திருதராஷ்டிரனுடைய கெட்டபுத்தியினால் சூதாடும் ஸபையில் நடந்த அது வீரனான அந்தப் பீமனுடைய உள்ளத்தைவிட்டு விலகவே இல்லை.

---

1 பருப்பைச் சமைப்பவர்கள்.

2 'திப்பிலியும் சுக்கும் சர்க்கரையும் சேர்ந்த பருப்புரஸம்' என்பது பழையவுரை.

3 கருப்பஞ்சாற்றினால் செய்த கள். மிரை யென்னும் தேசத்திலுண்டானது. ஆதிபர்வம் 698 பக்கம் குறிப்பிலும் காண்க.

4 இலுப்பைப் பூவினால் செய்த கள்.

5 இவள் நகுலனுடைய மனைவி ரேணுமதி யென்பவள். ஆதிபர்வம் 215-ம் பக்கம் பார்க்க.

6 இவள் ஸஹதேவன் மனைவி. இந்தப்பர்வம் 27-ம் அத்யாயத்தில் காண்க.

இரண்டாவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

———:o:———

(யுதிஷ்டிரர் தம்பிமாரோடுகூடித் திருதராஷ்டிரனை மகிழ்வித்தது)

இவ்விதம் பாண்டவர்களால் நன்குபூஜிக்கப்பட்டவனும் அம்பிகா புத்திரனுமான திருதராஷ்டிரராஜன் ரிஷிகளால் சூழப்பட்டு முன்போல் ஸஞ்சரித்தான். கௌரவஸ்ரேஷ்டனான அவன் பிராம்மணர்களுக்குக் கொடுக்கத்தக்க அக்ரஹாரங்களையும் தானம்செய்தான். குந்திபுத்திரரான யுதிஷ்டிரராஜர் அவற்றையெல்லாம் ஸந்தோஷமாக ஒத்துக் கொண்டார். குரூரத்தன்மையற்ற ஸ்வபாவத்தைப் பிரதானமாகக் கொண்டவரும் பூபதியுமான அந்தயுதிஷ்டிரராஜர், அப்பொழுது, ஸந்தோஷத்துடன், ஸஹோதரர்களையும் மந்திரிகளையும்பார்த்து, 'நானும் நீங்களும் இந்தஅரசரைக் கௌரவிக்கவேண்டும்; திருதராஷ்டிரருடைய கட்டளையை மீறுதவனே எனக்கு நண்பன். மீறும்மனிதன் எனக்குப் பகைவனும் தண்டிக்கப்படத்தக்கவனுமாவான்' என்றுசொன்னார். யுதிஷ்டிரராஜர், சிலநாட்கள்சென்றவுடன், (திருதராஷ்டிரனுடைய) புத்திரர்களின் ச்ராத்தத்தில் அவனுடைய இஷ்டம்வரையில் தனங்களைக்கொடுத்தார். பிறகு, குருகுலத்தில் பிறந்தவனும் சிறந்தசித்த முள்ளவனுமான அந்தத்திருதராஷ்டிரராஜன் தகுந்தபிராம்மணர்களுக்கு மிகுதியான தனங்களைக் கொடுத்தான். தர்மராஜரும் பீமனும் அர்ஜுனனும் நகுலனும் ஸஹதேவனுமான அந்தப்பாண்டவர்கள், 'பிராயம் முதிர்ந்தவரும் புத்திர பௌத்திரர்களுடைய வதத்தால் பீடிக்கப்பட்டவருமான அந்தத்திருதராஷ்டிரராஜர் நம்மால்செய்யப்பட்ட சோகத்தை அடைந்து எவ்விதம் மரிக்காமலிருப்பார்?' என்று ஆலோசித்து அவனிடத்தில், கருணையால் அவற்றை யெல்லாம் அனுஸரித்தனர். குருவீரனான திருதராஷ்டிரன் தன் புத்திரர்கள்ஜீவித்திருந்தால் எவ்வளவு ஸுகம்கிடைக்குமோ அவ்வளவுஸுகத்தையும் நிலைபெற்றபோகங்களையும் அடைந்தான். பிறகு, பாண்டுகுமாரர்களான அந்தஐந்துஸஹோதரர்களும் ஒன்றுசேர்ந்து அவ்விதஸ்வபாவமுள்ளவர்களாயிருந்து கொண்டு திருதராஷ்டிரனுடையஉத்தரவை நன்கு அனுஷ்டித்தார்கள். திருதராஷ்டிரனும் வணக்கமுள்ளவர்களும் நியமம்தவறுதவர்களும் சிஷ்யர்களுடையநடையை அடைந்தவர்களுமான அவர்களெல்லாரையும், குரு (சிஷ்யர்களை அங்கீகரிப்பது)போல, அங்கீகரித்தான். அந்தக்

காந்தாரியும் புத்திரர்களுக்குப் பலவிதமான ஶ்ராத்தகர்மங்களைச்செய்து பிராம்மணர்களுக்கு இஷ்டங்களைக்கொடுத்துக் கடன்தீர்ந்தவளானாள். இவ்விதம் தர்மத்தைச்செய்பவர்களுள் சிறந்தவரும் சிறந்தபுத்திமானும் தர்மராஜருமான யுதிஷ்டிரர் ஸஹோதரர்களுடன்சேர்ந்து அந்தஅரசனைப் பூஜித்தார். அரசனும் மிகப்பெரியதேஜஸுள்ளவனும் பிராயம் முதிர்ந்தவனும் குருகுலத்தைத்தாங்குபவனுமான அந்தத்திருதராஷ்டிரன் அப்பொழுது பாண்டவனிடத்தில் சிறிதும் அப்பிரியத்தைக் காணவில்லை. நல்லொழுக்கத்திலிருப்பவர்களும் மஹாத்மாக்களுமான பாண்டவர்களிடத்தில் அம்பிகாபுத்திரனும் அரசனுமான திருதராஷ்டிரன் பிரீதியுள்ளவனாக இருந்தான். ஸுபலனுடையபெண்ணான காந்தாரியும் அந்தப்புத்திரசோகத்தைவிலக்கிவிட்டு (அவர்களிடத்தில்) தன்புத்திரர்களிடத்திற்போல எப்பொழுதும் பிரீதியுள்ளவளாக இருந்தாள். குருகுலத்தில்பிறந்தவரும் கௌரவஶ்ரேஷ்டருமான யுதிஷ்டிரர், விசித்ரவீர்யனுடையகுமாரனும் அரசனுமான திருதராஷ்டிரனுக்கு எப்பொழுதும் பிரியமானகார்யங்களையே செய்தார்; அப்பிரியங்களைச்செய்யவில்லை. மஹாராஜரே! அந்தத்திருதராஷ்டிரராஜனும் புகழ்பெற்றவளானகாந்தாரியும் எந்தஎந்தவார்த்தையைச் சொல்லுவார்களோ, காரியம் பெரிதாயினும் சிறிதாயினும், அந்தஅந்த வார்த்தையைப் பாண்டவர்களுள்ஶ்ரேஷ்டரும் சத்துருவீரர்களைக்கொல்பவருமான அந்தயுதிஷ்டிரராஜர் அவர்களைப்பூஜித்துச் செய்துவந்தார். அவருடைய அந்தநடத்தையால் அந்தத்திருதராஷ்டிரராஜன் பிரீதியுள்ளவனாகி, மந்தபுத்தியுள்ளவனும் புத்திரனுமான அந்தத்துரியோதனனை நினைத்து மனவருத்தமடைந்தான். எப்பொழுதும் திருதராஷ்டிரராஜன் விடியற்காலத்தில் எழுந்திருந்து சுத்தனாகஇருந்துகொண்டு ஜபம்செய்துவிட்டுப் பாண்டவர்களுக்கு யுத்தங்களில் வெற்றியை அனுக்கிரஹிப்பான். பிறகு, அவன் பிராம்மணர்களை ஸ்வஸ்திவாசனம்செய்யச்செய்து அக்னியில் ஹோமம் செய்துவிட்டுப் பாண்டவர்களுக்கு (நீண்ட) ஆயுளைவேண்டுவான். அந்தத்திருதராஷ்டிரராஜன் பாண்டவர்களிடமிருந்து எப்பொழுதும் எவ்விதமானபிரீதியை அடைந்தானோ அவ்விதமான மேலானபிரீதியை முன்பு அக்காலத்தில் தன் புத்திரர்களிடமிருந்தும் அடையவில்லை. அந்தயுதிஷ்டிரர் அப்பொழுது பிராம்மணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் எவ்விதமிருந்தாரோ அவ்விதமே வைஶ்யர்களினுடையகூட்டங்களுக்கும் சூத்திரர்களினுடைய கூட்டங்களுக்கும் பிரியராகஇருந்தார். அவர் முற்காலத்தில் திருதராஷ்டிரபுத்திரர்கள் செய்த கெடுதியை மனத்தில்

நினையாமல் அவ்வரசனை அனுஸரித்தார். எவனாவது ஒருவன் தவறு தலால் திருதராஷ்டிரன்விஷயத்தில் ஏதாவது ஒருகுற்றத்தைச் செய்து விட்டால் அவன் சிறந்தபுத்தியுள்ள யுதிஷ்டிரருக்குப் பகைவனாவான். ஒருமனிதனும் யுதிஷ்டிரரிடமுள்ளபயத்தால் திருதராஷ்டிரராஜன் மீதும் துர்யோதனன்மீதும் பாவத்தைச்சொல்லவில்லை. புருஷஸ்ரேஷ்டனை அந்தத்திருதராஷ்டிரராஜனும் காந்தாரியும் விதுரரும் நடையினாலும் (தம்மைப்)போஷிப்பதினாலும் பகைவரற்றயுதிஷ்டிரர்மீது ஸந்தோஷமடைந்தார்கள்; த்ருதராஷ்டிரராஜன் பீமன்மீது ஸந்தோஷப்படவில்லை. பீமனும் தர்மபுத்திரரான அரசரை உறுதியாக அனுஸரித்தான். (ஆனாலும்), திருதராஷ்டிரனைக்கண்டு எப்பொழுதும் மனவருத்தமுள்ளவனாக இருந்தான். பகைவரைக்கொல்பவனானபீமன், திருதராஷ்டிரராஜனை அனுஸரித்திருக்கும் தர்மபுத்திரரை மிக்ககோபமுள்ளவனும் உள்ளத்தில் பிரியமில்லாதவனுமாயிருந்துகொண்டு அனுஸரித்தான்.

மூன்றாவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம் (தொடர்ச்சி.)

———:o:———

(பீமனது நிந்தையைக்கேட்ட திருதராஷ்டிரன் காந்தாரியுடன் காடு செல்லத் துணிந்ததும், நகரஜனங்களைவரவழைத்துத்தனது நிச்சயத்தை அவர்களுக்குத்தெரிவித்ததும்.)

அப்பொழுது, ஜனங்கள் யுதிஷ்டிரராஜருக்கும் துர்யோதனனுடையபிதாவுக்கும் ராஜ்யத்திலுள்ள ஸ்நேஹத்தைப்பற்றி வேற்றுமையைக் காணவில்லை. அரசரே! கௌரவராஜன் எப்பொழுது மூர்க்கனான புத்திரனை நினைப்பனோ அப்பொழுது அவ்வரசன் பீமனைப் பற்றிச் சித்தத்தில் கேடுநினைப்பான். கௌரவனான திருதராஷ்டிரனும் பீமஸேனனும் ஒருவருக்கொருவர் உள்ளத்தில் வேறுவேறு எண்ணமுள்ளவர்களும் ஆனாலும் ஒருவரோடொருவர் இனிமையாகப்பேசுகின்றவர்களுமாக இருந்தார்கள். பீமன் அரசனுடையகெட்டஆலோசனையையும் சிலநடைகளையும் நினைத்து, அவனுக்கு ரஹஸ்யமாக அப்பிரியங்களைச் செய்தான். கபடமான ஆட்களைக்கொண்டு எப்பொழுதும் அவனுடைய கட்டளையையும் மாற்றினான். 'மந்தபுத்தியுள்ளவர்களான அவர்கள் கொல்லப்பட்டனர்'என்று இவ்வசனத்தையும் அடிக்கடி சொன்னான். மேலும், பொறுமையுள்ளவனும் பயங்கரனுமான அந்தப் பீமன், பகை

வனை துர்யோதனனையும் கர்ணனையும் துச்சாஸனனையும் நினைத்து மிக்ககோபங்கொண்டு அன்புள்ளவர்களுடைய நடுவிலிருந்து திருதராஷ்டிரனுக்கும் காந்தாரிக்கும் கேட்கும்படி கைகளைத்தட்டிக்கொண்டு பின்வருமாறு கடுமையானவார்த்தையைச் சொல்லலானான்: 'பலவித சஸ்திரங்களாலும் அஸ்திரங்களாலும் போர்புரிபவர்களான குருடனை மன்னனுடைய புத்திரர்களெல்லாரையும் இருப்புத்தூண்போன்ற கைகளுள்ள நான் பரலோகத்தைஅடையும்படி செய்தேன். எந்தக்கைகளின் மத்தியைஅடைந்து திருதராஷ்டிரனுடைய புத்திரர்கள் நாசத்தை அடைந்தார்களோ இருப்புத்தடிக்கொப்பானவைகளும் (பகைவரால்) அணுகமுடியாதவைகளுமான என்னுடைய அவ்விரண்டு புஜங்களும் இதோ இருக்கின்றன. எந்தக்கைகளால் துர்யோதனன், புத்திரர்களுடனும் பந்துக்களுடனும், நாசத்தைஅடையும்படிசெய்யப்பட்டானோ சந்தனத்தால் பூசப்பட்டவைகளும் (பகைவர்களால்) நமஸ்கரிக்கத்தக்கவைகளுமான என்னுடைய அவ்விருகைகளும் இதோ இருக்கின்றன' என்றுசொன்னான். திருதராஷ்டிரராஜன் இவைகளும் மற்றுமுள்ளவைகளுமான விருகோதரனுடைய சல்யம்போன்ற பலவிதமான அந்த வார்த்தைகளைக் கேட்டு மனவருத்தமடைந்தான். சிறந்தபுத்தியுள்ளவளும் காலத்தின் மாறுதலைஉணர்ந்தவளும் எல்லாத்தர்மங்களையும் அறிந்தவளுமான காந்தாரிதேவியும் அந்தஅப்பிரியமானவசனங்களைக் கேட்டு மேன்மைபெற்றவளான குந்தியை உற்றுப்பார்த்துப் பீமனைச் சபிக்கும் விஷயத்தில் புத்தியைச் செலுத்தவில்லை. பிறகு, நராதிபனை திருதராஷ்டிரராஜன் பதினைந்துவருஷங்கள்சென்றதும், பீமனுடைய வார்த்தைகளாகிற பாணங்களால் பீடிக்கப்பட்டு, (அங்குவஸிப்பதில்) ஒழிவைஅடைந்தான். சிறந்தபுத்தியுள்ளஅவன், யுதிஷ்டிரர் ஸுகத்தில் ஆசைகொண்டு (அதற்காக) மிக்ககஷ்டப்படுகிறாரென்று ஆலோசித்தறிந்து (தான்) தவம்புரிய எண்ணம்கொண்டான். அதனைக் குந்தியின் புத்திரரான யுதிஷ்டிரராஜராவது அர்ஜுனனாவது குந்தியாவது புகழ்பெற்ற திரௌபதியாவது அறியவில்லை. மாத்ரியின்புத்திரர்களான நகுலஸஹதேவர்கள் அரசனுடைய சித்தத்தை ரக்ஷிப்பவர்களாகிப் பீமனுடைய கருத்திற்கிணங்கித் தாம் அப்பிரியத்தைச்சொல்லவில்லை. பிறகு, திருதராஷ்டிரன் அன்புடையவர்களை வருவித்து, அவர்களைப்பார்த்து, கண்ணீரால் மிக்க தடுமாற்றமுற்றுப் பின்வரும் வசனத்தை நன்கு சொல்லலானான். 'கௌரவர்களே! கௌரவர்களுக்கு நாசம் நேர்ந்த விதம் உங்களுக்குத் தெரியும். அதெல்லாம் என்னுடைய குற்றத்தால்

நடந்ததென்று அறியவேண்டும். புத்தியில்லாதவனும் நான் கெட்ட புத்தியுள்ளவனும் ஞாதிகளுக்குப் பயத்தைவிருத்திபண்ணுகிறவனு மான துர்யோதனனைக் கௌரவர்களுக்கு அதிபதியாக அபிஷேகம் செய் தேன். புத்திரனிடத்தில் சிநேகத்திற்கு வசப்பட்டவனும் கெட்ட புத்தியுள்ளவனுமான நான், சிறந்தபொருளுள்ள கிருஷ்ணனுடைய வாக்கியத்தையும் 'பாபியான இந்தத்துர்யோதனனை நன்குகொன்றுவிடு' என்று வித்வான்களான விதுரன், பீஷ்மர், துரோணர், கிருபர், மகாத் மாவானவியாஸபகவான், ஸஞ்சயன் ஆகிய இவர்களும் காந்தாரியும் அடி க்கடிசொன்ன நன்மையையும் கேட்கவில்லை. ஆகையால், நான் இவ்விதம் தவிக்கிறேன். நான் நற்குணங்கள் பொருந்தியவர்களும் மகாத்மாக்களு மான பாண்டுபுத்திரர்களுக்குத் தகப்பன்பாட்டன்வழியாக வந்ததும் ஜ்வலிக்கின்றதுமான இந்தராஜ்யலக்ஷ்மியைக்கொடுக்கவில்லை. (அதனால் இவ்விதம் தபிக்கிறேன்.) எல்லாஅரசர்களின் விநாசத்தையும் பார்க்கின்ற வனும்ஜனார்த்தனனுமான கிருஷ்ணன் இதை மேலானக்ஷேமமாக எண் ணினன். நான் அப்பிரியமான அக்காலத்திலுள்ள ஆயிரக்கணக்கான என்னுடைய கெட்டநடைகளை (இப்பொழுது) மனத்தில் சல்யங்க ளாகத் தரிக்கிறேன். இப்பொழுது பதினைந்தாவதுவருஷத்தில் மிக்க ஸந்தாபமடைகிறேன். ஆகையால், மிக்ககெட்டபுத்தியுள்ளநான் இந்தப் பாவத்தைவிலக்கிக்கொள்ள ஆயத்தனாகஇருக்கிறேன். வழக்கமாக [1]நான் காவது காலத்திலும் சிலநாள் [2]எட்டாவது காலத்திலும் தாகத்தைத் தணிக்கக்கூடிய கஞ்சிமுதலியவற்றைப் புஜிக்கிறேன். என்னுடைய இந் தக்காரியம் காந்தாரிக்குத் தெரியும். எல்லாவேலைக்காரர்களும் எப்பொழு தும் யுதிஷ்டிரனிடமுள்ள பயத்தால், ('இவர்)ஆகாரம்செய்கிறார்' என்று (சொல்லிக்கொண்டு)என்னிடம் வருகின்றனர். (இல்லாவிடில்)யுதிஷ்டி ரன் மிக்கவருத்தமடைவான். நான் நியமமென்கிற வியாஜத்தால் ஜபத்தை முக்யமாகக்கொண்டவனும் கிருஷ்ணாஜினம் தரித்தவனுமாகப் பூமியில்(பரப்பின) தர்ப்பங்களின்மீது சயனம்செய்கிறேன். புகழ்பெற் றவளான காந்தாரியும் அவ்விதமே செய்கிறாள். நான் யுத்தங்களில் (பின்வாங்கி) ஓடாதவர்களும் வீரர்களுமான நூறுபுத்திரர்களும் கொல் லப்பட்டவிஷயத்தில் பச்சாத்தாபப்படவில்லை. (பெரியோர்கள்) அதை க்ஷத்திரியதர்மமாகக் கருதுகின்றனரல்லரோ?" என்று சொன்னன்.

1. ககவ-நாழிகைக்குமேல், சரு-நாழிகைவரையிலுள்ள காலம்.

2. உகூவ-நாழிகைக்குமேல் ௩௦-நாழிகைவரையிலுள்ள காலம். ஆச்வமேதிகபர்வம் 248-ம் பக்கம் குறிப்பிற்காண்க.

திருதராஷ்டிரன், இவ்விதம் சொல்லிவிட்டுத் தர்மபுத்திரரைநோக்கி, 'யதுகுலத்தில்பிறந்த குந்தியைத் தாயாகவுடையவனே! உனக்கு க்ஷேமமுண்டாகுக. என்னுடைய இந்தவார்த்தையைத் தெரிந்துகொள். புத்ர! நான் உன்னால் நன்குபரிபாலிக்கப்பட்டு ஸுகமாக வஸித்தேன். நான் அடிக்கடி தானங்களையும் ஸ்ராத்தங்களையும் கொடுத்தேன். புத்திர! நானும் சக்திக்குத்தக்கவாறு பெரியபுண்ணியத்தைச் செய்திருக்கிறேன். (ஏனெனில்), புத்திரர்களை இழந்தவளான இந்தக் காந்தாரியும், தைரியத்துடன் என்னை நன்குபார்த்துவருகிறாள். திரௌபதிக்கு அபகாரம் செய்தவர்களும் உன்னுடையசெல்வத்தைக் கவர்ந்தவர்களும் கொடியவர்களுமான அவர்கள் யுத்தத்தில் தம்தர்மத்தினால் கொல்லப்பட்டுச் சென்றுவிட்டார்கள். குருநந்தன! அவர்களுக்காகச் செய்யவேண்டிய காரியத்தை நான் காணவில்லை. அவர்களெல்லாரும் எதிர்த்துநின்று கொல்லப்பட்டுச் சஸ்திரங்களால் ஜயிக்கப்பட்ட உலகங்களை அடைந்தார்கள். ஆனால், இப்பொழுது எனக்கும் உன்(அன்னையான) காந்தாரிக்கும் நன்மையும் புண்ணியமுமான காரியம் செய்துகொள்ளவேண்டும். ராஜேந்திர! ஆகையால், நீ அனுமதிகொடுக்கவேண்டும். நீயோ சஸ்திரதாரிகளுள் சிறந்தவனும் எப்பொழுதும் தர்மத்தில்பிரியமுள்ளவனும் பிராணிகளுக்கு அரசனும் குருவுமாக இருக்கிறாய். ஆகையால், நான் இதனைச் சொல்லுகிறேன். வீரனே! ராஜனே! நான் உன்னிடம் அனுமதிபெற்றுக்கொண்டு [1]சீரத்தையும் மரப்பட்டையையும் தரித்துக்கொண்டு இந்தக்காந்தாரியுடன் வனம்செல்லவேண்டும். நான் உனக்கு ஆசீர்வாதம்செய்துகொண்டு வனத்தில் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கப்போகிறேன். பரதர்களில்சிறந்தவனே! ராஜனே! ஆயுளின்முடிவில் புத்திரர்களிடத்தில் ஐஸ்வர்யத்தைவைத்துவிட்டுக் காடு செல்வது நம்முடையகுலத்தில் எல்லாருக்கும் வழக்கம். வீர! நான் அந்தவனத்தில் இந்தப்பத்னியுடன் காற்றைப்புஜிப்பவனாகவாவது ஆகாரமேஇல்லாதவனாகவாவது வஸித்துக்கொண்டு சிறந்ததவத்தைச் செய்யப்போகிறேன். ஐயனே! நீ பூமிக்கு இறைவனாக இருப்பதால், நீயும் அத்தவத்தின்பயனில் பாகத்தை அடைவாய். அரசர்கள் புண்ணியத்திற்கும் பாவத்திற்குமுள்ளபயனில் பாகத்தை அடைபவர்களல்லரோ?' என்று சொன்னான்.

1 கிழிந்த பழையவஸ்திரம்.

நான்காவது அத்யாயம்.

ஆஶ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

———:o:———

(திருதராஷ்டிரன் வனஞ்செல்ல யுதிஷ்டிரரிடம் அநுமதி கேட்டதும், யுதிஷ்டிரர் வருத்தத்துடன் தடுத்ததும், வியாஸர் வந்ததும்.)

யுதிஷ்டிரர், "அரசரே! நீர் இவ்விதம் துக்கப்படுவதால் ராஜ்யமானது எனக்கு விருப்பத்தை உண்டுபண்ணவில்லை. மிக்க கெட்டபுத்தியுள்ளவனும் ராஜ்யத்தில் ஆசையுள்ளவனும் தவறுதலுள்ளவனுமான என்னை நிந்திக்கவேண்டும். துக்கத்தால் பீடிக்கப்பட்டவரும் உபவாஸத்தால் மிக இளைத்தவரும் ஆகாரத்தை விட்டவரும் பூமியில் சயனம் செய்பவருமாக நீர் வீட்டில் வஸிப்பதை நானும் (என்) ஸஹோதரர்களும் தெரிந்துகொள்ளவில்லை. நீர் முந்தி எனக்கு நம்பிக்கையையுண்டு பண்ணி இவ்விதமான துக்கத்தை அநுபவித்தீர்; ஆகையால், வெளிப்படையாக இல்லாத புத்தியையுடைய உம்மால் மூடனான நான் வஞ்சிக்கப்பட்டேன். ஆ! ராஜரே! என்னுடைய (பிதாவான) நீர் இவ்விதமான துக்கங்களை அடைந்தீர். ஆகையால், எனக்கு ராஜ்யத்தாலும் போகங்களாலும் யஜ்ஞங்களாலும் ஸுகத்தாலும் என்ன பயன்? அரசரே! இப்பொழுது துக்கத்தையுடையவராயிருக்கும் உம்முடைய இந்த வார்த்தையால் என்னையும் ராஜ்யத்தையும் பீடிக்கப்பட்டவர்களாக அறிகிறேன். நீர் எங்களுக்குத் தகப்பனார். நீர் தாயார். நீர் சிறந்த குரு. நாங்கள் உம்மைப்பிரிந்து எவ்விதம் இருப்போம்? ராஜஶ்ரேஷ்டரே! மஹாராஜரே! உம்முடைய ஔரஸகுமாரனான யுயுத்ஸுவானவன் ராஜாவாக இருக்கட்டும். அல்லது வேறு எவனை நீர் விரும்புகிறீரோ, (அவன் ராஜாவாக இருக்கட்டும். அல்லது), நீரே ராஜாவாக இருந்துகொண்டு இந்த ராஜ்யத்தை ஆளும். நான் கானகம் செல்லுகிறேன். அபகீர்த்தியால் எரிக்கப்பட்ட என்னை நீர் மறுபடியும் எரிக்கவேண்டாம். நான் அரசனல்லேன். நீர்தாம் அரசர். நான் உமக்கு வசப்பட்டிருக்கிறேன். குருவும் தர்மங்களை அறிந்தவருமான உமக்கு இப்பொழுது நான் எவ்விதம் அநுமதி கொடுக்கத் துணிவேன்? குற்றமற்றவரே! துர்யோதனன்விஷயத்தில் என்னுடைய மனத்தில் ஓர் கோபமுமில்லை, அது அவ்விதம் ஆகவேண்டியதாக இருந்ததால் நாங்களும் மற்றவர்களும் மதிமயக்கமடைந்தோம். நாங்கள் உமக்குத் துர்யோதனன் முதலானவர்கள்போலப் புத்திரர்களே. காந்தாரியும் குந்தியும் என்னால் வேற்

றமையில்லாதவர்களாகக் கருதப்பட்டிருக்கின்றனர். ராஜஸ்ரேஷ்டரே! அவ்விதமான நீர் என்னை விட்டுவிட்டுச் செல்வீராஞல் நானும் உம்மு டன்கூடவே வருவேன். உண்மையாக என்மீது சபதம் செய்கிறேன். தனங்கள்நிறைந்ததும் கடல் சூழ்ந்ததுமான இந்தப்பூமியானது, உம் மைப்பிரிந்த எனக்குப் பிரீதியை உண்டுபண்ணுது. ராஜஸ்ரேஷ்டரே! இவையெல்லாம் உம்முடையனவே. நான் உம்மைத் தலைவணங்கிப் பிரார்த்திக்கிறேன். நாங்கள் உமக்கு ஸ்வாதீனர்களாக இருக்கிறோம். உம்முடைய மனத்திலுள்ள வருத்தம் விலகட்டும். பூபதியே! நீர் அவ சியம் வரவேண்டியதை அடைந்தீரென்று எண்ணுகிறேன். நான் ஸந் தோஷமாக உமக்குப் பணிவிடைசெய்து மனத்திலுள்ள தாபத்தைப் போக்குகிறேன்' என்று சொன்னுர்.

திருதராஷ்டிரன், 'குருநந்தனு! ஐய! என்னுடைய மனமானது தவம்புரிவதில் நோக்கமுள்ளதாயிருக்கிறது. பிரபுவே! நம்முடைய குலத்தில் கானகம் செல்வது வழக்கமாகவுமிருக்கிறது. புத்திரனே! நான் வெகுகாலம் (இங்கு) வாஸம் செய்தேன். நீயும் எனக்கு வெகு காலம் பணிவிடை செய்தாய். ராஜனே! (ஆகையால், இப்பொழுது) நீ எனக்கு அனுமதிகொடுக்கவேண்டும்' என்று சொன்னுன்.

அம்பிகாபுத்திரனுன திருதராஷ்டிரராஜன், நடுக்கமுள்ளவரும் அஞ்சலிசெய்துகொண்டிருப்பவருமான தர்மராஜரைப் பார்த்து இவ் விதம் சொல்லிவிட்டு, விதுரரையும் மஹாத்மாவான ஸஞ்சயனையும் மஹாரதரான கிருபரையும் நோக்கி, 'நீங்கள் இப்பொழுது பூபதியான யுதிஷ்டிரனை ஸமாதானம் செய்யவேண்டுமென்று விரும்புகிறேன். வயது மிக அதிகமாகியிருப்பதினுலும் அதிகமாகப்பேசின ஸ்ரமத்தினு லும் என்னுடைய மனம் வாடுகிறது. வாயும் உலருகிறது' என்று சொன்னுன். தர்மாத்மாவும் வயதுமுதிர்ந்தவனும் அரசனும் கௌரவ ஸ்ரேஷ்டனும் புத்திசாலியுமான அந்தத்திருதராஷ்டிரன் இவ்விதம் சொல்லிவிட்டு உயிர்போனவன்போல விரைவாகக் காந்தாரியின்மீது சாய்ந்தான். அந்தக்கௌரவன் பிரஜ்ஞையற்றவன்போல வீற்றிருப்ப தைக்கண்டு குந்தியின் புத்திரரும் பகைவர்களைக் கொல்பவருமான யுதிஷ்டிரராஜர் மிக்க மனவருத்தமடைந்தார். 'எவர் லக்ஷம் யானைக ளுக்குச்சமமான பலமுள்ளவரோ அப்படிப்பட்ட இந்த அரசர் உயிர் போனவர்போல ஸ்திரீயை ஆஸ்ரயித்துப் படுத்திருக்கிறுர். பலசாலி யான எவர் முன்இரும்பினுல்செய்த பீமஸேனனுடைய பிரதிமையைப் பொடியாகச்செய்தாரோ அவர் (இப்பொழுது) பலமில்லாத ஸ்திரீயை

ஆச்ரயித்திருக்கிறார். தர்மம் தெரியாதவனான என்னையும் என்னுடைய புத்தியையும் கல்வியையும் நிந்திக்கவேண்டும். இவ்விதம் ஆகத்தகாதவரான இவ்வரசர் என்னிமித்தம் (இவ்விதம்) படுத்திருக்கிறாரே! இந்த அரசரும் புகழ்பெற்றவளான காந்தாரியும் போஜனம் செய்யாவிட்டால் நானும் என்குருவான இவர்போல உபவாஸமிருக்கிறேன்' என்று சொன்னார். அரசரே! பிறகு, தர்மத்தை அறிந்தவரான பாண்டவர் ஜலத்தால் குளிர்ந்திருக்கும் கையினால் அவருடைய மார்பையும் முகத்தையும் மெல்லத் தடவினார். ரத்தினங்களும் ஒஷதிகளுமுள்ளதும் புண்யமானதும் நல்ல மணமுள்ளதுமான யுதிஷ்டிரராஜருடைய அந்தப் பாணிஸ்பரிசத்தால் அந்த அரசன் பிரஜ்ஞையை அடைந்தான். மறுபடியும், கையினால் தடவிக்கொண்டிருக்கும் பாண்டவரைத் தழுவிக்கொண்டு தர்மத்தை உணர்ந்தவனான திருதராஷ்டிரராஜன், சுபமான வார்த்தையைச் சொல்லலானான். 'தாமரை மலர்போன்ற கண்களுள்ளவனே! நீ அதிகமாகத் தொட்டதால் நான் ஜீவித்தேன். ராஜனே! என் பிராணனுக்கு அனுகூலமான உன்னைக் கைகளால் அணைந்து உன்னுடைய சிரஸை மோக்க விரும்புகிறேன். கௌரவஸ்ரேஷ்டனே! நான் ஆகாரம் செய்து இப்பொழுது [1]எட்டு வேளைகளாகின்றன. அதனால், நான் கைகால்களை அசைக்கவும் சக்தியற்றவனாக இருக்கிறேன். உன்னிடம் (அனுமதியை) யாசிக்கின்ற நான், இவ்வித ச்ரமத்தையும் அடைந்தேன். ஐயனே! ஆகையால், நான் மனம்வாடிப் பிரஜ்ஞையற்றவன்போலானேன். பிரபுவே! குருகுலஸ்ரேஷ்டனே! உன்னுடைய அமிருதம்போன்ற ஸுகமான ஸ்பர்சமுள்ள கையினால் தொடப்பட்டு நன்கு பிரஜ்ஞையையடைந்தேனென்று எண்ணுகிறேன்' என்று சொன்னான்.

பாரதரே! மூத்ததந்தையினால் இவ்விதம் சொல்லப்பட்டவரும் குந்தியின் புத்திரருமான யுதிஷ்டிரர் அப்பொழுது ஸ்னேகத்தால் மனமிரங்கி அவனைச் சரீரமுழுதும் தடவிக்கொடுத்தார். பிறகு, திருதராஷ்டிரராஜன், உயிரை அடைந்து தர்மபுத்திரரைக் கைகளால் கட்டிக்கொண்டு தலையில் மோந்தான். விதுரர்முதலான அவர்கள் எல்லோரும் மிக்க துயரமுற்றவர்களாகி அழுதார்கள். அதிகதுக்கத்தால் யுதிஷ்டிரராஜரை நோக்கி ஒன்றும்சொல்லவில்லை. ராஜரே! தர்மங்களை அறிந்த

---

1 ஒரு தினத்திற்கு இரண்டுவேளைப் போஜனமாகையால் 'போஜனம் செய்து நான்கு தினங்களாயின' என்பது பழையவுரை. ஆச்ரவ. 296-ம் பக்கம் குறிப்பில் காண்க.

வளான காந்தாரியோ, மிக்க துயரங்களை மனத்தில் அடக்கிவைத்துக் கொண்டு 'இப்படி செய்யவேண்டாம்' என்று மட்டும் சொன்னாள். குந்தியோடுகூடின மற்ற ஸ்திரீகளெல்லாரும் மிக்கதுயரமுள்ளவர்களும் கண்ணீர்நிரம்பிய கண்களுள்ளவர்களுமாகச் சுற்றி நின்றுகொண்டிருந் தார்கள். பிறகு, திருதராஷ்டிரன் மறுபடியும் யுதிஷ்டிரரைநோக்கி, 'ராஜனே! பரதஸ்ரேஷ்டனே! எனக்குத் தவம்புரிய அனுமதிகொடு. ஐயா! அடிக்கடி பேசுவதால் என் மனம் வாடுகிறது. புத்திரனே! என்னை இனிமேல் இதுவிஷயத்தில் நீ ஸ்ரமப்படுத்தக்கூடாது' என்ற வாக் கியத்தைச்சொன்னான். கௌரவஸ்ரேஷ்டனான அந்தத் திருதராஷ்டி ரன் அந்தப்பாண்டவனிடம் அவ்விதம்சொன்னபொழுது அந்தப்புர ஸ்திரீகளெல்லாரும் தீனமான சப்தத்தை உரக்க வெளியிட்டனர். யுதிஷ்டிரர், இளைத்தவனும் நிறம்மாறினவனும் அவ்வித நிலைமையை அடையத்தகாதவனும் உபவாஸத்தால் களைத்தவனும் தோலும் எலும்பு களும் மட்டும் நிறைந்திருப்பவனும் மகாப்பிரபுவும் அரசனுமான தமது தந்தையைப் பார்த்து (அவனை)த்தழுவிச் சோகத்தால் கண்ணீர் சொரி ந்து மீண்டும் பின்வரும் வசனத்தைச்சொல்லலானார். 'புருஷஸ்ரேஷ் டரே! பகைவரை வாட்டுபவரே! உமக்குப் பிரியத்தைச்செய்ய எனக்கு விருப்பமிருப்பதுபோல் உயிர் வாழ்க்கையிலும் பூமியிலும் எனக்கு விருப்பமில்லை. நான் உமக்கு அனுக்கிரகிக்கத் தகுந்தவனும் இஷ்டனு மாக இருந்தால், இப்பொழுது போஜனம் செய்யும். பிறகு, நான் மேலே செய்யவேண்டியதைத் தெரிந்துகொள்ளுகிறேன்' என்று சொன் னார். பிறகு, மிக்க தேஜஸுள்ள திருதராஷ்டிரன் யுதிஷ்டிரரை நோக்கி, 'புத்திரனே! உன்னால் அனுமதி கொடுக்கப்பட்டால், போஜ னம் செய்ய விரும்புவேன்' என்று சொன்னான். திருதராஷ்டிர மஹா ராஜன் இவ்விதம் சொல்லும்பொழுது, ரிஷியும் ஸத்யவதியின் புத்திர ருமான வியாஸர் வந்து யுதிஷ்டிரரைநோக்கி (பின்வரும்) வசனத்தைச் சொல்லலானார்.

ஐந்தாவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

———:o:———

(வியாஸர் திருதராஷ்டிரனுக்கு அனுமதி கொடுக்கும்படி யுதிஷ்டிரருக்குச் சொல்லிச் சென்றதும், யுதிஷ்டிரர் வருத்தத்துடன் ஸம்மதித்ததும்.)

வியாஸர், 'யுதிஷ்டிர! சிறந்தகைகளுள்ளவனே! குருகுலத்தில் பிறந்தவனும் மிக்க தேஜஸுள்ளவனுமான திருதராஷ்டிரன் எவ்விதம் சொல்லுகிறானோ அவ்விதம் ஆலோசியாமல் செய். முதுமையடைந்தவனும் அதிலும் புத்திரர்களை இழந்தவனுமான இந்த அரசன் நீண்ட காலம் இந்தக்கஷ்டத்தை ஸஹிக்கமாட்டான் என்று நான் எண்ணுகிறேன். மஹாராஜனே! பெரிய பாக்கியம்பெற்றவளும் சிறந்த அறிவுள்ளவளும் தைன்யத்தைத் தெரிவிக்கின்றவளுமான காந்தாரியும் புத்திரசோகத்தை மிக்க தைரியத்தால் பொறுக்கிறாள். நானும் இதனையே உன்னிடம் சொல்லுகிறேன். என்னுடைய வார்த்தையைச் செய். திருதராஷ்டிரராஜனுக்கு அனுமதியைச் செய். இவன் வீணாக இங்கு மரிக்க வேண்டாம். புத்திசாலியான இவன் மலர்களின் தேனினால் வாஸனையுள்ள வனங்களில் கவலையற்றவனாக இருக்கட்டும். இந்த அரசன் புராதனர்களான ராஜரிஷிகளின் கதியைப் பின்தொடரட்டும். ராஜரிஷிகளெல்லாருக்கும் முடிவில் வனத்தை அடைவது வழக்கம்' என்று சொன்னார். ஆச்சரியமான செய்கையுள்ள வியாஸரால் இவ்விதம் சொல்லப்பட்டவரும் மிக்க தேஜஸுள்ளவரும் அரசருமான அந்தத் தர்மராஜர் அப்பொழுது வியாஸமஹாமுனிவரைப் பார்த்து, 'பகவானே எங்களுக்குப் பூஜிக்கத்தக்கவர். பகவானே எங்களுக்குக் குரு. பகவானே இந்தராஜ்யத்திற்கும் குலத்திற்கும் முக்யகதி. பகவானே! நானோ புத்திரன். திருதராஷ்டிரராஜரோ எனக்குப் பிதாவும் குருவுமாக இருக்கிறார். புத்திரனான நான் தர்மப்படி பிதாவின் கட்டளைக்கு வசப்பட்டிருக்கிறேன்' என்று மறுமொழி கூறினார்.

இவ்விதம் சொல்லப்பட்டவரும் வேதங்களை அறிந்தவர்களுள் சிறந்தவரும் மிக்க தேஜஸுள்ளவரும் மஹாகவியுமான அந்த வியாஸர், மறுபடியும், அந்தயுதிஷ்டிரரை நோக்கி, 'சிறந்தபாக்கியமுள்ளவனே! பாரத! நீ சொல்லும் இது உண்மையே. இந்தஅரசன் வயதுமுதிர்ந்தவனும் சிறந்த [1]பிரமாணமுமாக இருக்கிறான். இந்தஅரசனுக்கு நான் உத்

1 நம்பத்தகுந்த உண்மையானவார்த்தையைச் சொல்பவன்.

தரவு கொடுத்துவிட்டேன். நீயும் அனுமதிகொடு. இவன் தன்னுடைய இஷ்டத்தைச்செய்யட்டும். நீ இடையூற்றைச்செய்யாதே. யுதிஷ்டிர! ராஜரிஷிகளுக்கு இதுவே மேலானதர்மம். யுத்தத்தில் மரிக்கவேண்டும்; அல்லது, வனத்தில் விதிப்படி மரிக்கவேண்டும். ராஜஶ்ரேஷ்டனே! உன்னுடையதந்தையும் பூமிக்கிறைவனுமான பாண்டுவானவன் சிஷ்யனாகஇருந்துகொண்டு இந்தமன்னனைக் குருவைப்போல உபாஸித்தான். இவன் தக்ஷிணைகளுள்ளவைகளும் மலைகள்போன்ற ரத்தினக்குவியல்களால் விளங்கும்படி செய்யப்பட்டவைகளுமான மஹாயாகங்களைச் செய்தான்; பூமியை அனுபவித்தான்; பிரஜைகளையும் பரிபாலித்தான்; நீ கானகம்சென்றிருந்தபொழுது, புத்திரனிடத்தில் நிலைபெற்றிருக்கும் விசாலமான ராஜ்யத்தைப் பதின்மூன்றுவருஷம் அனுபவித்தான்; பலவிதமான தனத்தையும் தானம்செய்தான். புருஷஶ்ரேஷ்டனே! குற்றமற்றவனே! நீயும் வேலைக்காரர்களுடன்கூடினவனாக இவனையும் புகழ்பெற்றகாந்தாரியையும் ஆராதித்தாய். யுதிஷ்டிர! தந்தைக்கு அனுமதிகொடு. இவனுக்குத் தவம்புரிய(இதுதான்)ஸமயம். இவனுக்குக் கொஞ்சமேனும் கோபமில்லை' என்று சொன்னார். வியாஸர், இவ்வளவுவார்த்தையைச்சொல்லி யுதிஷ்டிரராஜரை ஸமாதானப்படுத்திக் குந்தியின் மைந்தரான அவரால் 'அப்படியேஆகட்டும்' என்று சொல்லப்பட்டுக் கானகம் சென்றார். வியாஸபகவான் சென்றவுடன், பாண்டுபுத்திரரான யுதிஷ்டிரராஜர் அப்பொழுது பிராயம்முதிர்ந்தவனான தந்தையைநோக்கி வணக்கத்துடன் மிக்கமிருதுவான வாக்கியத்தைச் சொல்லலானார். 'வியாஸபகவான் எதைச்சொல்லுகிறாரோ உமக்கு எது இஷ்டமோ மகாவில்லாளியான கிருபரும் விதுரரும் யுயுத்ஸுவும் ஸஞ்சயனும் எவ்விதம்சொல்லுகிறார்களோ அதை அவ்விதமே நான் சீக்கிரமாகச் செய்கிறேன். (இவர்கள்)எல்லாருமே எனக்குப் பூஜிக்கத்தக்கவர்களும் குலத்திற்கு நன்மையைவிரும்புகின்றவர்களுமாக இருப்பவர்களல்லரோ? ராஜரே! நான் உம்மைத் தலையால்வணங்கி இதொன்றைமட்டும் யாசிக்கிறேன். இப்பொழுது போஜனஞ்செய்யும். பிறகு, ஆஶ்ரமத்தைக் குறித்துச் செல்லும்' என்று சொன்னார்.

ஆறுவது அத்யாயம்.

ஆஶ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

———:o:———

(திருதராஷ்டிரன் யுதிஷ்டிரநுக்கு ராஜநீதியை உபதேசித்தது.)

பிறகு, யுதிஷ்டிரராஜரால் அனுமதிகொடுக்கப்பட்டவனும் உறுதியான சித்தமுள்ளவனும் மெலிந்த பிராணன்களுடைய ஸஞ்சாரமுள்ளவனும் புத்திசாலியும் பூபாலனுமான அந்தத் திருதராஷ்டிரராஜன் அப்பொழுது காந்தாரியினால் பின்தொடரப்பட்டு, கிழத்தனத்தை அடைந்த கஜபதிபோல ஶ்ரமப்பட்டு அடிவைப்புக்களைச்செய்துகொண்டு தன்வீடு சென்றான். அவனை வித்வானன விதுரரும் ஸூதனன ஸஞ்சயனும் பெரியவில்லாளியும் சாரத்வதருமான அந்தக்கிருபரும் பின்தொடர்ந்து சென்றார்கள். அந்தஅரசன் வீடுசென்று காலைக்கடன்களைமுடித்துப் பிராம்மணஶ்ரேஷ்டர்களுக்குத் திருப்திசெய்வித்துப் பிறகு போஜனம் செய்தான். பாரதரே! தர்மங்களை அறிந்தவளும் உறுதியானசித்தமுள்ளவளுமான காந்தாரியும் மருகிகளால் உபசாரத்துடன் பூஜிக்கப்பட்டுக் குந்தியுடன் போஜனம் செய்தாள். விதுரர்முதலான அவர்களெல்லாரும் பாண்டவர்களும் போஜனம்செய்துவிட்டு, போஜனம்செய்தவனும் கௌரவஶ்ரேஷ்டனுமான அந்தஅரசனுக்கு அருகில்வந்து உட்கார்ந்தார்கள். பிறகு, அம்பிகாபுத்திரனன திருதராஷ்டிரமஹாராஜன், அருகில் உட்கார்ந்திருக்கும் குந்திபுத்திரரான யுதிஷ்டிரரை முதுகில் தடவிக்கொடுத்து (பின்வருமாறு)சொல்லலானன்.

'குருநந்தன! ராஜஶ்ரேஷ்டனே! [1]எட்டுஅங்கங்களுள்ளதும் தர்மத்தை முதன்மையாகக்கொண்டதுமான ராஜ்யத்தில் நீ எவ்விதத்திலும் தவறுதலுள்ளவனுகக்கூடாது. மஹாராஜனே! பாண்டுநந்தன! அந்த ராஜ்யத்தைத் தர்மத்தால் ரக்ஷிக்கக்கூடும். குந்தியின்புத்திரனே! நீ வித்வானுகையால் அதைத்தெரிந்துகொள். யுதிஷ்டிர! நீ எப்பொழுதும் கற்றறிந்தபெரியோர்களை உபாஸிக்கவேண்டும். அவர்கள்சொல்வதைக் கேட்கவேண்டும். அதை ஆலோசியாமல் செய்யவேண்டும். ராஜனே! விடியற்காலையில் எழுந்திருந்து அவர்களை விதிப்படி பூஜித்துக் காரியத்திற்குரிய காலம் வந்தபொழுது உன்னுடைய காரியத்தைப்பற்றி வினவ

---

1 தலைவன், அமைச்சன், தேசம், கோட்டை, பொக்கசம், துணைவர், படை, நகரவரிசைஆகிய எட்டும் என்பது. ஸபாபர்வம் 20-ம் பக்கம் குறிப்பிலும் காண்க.

வேண்டும். ராஜனே! ஐயா! பாரத! அவர்கள் உலகத்திற்கு நன்மையை விரும்பும் உன்னால் நன்கு பூஜிக்கப்பட்டால், எல்லாவிதத்தாலும் உனக்கு நன்மையைச் சொல்லுவார்கள். எல்லா இந்திரியங்களேயும் குதிரைகளைப்போலக் காப்பாற்று. அவைகள் ரக்ஷிக்கப்பட்ட தனம்போல நன்மையின்பொருட்டே ஆகும். பரீக்ஷிக்கப்பட்டவர்களும் தகப்பன்பாட்டன்பரம்பரையாக வந்தவர்களும் சுத்தர்களும் மனவடக்கமுள்ளவர்களும் எல்லாக்காரியங்களிலும் முக்கியர்களுமான மந்திரிகளை முக்கியமான கார்யங்களில் ஏவுவாயாக. பிறர்களால் அறியப்படாமலிருந்துகொண்டு பரீக்ஷிக்கப்பட்டவர்களும் பலவிதமாக இருப்பவர்களுமான சாரர்களை எப்பொழுதும் உன்தேசங்களிலும் வேறுதேசங்களிலும் ஸஞ்சரிக்கும்படி செய். உறுதியான பிராகாரங்களும் வெளிவாயில்களுமுள்ளதும் [1]அட்டங்களாலும் [2]அட்டாலகங்களாலும் நிறைந்ததும் [3]ஆறுஸ்தானங்களுள்ளதுமான பட்டணமானது உன்னால் எல்லாத்திசைகளிலும் ரக்ஷிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். அந்தப்பட்டணத்திற்குப் போதுமானவைகளும் பெரியவைகளுமான எல்லாவாயில்களும் எங்கும் நன்கு அமைக்கப்பட்டவைகளும் யந்திரங்களால் எங்கும் ரக்ஷிக்கப்பட்டவைகளுமாக இருக்கவேண்டும். குலமும் சீலமும் அறியப்பட்ட மனிதர்களால் உனக்கு வேண்டியகாரியத்தைச் செய்துகொள். பாரத! போஜன முதலானவைகளிலும் ஸஞ்சாரகாலங்களிலும் போஜனகாலங்களிலும் மாலைகளிலும் படுக்கைகளிலும் ஆஸனங்களிலும் எப்பொழுதும் உன்னை ரக்ஷித்துக்கொள்ளவேண்டும். யுதிஷ்டிர! உன்னுடைய ஸ்திரீகளும், வயதுமுதிர்ந்தவர்களும் ஆப்தர்களும் நல்லொழுக்கமுள்ளவர்களும் நற்குலத்தில் பிறந்தவர்களுமான பண்டிதர்களால் பரிபாலித்து நன்குரக்ஷிக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும். வித்தைகளில் தேர்ச்சிபெற்றவர்களும் வணக்கமுள்ளவர்களும் குலீனர்களும் தர்மத்திலும் அர்த்தத்திலும் ஸமர்த்தர்களும் நேர்மையுள்ளவர்களுமான பிராம்மணர்களை மந்திரிகளாகச் செய்துகொள். நீ, சேர்ந்திருப்பவர்களும் தனித்திருப்பவர்களும் அநேகர்களுமான அவர்களுடன் ஓர் முக்கியமான காரியத்தைக்குறித்துச் சிறிது ஆலோசிக்கவேண்டும். நன்குமறைக்கப்பட்ட

1 துர்க்கத்திற்குமேற்பிரதேசத்திலுள்ள ஸஞ்சரிக்கத்தக்கஇடங்கள் என்பது பழையஉரை. 2 மேல்மெத்தைவீடுகள்.

3 'ஷட்பதம்' என்பது மூலம்; 'எவரும்வரக்கூடிய ஆறிடங்களுள்ளதென்றதால் ஏழுமதில்களுள்ளனவென்பதும் இவற்றில் ஏழாவதுமதிலினுள் அந்தப்புரமிருத்தலால் எவரும் செல்லலாகாதென்பதும்' பழையஉரையின் கருத்து.

மந்திரகிரஹத்திலுள்ள இடத்தில் ஏறியாவது த்ருணங்களுமில்லாத வனத்திலாவது ஆலோசனைசெய். எவ்விதத்திலும் இரவில் ஆலோசனை செய்யாதே. மந்திரகிருஹத்தில், மனிதர் சொல்லியதைச் சொல்லும் வானரங்கள் பறவைகள் மூடர்கள் நொண்டிகள் (இவர்கள்) எல்லாரையும் விலக்கவேண்டும். ஆலோசனை வெளிப்பட்டால் அரசர்களுக்கு உண்டாகும் குற்றங்களை எவ்விதத்திலும் அடக்கமுடியாதென்பது என்னுடைய எண்ணம். ராஜனே! பகைவரை அடக்குபவனே! நீ மந்திரிகளின்கூட்டத்தில் மந்திரம் வெளிப்படுவதிலுள்ள குற்றங்களையும் வெளிப்படாமலிருப்பதிலுள்ள குணங்களையும் அடிக்கடி சொல்லவேண்டும். யுதிஷ்டிர ராஜனே! கௌரவச்ரேஷ்டனே! நகரத்திலும் கிராமத்திலுமுள்ளவர்களுடைய சுத்தியும் அசுத்தியும் எவ்விதம் அறியப்படுமோ அவ்விதம் செய்யவேண்டும். ராஜனே! உன்னுடைய (ராஜ்ய) வியவஹாரத்தை எப்பொழுதும் ஆப்தர்கள் பரிபாலிக்கவேண்டும். ராஜனே! அதை ஸந்தோஷமுள்ளவர்களும் ஹிதர்களுமான சாரர்கள் எப்பொழுதும் அனுஷ்டித்து உபயோகப்படுத்தவேண்டும். பாரத! யுதிஷ்டிர! உன்னுடைய அதிகாரிகள் குற்றம் தண்டனை இவற்றினுடைய அளவை அறிந்து தண்டிக்கத்தக்கவர்களுக்குத் தண்டனையை விதிக்கவேண்டும். பரிதானம் வாங்குவதில் பிரியமுள்ளவர்களும் பிறருடைய மனைவியை அடைபவர்களும் கடுமையான சிக்ஷையை முக்கியமாகக்கொண்டவர்களும் பொய்யாக நியாயம்சொல்லுகிறவர்களும் வைபவர்களும் பேராசையுள்ளவர்களும் திருடுகிறவர்களும் பிடிவாதகாரியத்தில் பிரியமுள்ளவர்களும் ஸபைகூடுவதைக் கலைப்பவர்களும் வர்ணங்களைக் கெடுப்பவர்களும், தேசத்தையும் காலத்தையும் அனுஸரித்து ஸுவர்ணம் அபராதம்விதிக்கப்படவும் கொலைசெய்யப்படவும் தக்கவர்கள். அந்தப்புரப்ரதேசத்தில் வேலைக்காரர்களுடன் பானம் செய்யக்கூடாது. அவர்கள் மதம்பிடித்து வைவார்கள்; மனைவியையும் பிடிப்பார்கள். மறைந்திருந்து ஆயுதத்தால் கொல்லவும் விரும்புவார்கள்; மதம்பிடித்துக் கூத்தாடுவார்கள்; பலவித நிந்தைகளைச் சொல்லுவார்கள்; சேரத்தக்கதையும் சேரத்தகாததையும் அறியமாட்டார்கள்; அரசனும் அதிகமாகப் பானம் செய்தால் எல்லாப் பொக்கசத்தையும் அழித்துவிடுவான்; பாடகர்களுக்கு வீணைகத் தனக்குவியலையும் கொடுப்பான்; தனக்கு நிந்தையையும் தோஷங்களையும் அடைவான்; ஆகையால், மிக்க பராக்ரமம் விருத்தியடைவதற்காகப் பத்தினியுடன் தனித்துப் பானம்செய்யவேண்டும். (ஆனாலும்) அதுவும் குறிப்பினால்

வெளிப்பட்டுவிடுகிறது. உனக்குப் பிரியமான காரியத்தைச் செய்பவர்களை விடியற்காலையிலேயே பார். பிறகு, அலங்காரத்தையும் அதற்கு மேல் ஆகாரத்தையும் செய்துகொள். பிறகு, நீ எப்பொழுதும் யுத்த வீரர்களை ஸந்தோஷப்படுத்திக்கொண்டு பார்க்கவேண்டும். எப்பொழுதும் தூதர்களையும் சாரர்களையும் ஸாயங்காலத்தில் பார்க்கவேண்டும். எப்பொழுதும் பின் இரவில் காரியங்களுடைய விஷயத்தை நிச்சயிக்கவேண்டும். எப்பொழுதும் நீ நடுநிசியிலும் மத்தியான்ன காலத்திலும் விளையாட்டாயிருக்கவேண்டும். பரதஸ்ரேஷ்டனே! எல்லாக்காலங்களும் காரியங்களுக்கு யோக்கியமானவைகள். அவ்வாறே, தகுந்த காலத்தில் நீ அலங்காரம்செய்துகொண்டு மிகுதியாகத் தக்ஷிணை கொடுப்பவனாக நிற்கவேண்டும். ஆபரணத்தைக் கழற்றிவிட்டும் (வேண்டாமென்று) விலக்கிவிட்டும் இருக்கக்கூடாது. எப்பொழுதுமே இவ்வுலகில் மங்களகரமானதும் பாவத்தைப்போக்குவதுமான வஸ்துவை உபயோகித்துக்கொள்ளவேண்டும். ஐயனே! காரியங்கள் எப்பொழுதும் உருளைபோல மாறிமாறிக் காணப்படுகின்றன. நீ எப்பொழுதும் நியாயமாகப் பொக்கசத்தைச் சேர்ப்பதில் முயற்சிசெய். மஹாராஜனே! விபரீதமான பலவித காரியத்தையும் விட்டுவிடு. ராஜனே! அரசர்களுக்குக் கெடுதிசெய்யக்கூடிய ஸமயத்தை எதிர்பார்க்கும் பகைவர்களைச் சாரர்களால் அறிந்து அவர்களை ஆப்தர்களான மனிதர்களைக்கொண்டு தூரத்திலேயே கொல்விப்பாயாக. கௌரவஸ்ரேஷ்டனே! மேலும், நீ வேலைக்காரர்களைச் செய்கையைப்பார்த்து சேர்த்துக்கொள். காரியத்தையும் அகாரியத்தையும் அறிந்த வேலைக்காரர்களைக்கொண்டு காரியங்களைச் செய்துகொள். ஐயனே! உறுதியான விரதமுள்ளவனும் சூரனும் கஷ்டத்தை ஸகிப்பவனும் நன்மையைச் செய்பவனும் பக்தியுள்ளவனுமான மனிதன் உனக்குப் படைத்தலைவனாக இருக்கட்டும். பாண்டவ! தேசத்திலுள்ள தொழிலாளிகளான எல்லாரும் காளைபோலவும் கழுதைபோலவும் (போஷிக்கப்பட்டால்) உன்னுடைய காரியங்களைச் செய்வார்கள். யுதிஷ்டிர! நீ எப்பொழுதுமே உன்னைச் சேர்ந்தவர்களிடத்திலும் பிறர்களிடத்திலும் உன்னுடைய ரந்திரத்தையும் பிறருடைய ரந்திரத்தையும் உற்றுப்பார்க்கவேண்டும். தம் கார்யங்களில் சூரர்களும் ஹிதர்களுமான தேசத்திலுள்ள மனிதர்களையும் நீ தகுந்த போஷணைகளைச் செய்து அனுக்ரஹிக்கவேண்டும். ராஜனே! அறிஞனானவன் (தனக்கு) நன்மையைவிரும்புகிறவர்களுக்கு நன்மையைச் செய்யவேண்டும். உனக்கு அவர்கள் எப்பொழுதும் மலைகள்போல ஆராயத்தகாதவர்களாயிருப்பார்கள்.

ஏழாவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி).

—:o:—

(திருதராஷ்டிரன்உபதேசத்தொடர்ச்சி.)

பாரத! உன்னைச்சேர்ந்தவையும் பகைவரைச்சேர்ந்தவையும் உதாஸீனகுணமுள்ளவர்களைச் சேர்ந்தவையும் மத்யஸ்தர்களைச் சேர்ந்தவையுமான மண்டலங்களைத் தெரிந்துகொள். பகைவரைத்துன்பப் படுத்துபவனே! நீ [1]நான்குவகைச்சத்ருபக்ஷத்தார்களையும் [2]எல்லா ஆததாயிகளையும் மித்ரனையும் உதாஸீனனுடையமித்ரனையும் தெரிந்து கொள்ளவேண்டும். கௌரவஸ்ரேஷ்டனே! மேலும், பலவிததேசங் களும் பலவிததுர்க்கங்களும் சேனைகளும் பகைவரால் கெடுக்கப்படாமல் இருக்கவேண்டும். குந்தியின்குமாரனே! அந்தப் [3]பன்னிரண்டு அரசர்களும் பலவித ஸ்வரூபமுள்ளவர்களாக இருப்பார்கள். ப்ரபுவே! மந்திரிமுதலான அங்கங்கள் அறுபது, (அரசர்கள்) பன்னிரண்டு ஆகியஇவற்றை மண்டலமென்று நீதிசாஸ்திரமறிந்த ஆசார்யர்கள் சொல்லுகின்றனர். யுதிஷ்டிர! இதில் [5]ஆறுகுணங்களும் வசப்பட்டிருக்கின்றன. அதைத்தெரிந்துகொள். கௌரவஸ்ரேஷ்டனே! வ்ருத்தியும் க்ஷயமும் ஸ்தானமும் [6]எழுபத்திரண்டுகளிலும் இருப்பனவாகத் தெரிந்து கொள்ளத்தக்கவைகள். அவற்றிலிருந்து ஆறுகுணங்களாலாகிய குணங்கள்உண்டாகின்றன. குந்தியின் புத்திரனே! எப்பொழுது தன்பக்ஷம் பலமுள்ளதாகவும் பகைவருடைய பக்ஷம் பலமற்றதாகவும் இருக்கின்

1 பகைவன், பகைவனுக்குத்துணைவன், இரண்டு பக்கத்துக்கும் வெற்றியை விரும்புகிறவன், இரண்டு பக்கத்துக்கும் தோல்வியை விரும்புகிறவன்.

2 விராடபர்வம் 175-ம் பக்கம் குறிப்பிலும், சல்யபர்வம் 87-ம் பக்கம் குறிப்பிலும் பார்க்க.

3 சத்ருவும் அவனுக்கு மித்ரனும் இருவருக்கும்வெற்றியை விரும்புகிறவனும் இருவருக்கும் தோல்வியை விரும்புகிறவனும் ஆததாயிகள் அறுவரும் மித்ரனும் உதாஸீனனுக்கு மித்ரனும் ஆகப் பன்னிருவர்.

4 சேர்க்கக்கூடிய கிருஷிமுதலிய எட்டும் சேர்க்கக்கூடாத பாலர் முதலிய இருபதும் நாஸ்திக்யமுதலிய தோஷங்கள் பதினான்கும் மந்திரமுதலிய உபாயங்கள் பதினெட்டும் ஆக அறுபது என்பது பழையவுரை.

5. ஸபாபர்வம் 15-ம் பக்கம் குறிப்பிற்காண்க.

6 அறுபத்துநான்கு கலைகள், ஸாமமுதலான நான்கு உபாயங்கள், நால்வகைச் சேனைகள் ஆக எழுபத்திரண்டு என்பது லக்ஷாபரண வ்யாக்யானம்; 64 கலைகளின் பெயர்கள் ஸ்ரீபாகவதம் தசமஸ்கந்தம் 45-வது அத்யாயம் 36 வது ஸ்லோகம் ஸ்ரீதரவ்யாக்யானத்தில் காண்க.

றனவோ அப்பொழுது அரசன் பகைவர்களைச் சண்டைக்கு எதிர்த்துச் செல்லவேண்டும். எப்பொழுது பகைவர்கள் பலிஷ்டர்களும் தன்னைச் சேர்ந்தவர்கள் பலம் குறைந்தவர்களுமாயிருக்கின்றனரோ அப்பொழுது பலம் குறைந்திருப்பவன் அதை அறிந்து பகைவர்களுடன் ஸந்தியைச் செய்துகொள்ளவேண்டும். திரவியங்களையும் மிக அதிகமாகச் சேர்த்து வைத்துக்கொள்ளவேண்டும். பாரத! எப்பொழுது சீக்கிரமாக யுத்தத்திற்குச் செல்லத் திறமையுள்ளவனாக இருக்கிறானோ அப்பொழுது அவன் (தன்னிடத்தில்) இருக்கும்பொழுதே எல்லாவற்றையும் ஸித்தம் செய்துகொள்ளவேண்டும். தானும் பகைவனும் ஸமமாக இருந்தால் (சண்டையைப்பற்றி) ஆலோசிக்கவேண்டும். சத்துருவுக்கு அற்பமான பயனைத் தரத்தகுந்த பூமியைக் கொடுக்கவேண்டும். ஸந்திசெய்வதில் தேர்ச்சிபெற்றவன் தான் ஸுவர்ணமும் வெள்ளியும் நிறைந்திருக்கும் சத்துருவின் மித்திரனைப் பலம் குறைந்தவனும் பொக்கசமற்றவனுமாகச் செய்து பிடித்துக்கொள்ளவேண்டும். பரதர்களில் சிறந்தவனே! புத்திர! ஸந்திசெய்துகொள்வதற்காக (சத்துருவான) அரசனுடைய குமாரனையாவது பிடித்துக்கொள்ளவேண்டும். ஓர் ஆபத்து நேர்ந்தகாலத்தில் அவனை விட்டுவிடுவது நன்மையன்று. ராஜேந்திர! உபாயத்தையும் ஆலோசனையையும் அறிந்தவனான நீ அந்த ஆபத்தினின்று விடுவித்துக் கொள்ள முயற்சியைச் செய். அரசனானவன் பிரஜைகளுள் தீனர்களைப் பூஜிக்கவேண்டும். தான் தன்னுடைய ராஜ்யத்தை ரக்ஷித்துக்கொண்டு கிரமமாகவாவது ஒரே ஸமயத்திலாவது [1]வியஸனங்களுடைய பலாபலங்களை அறிந்து முயற்சியுடன் சத்துருக்களுக்குத் துன்பத்தையாவது அடக்குதலையாவது பொக்கசத்தின் நாசத்தையாவது செய்யவேண்டும். க்ஷேமத்தை விரும்புகிறவன் தன்னிடம் வந்த அடுத்ததேசத்தரசனை வருத்தக் கூடாது. குந்தியின்புத்திரனே! அது பூமியை ஜயிக்கவிருப்பமுள்ள உனக்கு நன்மையாகும். நீ (அவனுடைய) குணங்களை மாற்றுவதில் மந்திரிகளுடன்சேர்ந்து யுக்தியைச்செய்ய விரும்பு. மிக்கபலமுள்ளவன் நல்லோரைச் சேர்த்துக்கொள்வதிலும் தீயோரை விலக்குவதிலும் எப்பொழுதும் வீட்டில் பரிபாலனங்களைத் தன்வசப்படுத்திக்கொள்வதிலும் முயற்சிசெய்யவேண்டும். ஒருபொழுதும் பலஹீனர்களைத் தேடக் கூடாது. ராஜஶ்ரேஷ்டனே! பலிஷ்டனான அரசன் துர்ப்பலனான உன்னை எதிர்த்துவந்தால், [2]வேநொச்சியின் செய்கையைப் பின்பற்றிநில்.

1. சாந்திபர்வம் 181-ம் பக்கம் குறிப்பில் காண்க.
2 சாந்திபர்வம் 113-ம் அத்யாயம் பார்க்க.

அவனைக் கிரமமாக ஸாமம்முதலான உபாயங்களால் விலக்குவாயாக. முடியாவிட்டால் மந்திரிகளுடன்சேர்ந்து யுத்தத்திற்குப்போகவேண்டும். பொக்கசத்தினாலும் தனக்குப்பிரியத்தைச் செய்யும்பட்டணத்தார்களைக் கொண்டு யுத்தத்தினாலும் (பகைவனை விலக்கவேண்டும்). எல்லாஉபாயங்களும் பயன்படாவிட்டால் முக்யமான தானே(யுத்தத்திற்குப்)போகவேண்டும். இம்முறையால் சரீரத்திற்குமட்டும் விடுதல் ஏற்படும்.

எட்டாவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

———:0:———

(த்ருதராஷ்டிரன்உபதேசத்தொடர்ச்சி.)

ராஜஶ்ரேஷ்டனே! யுதிஷ்டிர! நீ இப்பொழுது (பலிஷ்டன் துர்ப்பலனென்று) இரண்டுகாரணங்களுள்ளனவும் பலவிதஉபாயங்களுள்ளனவும் அநேகவிதங்களுமான ஸந்திவிக்ரஹங்களையும் தெரிந்துகொள். கௌரவ்ய! நீ உறுதியுள்ளவனாகஇருந்துகொண்டு உன்னுடைய பலாபலங்களைத் தெரிந்துகொள். ஸந்தோஷமும் புஷ்டியுமுள்ள ஜனங்களுள்ள சத்ருவைப் பொருளுள்ளவனென்று நினைக்கவேண்டும். அவ்விதமில்லாத சத்துருவைக்குறித்து எதிர்த்துச்செல்லவேண்டுமென்று விதிக்கப்படுகிறது. (பகைவன்) துன்பப்படும் காலத்தில் முயற்சிசெய்வது அதினும்சிறந்தது. சத்துருக்களுக்கு வியஸனத்தையும் பேதப்படுத்துவதையும் ஹிம்ஸையையும் பயத்தையும் யுத்தத்தில் பலவிதக்குறைவையும் அப்பொழுது செய்விக்கவேண்டும். யுத்தத்திற்குச் செல்லுகின்றவனும் சாஸ்திரங்களில் தேர்ச்சிபெற்றவனுமான அரசன் தனக்கும்பகைவனுக்குமுள்ள மூன்றுவிதமான சக்தியைஆலோசிக்கவேண்டும். பாரத! [1]உத்ஸாஹசக்தி பிரபுசக்தி மந்திரசக்தி இவைகளுடன்கூடின அரசன்(யுத்தத்திற்குச்)செல்லவேண்டும். இவைகள் இல்லாவிடில் யுத்தத்தைவிலக்கவேண்டும். பிரபுவே! ராஜனே! நியாயமாகச் செல்வமும் க்ஷேமமும் உறுதியாகவுள்ள அரசன் மூலபலத்தையும் மித்திரனுடைய சேனையையும் காட்டிலுள்ளசேனையையும் கூலிப்படையையும் ஶ்ரேணியிலுள்ள சேனையையும் [2]மித்திரனுக்கு மித்திரனுடைய சேனையையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். ராஜனே! அவைகளுள், மித்ரனுடைய

---

1 உத்ஸாஹசக்தி=மனோவேகம்; பிரபுசக்தி=தனமுதலியன; மந்த்ரசக்தி=ஆலோசனை. 2 'மித்ர மித்ர' என்று மாற்றப்பட்டது.

சேனையும் மூலபலமும் மேன்மையுள்ளவை. ஶ்ரேணியிலுள்ள சேனையும் சம்பளத்திற்கு இருக்கும் ஸேனையும் ஸமமானவை என்பது என்னுடைய எண்ணம். ராஜனே! அவ்வாறே, சாரர்களும் ஸேனையும் பரஸ்பரம் ஸமமானவர்கள் என்று அரசன் ஸமயம் வந்து ஸேனைகளைக் கணக்கிடும்பொழுது தெரிந்துகொள்ளவேண்டும். ராஜனே! கௌரவ்ய! அரசன், நேரிடக்கூடிய அனேகவித ஆபத்துக்களையும் தெரிந்துகொள்ளவேண்டும். அவைகளைத்தனித்தனியாகக் கேள். ராஜனே! பாண்டுகுமாரனே! ஆபத்துக்களுடையவகைகள் அனேக விதமானவை. அரசன் எப்பொழுதும் அவைகளை ஸாமமுதலான உபாயங்களால் வெளிப்படுத்தி விலக்கவேண்டும். பகைவரை வாட்டுபவனே! அரசன் ஆறுவித சேனைகளோடுகூடினவனும் தேசகாலங்களோடும் தனக்குத்தகுந்த (உதவி) ஸேனைகளோடும்கூடினவனுமாக (யுத்த) யாத்திரை செல்லவேண்டும். க்ஷேமம் அடைவதில் ஆசையுள்ள அரசன் ஸந்தோஷமும் புஷ்டியுமுள்ள ஸேனையோடுகூடிச் செல்லவேண்டும். குறைவில்லாதவனாக இருப்பவன் தகாத ருதுவிலும் செல்லலாம். அம்புப்பெட்டிகளாகிற கற்களுள்ளதும் குதிரைகளும் தேர்களுமாகிற பிரவாகமுள்ளதும் த்வஜங்களாகிற மரங்களால் சூழப்பட்ட கரைகளுள்ளதும் காலாட்களாலும் யானைகளாலும் மிக்க சேறுள்ளதுமான சேனையாகிற நதியை அரசன் பகைவனுடைய நாசத்திற்காக ஏவவேண்டும். பாரத! பிரபுவே! மேலும், தகுந்தவைகளான சகடம் பத்மம் வஜ்ரம் என்னும் இந்தவியூகங்கள் சுக்ராசாரியர் இயற்றிய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. பிறனுடைய பலத்தை ஸஞ்சரிக்கும்படிசெய்து தன்னுடைய படையைக் காண்பித்துத் தன்னுடைய பூமியில் யுத்தம் செய்யவேண்டும். பிறனுடைய பூமியிலும் யுத்தம் செய்யவேண்டும். அரசன் சேனைக்கு நன்மொழி கூறவேண்டும். (அதில்) பலசாலிகளான மனிதர்களை இருக்கச்செய்யவேண்டும். அதில் தான்செய்யவேண்டிய விஷயத்தை அறிந்து ஸாமமுதலான உபாயங்களால் தொடங்கவேண்டும். மஹாராஜனே! எல்லாவிதத்தாலும் இவ்வுலகில் சரீரத்தைத் தரித்துக்கொண்டிருந்து இவ்வுலகிலும் இறந்தபின்னும் தனக்கு மேலானக்ஷேமத்தைச் செய்துகொள்ளவேண்டும். ராஜனே! பிரஜைகளைத் தர்மமாகப் பரிபாலித்துக்கொண்டு இவ்விதம் செய்யும் அரசன் இவ்வுலகில் நல்ல வார்த்தைகளைக் கேட்பான்; இறந்தபின்னும் ஸ்வர்க்கத்தை அடைவான். கௌரவஶ்ரேஷ்டனே! ஐயனே! நீ இரண்டு உலகங்களையும் அடைவதற்காக எப்பொழுதும் பிரஜைகளிடம்

இவ்விதம் இரு. ராஜஸ்ரேஷ்டனே! பீஷ்மரும் கிருஷ்ணனும் விதுரரும் உனக்கு எல்லாவற்றையும் சொல்லியிருக்கின்றனர். ஆனாலும், நானும் உனக்குப் பிரீதியினால் சொல்லவேண்டியது அவஸ்யமே. மிகுதியான தக்ஷிணையைக் கொடுப்பவனே! நீ இவற்றையெல்லாம் நீதிதவறாமல் செய். அவ்விதம் செய்தால் நீ பிரஜைகளுக்குப் பிரியனாகி ஸ்வர்க்கத்தில் ஸுகத்தை அடைவாய். ஆயிரம் அஸ்வமேதங்களைச் செய்யும் அரசனும் பிரஜைகளைத் தர்மமாகப் பரிபாலிக்கும் அரசனும் ஸமமான பயனை அடைவார்கள்' என்று சொன்னான்.

ஒன்பதாவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

—:o:—

(திருதராஷ்டிரன் நகரஜனங்களை அழைப்பித்து வனஞ்செல்ல அனுமதி கேட்டது.)

யுதிஷ்டிரர், 'அரசரே! ராஜஸ்ரேஷ்டரே! நீர் சொல்லியவண்ணம் இதைச்செய்கிறேன். நீர் இன்னமும் எனக்குப் புத்திசொல்லவேண்டும். பீஷ்மர் ஸ்வர்க்கத்தையடைந்து வாஸுதேவரும் விதுரரும் ஸஞ்சயரும் (வேறிடம்) சென்றிருக்கும்பொழுது, வேறுயார் எனக்குச் சொல்லத்தக்கவர்? பூபாலரே! நன்மையைச்செய்வதில் நிலைபெற்றிருக்கும் நீர் இப்பொழுது இதுவிஷயத்தில் எனக்கு எதை உபதேசித்தீரோ அதை நான் செய்கிறேன். ராஜரே! கவலையற்றிரும்' என்று சொன்னார். பரதஸ்ரேஷ்டரே! புத்திசாலியான தர்மராஜரால் இவ்விதம் சொல்லப்பட்ட ராஜரிஷியான அந்தத் திருதராஷ்டிரராஜன் குந்தியின் புத்திரரிடம் அனுமதிபெற விரும்பி, 'புத்திரனே! களைப்பாறு. எனக்கும் ஸ்ரமம் அதிகமாக இருக்கிறது' என்று சொல்லிவிட்டு, அப்பொழுது காந்தாரீயினுடைய வீட்டுக்குச் சென்றான். தர்மங்களை அனுஷ்டிப்பவளும் காலத்தை அறிந்தவளுமான காந்தாரிதேவியானவள், அக்காலத்தில் ஆஸனத்தில் வீற்றிருப்பவனும் பிரம்மாவுக்கு ஒப்பானவனுமான அந்தப் பர்த்தாவைநோக்கி, 'அந்த வியாஸமஹரிஷியானவர் உமக்கு நேரில் அனுமதி கொடுத்துவிட்டார். யுதிஷ்டிரனிடம் அனுமதி பெற்றுக்கொண்டு எப்பொழுது கானகம் செல்லப்போகிறீர்?' என்று வினவினாள். திருதராஷ்டிரன், 'காந்தாரி! தந்தையும் மஹாத்மாவுமான வியாஸர் எனக்கு நேரில் அனுமதி கொடுத்துவிட்டார். யுதிஷ்டிரனிடம்

அநுமதிபெற்றுக்கொண்டு சீக்கிரம் செல்லப்போகிறேன். நானே இப்பொழுது என்னுடைய வீட்டில் எல்லாஜனங்களையும் வருவித்து எதிரில் வைத்துக்கொண்டு, கொடியசூதாட்டத்தைச் செய்தவர்களான அந்தப்புத்திரர்களெல்லாருக்கும் பரலோகத்திற்குரிய திரவியத்தைத் தானம் செய்யவிரும்புகிறேன்' என்று சொன்னான். திருதராஷ்டிரன் அப்பொழுது தர்மராஜருக்கு இவ்விதம் சொல்லியனுப்பினான். அந்த யுதிஷ்டிரராஜரும் அவனுடைய உத்தரவின்படி எல்லாரையும் வருவித்தார். பிறகு, ஆழ்ந்தகருத்துள்ளவர்களான குருஜாங்கலதேசத்திலுள்ள பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் வைஸ்யர்களும் சூத்திரர்களும் வந்தார்கள். யுதிஷ்டிரராஜர் அப்பொழுது அந்த அந்தப்புரத்திலிருந்து வெளிப்பட்டு அந்த எல்லாஜனங்களையும் எல்லாமந்திரிகளையும் பார்த்தார். பூபாலரே! சிறந்த புத்தியுள்ளவனும் அம்பிகாபுத்திரனுமான திருதராஷ்டிரராஜன், ஒன்றுசேர்ந்து வந்திருக்கும் அந்தப்பட்டணத்து ஜனங்கள் கிராமத்துஜனங்கள் ஸுஹ்ருத்துக்களானஜனங்கள் பல தேசங்களிலிருந்து வந்திருக்கும் பிராம்மணர்கள் ஆகிய எல்லாரையும் பார்த்துப் (பின்வருமாறு) சொல்லலானான்.

'(ஜனங்களே!) நீங்களும் கௌரவர்களும் நெடுங்காலம் சேர்ந்து வஸித்தவர்கள். ஒருவருக்கொருவர் நண்பர்கள்; ஒருவர் மற்றொருவருடைய நன்மையில் ஆசையுள்ளவர்கள். நான் இப்பொழுது இக்காலத்திற்கேற்றதான எந்தவார்த்தையைச் சொல்லுகிறேனோ என்னுடைய அந்தவார்த்தையை நீங்கள் ஆலோசியாமல் அவ்விதமே செய்யவேண்டும். வியாஸரிடத்திலும் குந்தீபுத்திரனை யுதிஷ்டிரராஜனிடத்திலும் அநுமதிபெற்றுக்கொண்டு காந்தாரியுடன் கானகம் செல்லவேண்டுமென்று எனக்கு எண்ணமுண்டாயிருக்கிறது. நீங்களும் எனக்கு அநுமதிகொடுக்கவேண்டும் உங்களுடைய ஆலோசனை கௌரவிக்கத் தக்கதன்றோ? எங்களுக்கும் உங்களுக்குமிருந்த சாஸ்வதமான ப்ரீதியானது மற்றதேசங்களில் (பிரஜைகளுக்கும்) அரசர்களுக்கும் இராது என்று நான் எண்ணுகிறேன். குற்றமற்றவர்களே! நானும் காந்தாரியும், இந்தப்பிராயத்தினாலும் புத்திரர்களை இழந்ததாலும் பலம் குறைந்தவர்களும் உபவாஸத்தால் இளைத்தவர்களுமாக இருக்கிறோம். ராஜ்யமானது யுதிஷ்டிரனை அடைந்தபின் பெரியஸுகத்தையும் அடைந்தேன். (இவர்களுடைய ஐஸ்வர்யமானது) துரியோதனனுடைய ஐஸ்வர்யத்தைக்காட்டிலும் பலகுணங்களால் மேலானதென்று நினைக்கிறேன். பெரிய பாக்கியம்பெற்றவர்களே! குருடனும் பிராயம் முதிர்ந்தவனும்

புத்திரர்களை இழந்தவனுமான எனக்கு வனத்தைத் தவிர வேறுகதி ஏது? ஆகையால், நீங்கள் எனக்கு அனுமதிகொடுக்கவேண்டும்' என்று சொன்னான். பரதர்களுள் சிறந்தவரே! அவனுடைய அந்த வசனத் தைக்கேட்டுக் குருஜாங்கல தேசத்தார்களான அவர்களெல்லாரும் கண் ணீரால் தழுதழுத்த வார்த்தையுடன் அழுதார்கள். மிக்க தேஜஸுள் ளவனான திருதராஷ்டிரன், சோகம் மேலிட்டவர்களும் மறுமொழி யொன்றும் கூறாதவர்களுமான அவர்களனைவரையும் நோக்கி மறுபடி யும் பின்வருமாறு வார்த்தை சொல்லலானான்.

பத்தாவது அத்யாயம்.

ஆஶ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

——:o;——

(திருதராஷ்டிரன், துர்யோதனனைச்சார்ந்து தான்செய்த தவறுகளைப் பொறுக்கும்படி ஜனங்களிடம் வேண்டினதும், யுதிஷ்டிரனை அவர்களிடம் ஒப்பித்துத் தான்வனஞ்செல்ல அனுமதி கேட்டதும்)

திருதராஷ்டிரன், '(ஜனங்களே!) சந்தனுவானவர் இந்தப்பூமியை உள்ளபடி பரிபாலித்தார். அவ்வாறே, எங்களுடைய தகப்பனாரான விசித்ரவீர்யரும் பீஷ்மரால் பரிபாலிக்கப்பட்டு (இப்புவியைப்) பரிபா லித்தார். இது உங்களுக்குத் தெரிந்தவிஷயம்; ஸம்சயமில்லை. உங்க ளுக்கு மிக்க பிரியனாகஇருந்தவனும் என்னுடையஸஹோதரனுமான பாண்டுவும் நீதிதவறாமல் பரிபாலித்தான். அதையும் நீங்கள் அறிவீர் கள். பிறகு, யுதிஷ்டிரன் தந்தையினிடம் அனுமதிபெற்றுக்கொண்டு இதுவிஷயத்தில் ஒருகாலும் சிறிதும்பொய்சொல்லவில்லை என்பது என் னுடைய எண்ணம். பெரியபாக்யம் பெற்றவர்களே! குற்றமற்றவர்களே! நானும் உங்களை ஆராதித்தேன். அது செவ்வையாக இருந்தாலும் செவ் வையாக இல்லாமலிருந்தாலும் நீங்கள் ஆதரவுடன் பொறுத்துக்கொள்ள வேண்டும். துர்யோதனன் பகைவரற்றதான இந்தராஜ்யத்தை அனுப வித்தபொழுது மந்தனும் கெட்டபுத்தியுள்ளவனுமான அவன் உங்க ளுக்கு அபராதம் செய்யாமலிருந்தானா? கெட்டபுத்தியுள்ளவனான அந் தத்துர்யோதனனுடைய குற்றத்தினாலும் கர்வத்தினாலும்; அவன்செய்த அநீதியினாலும் அரசர்களுக்கு மிகப்பெரிய சண்டையுண்டாயிற்று. கௌரவர்களும் கொல்லப்பட்டார்கள். பூமியும் அழிக்கப்பட்டது. அது

விஷயத்தில் நான்செய்தது நல்லதாயிருந்தாலும் கெட்டதாயிருந்தாலும் அதனை நீங்கள் சித்தத்தில் வைக்கக்கூடாது. நான் இதோ அஞ்சலி செய்கிறேன். 'இந்த அரசன் முதியவன்; புத்திரர்களை இழந்தவன்; துக்கப்பட்டவன்; முன்னிருந்த மன்னர்களுடையபுத்திரன்' என்று எண்ணி நீங்கள்பொறுத்துக்கொள்ளவேண்டும். எளிமையுற்றவளும் முதியவளும் புத்திரர்களை இழந்தவளும் (பார்ப்பவர்) துக்கிக்கத்தக்கவளும் புத்திரசோகத்தால் பீடிக்கப்பட்டவளுமான இந்தக்காந்தாரியும் என்னைப்போல உங்களிடம் யாசிக்கிறாள். 'இவ்விருவர்களும் புத்திரர்களை இழந்தவர்கள்; முதியவர்கள்; துக்கமுற்றவர்கள்' என்றறிந்து அநுமதிகொடுங்கள். உங்களுக்கு க்ஷேமமுண்டு. உங்களைச்சரணமடைகிறோம். நீங்களெல்லாரும் குருகுலத்தில்பிறந்தவனும் குந்தியின்புத்திரனுமான இந்தயுதிஷ்டிரராஜனையும் நல்லகாலங்களிலும் கெட்டகாலங்களிலும் பார்த்துக்கொள்ளவேண்டும். இவன் ஒருபொழுதும் கெட்டகாரியத்தைச் செய்யமாட்டான். இவனுக்குப் பெரியதேஜஸுள்ளவர்களும் லோகபாலர்களுக்கொப்பானவர்களும் எல்லாத்தர்மார்த்தங்களையும் அறிந்தவர்களுமான இந்தநான்குஸஹோதரர்களும் ஸஹாயர்களாயிருக்கின்றனர். பகவானும் எல்லாப்பிராணிகளுக்கும் உலகங்களுக்கும் பிரபுவுமான பிரம்மாவானவர் நான்குலோகபாலர்களுடைய நடுவில் (ஸஞ்சரிப்பது)போல, இவன் (இவர்களுடைய நடுவில்) ஸஞ்சரிக்கிறான். மிக்க கைவன்மையுள்ளவனும் பீமன் அர்ஜுனன் நகுலன் ஸஹதேவன் இவர்களால் சூழப்பட்டவனும் மிக்க தேஜஸுள்ளவனுமான யுதிஷ்டிரன் அவ்வாறே உங்களைப் பரிபாலிப்பான். அவசியமாகவே சொல்லவேண்டியதென்றெண்ணி உங்களிடம் (ஒருவிஷயம்) சொல்லுகிறேன். நான் இந்தயுதிஷ்டிரனை உங்களனைவர்களிடத்திலும் அடைக்கலமாக ஒப்பித்திருக்கிறேன். நான் உங்களையும் இந்தவீரனிடத்தில் அடைக்கலமாக வைத்திருக்கிறேன். என்னுடையபுத்திரர்களும் என்னுடைய வேறுவேலைக்காரனும் உங்களுக்கு ஏதாவது அப்பிரியத்தைச் செய்திருந்தால் அதனை நீங்கள் பொறுக்கவேண்டும். நீங்கள் எனக்கு இதுவரையில் எவ்விதத்திலும் அபராதம் செய்யவேயில்லை. குருவினிடத்திற்போல (என்னிடத்தில்) மிக்கபக்தியுள்ள உங்களுக்கு இதோ அஞ்சலிசெய்கிறேன்; இதோ நமஸ்கரிக்கிறேன். குற்றமற்றவர்களே! சஞ்சலமானபுத்தியுள்ளவர்களும் ஆசையுள்ளவர்களும் இஷ்டப்படி நடப்பவர்களுமான அவர்களின்நிமித்தம் இப்பொழுது நானும் காந்தாரியும் உங்களெல்லாரையும் வேண்டுகிறோம்' என்றுசொன்னான். அந்தத்

திருதராஷ்டிரனால் இவ்விதம் சொல்லப்பட்டவர்களும் பட்டணத்தி லிருந்தும் கிராமத்திலிருந்தும் வந்தவர்களுமான அந்தஜனங்களெல்லா ரும் கண்ணீரால் குரல் தழுதழுத்தவர்களாகி ஒன்றும் மறுமொழிகூறு மல் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

பதினோராவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

———:o:———

(நகரஜனங்கள் பிராம்மணன் மூலமாகத் திருதராஷ்டிரனைத்தேற்றி வனஞ்செல்ல மிக்கவருத்தத்தோடு அனுமதிகொடுத்தது.)

குருகுலத்தில்பிறந்தவரே! வயோதிகனான அந்தத்திருதராஷ்டிர ராஜனால் இவ்வாறு சொல்லப்பட்ட அந்தப்பட்டணத்து ஜனங்களும் கிராமத்துஜனங்களும் பிரஜ்ஞையற்றவர்கள்போலானார்கள். பூபால னான திருதராஷ்டிரராஜன், பிறகு, கண்ணீரால் (தடுக்கப்பட்ட) குர லுள்ளவர்களும் பேசாமலிருப்பவர்களுமான அவர்களைநோக்கி மறுபடி யும் சொல்லலானான். 'ஸாதுக்களுள் சிறந்தவர்களே! தோஷமற்றவர் களே! தர்மத்தை அறிந்தவர்களே! நான் அடிக்கடி தலைவணங்கிப் பிரார்த்திக்கிறேன். முதியவனும் புத்திரர்களை இழந்தவனும் தர்மபத்தி னியான இந்தக்காந்தாரியுடன் தீனமாகப் பலவிதம்புலம்புகின்றவனும் பிதாவான வியாஸராலும் அரசனான யுதிஷ்டிரனாலும் நேரில் அனுமதி கொடுக்கப்பட்டவனுமான எனக்குக் காந்தாரியுடன்கூடி வனவாஸம் செய்வதற்காக நீங்கள் அனுமதிகொடுக்கவேண்டும்' என்றுசொன்னான்.

வேந்தரே! கௌரவராஜனுடைய தீனமான அந்தச்சொற்களைக் கேட்டு ஒன்று சேர்ந்திருக்கும் அந்தக்குருஜாங்கல தேசத்தார்களெல்லா ரும் அழுதார்கள். அவர்கள் தாய்தந்தையர்போலச் சோகத்தால் நன்கு தபிக்கப்பட்டு உத்தரீயங்களாலும் கைகளாலும்முகங்களைமூடிக்கொண்டு ஒருமுகூர்த்த காலம் அழுதார்கள். அவர்கள் திருதராஷ்டிரன் கான கம்செல்வதாலுண்டான துக்கத்தை வேறொன்றும் தோன்றாத உள்ளத் தில் தரித்துப் பிரஜ்ஞையற்றவர்கள்போலானார்கள். அவர்கள் அப்பொ ழுது திருதராஷ்டிரனுடைய பிரிவாலுண்டான அந்தமனவருத்தத்தை மெல்லமெல்ல விலக்கி ஒருவருக்கொருவர் தம்தம் அபிப்பிராயங்களைச் சொல்லிக்கொண்டார்கள். பிறகு, அவர்களெல்லாரும் சுருக்கமாக வாக் யங்களை ஆலோசித்து ஒருபிராம்மணனிடத்தில் காரியத்தை ஒப்பித்துத்

திருதராஷ்டிரராஜனைநோக்கிச் [1]சொன்னார்கள். அரசரே! பிறகு, நல்லொழுக்கமுள்ளவனும் (பெரியோர்களால்) ஏற்றுக்கொள்ளப்பட்டவனும் கருத்தைவிளக்குவதில் திறமையுள்ளவனும் கௌரவிக்கத்தக்கவனும் [2]அநேகவேதங்களைக் கற்றவனும் காம்பீர்யமுள்ளவனும் மேதாவியுமான அந்தப் [3]பிராம்மணன் மஹாராஜனை ஸமாதானப்படுத்தி ஸதஸிலிருப்பவரையும் நன்குஸம்பாஷித்துத் திருதராஷ்டிரராஜனை நோக்கிச் சொல்லலானான்.

'அரசரே! இந்த ஜனங்களுடையவாக்யமெல்லாம் என்னிடத்தில் ஒப்பிக்கப்பட்டிருக்கின்றன. வீரரே! அதனை நான் சொல்லுகிறேன். ராஜரே! அதனை ஏற்றுக்கொள்ளும். ராஜஶ்ரேஷ்டரே! பிரபுவே! நீர் சொல்வது உண்மையே. இதில் பொய்யானவார்த்தை ஒன்றுமில்லை. நீரும் நாங்களும் பரஸ்பரம் ஸுஹ்ருத்துக்கள். இந்தவம்சத்து அரசர்களுள் ஓர் அரசராவது ஒருபொழுதும் பிரஜைகளுக்கு அப்பிரியராகப் பரிபாலித்துக்கொண்டிருந்தவரில்லை. நீங்கள் எங்களைத் தந்தைபோலவும் தாய்போலவும் பரிபாலிக்கிறீர்கள். துர்யோதனராஜனும் அயுக்தமான ஓர் காரியத்தையும் செய்தவனல்லன். எல்லாருக்கும் பிரியங்களைச்செய்துகொண்டு அநுஸரிப்பதிலேயே முயற்சியுள்ளவனாக இருந்தான். மஹாராஜரே! ஸத்யவதியின்புத்திரரும் தர்மாத்மாவுமான வியாஸமுனிவர் எவ்விதம் சொல்லுகிறாரோ அவ்விதம்செய்யும். அவர் நமக்குச் சிறந்த குருவல்லரோ? அரசரே! உம்மால்விடப்பட்ட நாங்களோ உம்முடைய அநேக நற்குணங்களால் (மனம்) கவரப்பட்டு நெடுங்காலம் துக்கமும் சோகமும் மேலிட்டவர்களாகப்போகிறோம். மன்னரே! சந்தனுவும் சித்ராங்கதராஜனும் பீஷ்மருடைய பராக்ரமத்தால் காக்கப்பட்ட உம்முடையபிதாவும் உம்முடையபுத்தியை அநுஸரித்த பாண்டுராஜனும் எவ்விதம் பரிபாலித்தார்களோ அவ்விதமே துர்யோதனராஜனும் (பிரஜைகளை) நன்கு பரிபாலித்தான். ராஜரே! உம்முடையபுத்திரன் சிறிதும் அப்பிரியத்தைச்செய்யவில்லை. மன்னரே! நாங்கள் அந்தமன்னனிடத்திலும் தந்தையினிடத்தில்போல இனிது ஸுகம்பெற்று நல்லவாழ்நாளுள்ளவர்களாக இருந்தோமென்பது உங்களுக்குத்தெரியும். அவ்விதமே, புத்திசாலியும் தைரியமுள்ளவரும் குந்தியின்புத்திரருமான யுதிஷ்டிரரால் அநேக ஆயிரம்வருஷங்கள் பரிபாலிக்கப்பட்டு ஸுகம்பெறப்

1 சொல்வித்தார்கள்.
2 ரிக்வேதி எனினுமாம் 3 இவனுக்கு ஸாம்பனென்பது பெயர்.

போகிறோம். மஹாராஜரே! தர்மாத்மாவும் மிகுதியான தக்ஷிணைகளைக் கொடுப்பவருமான இந்தயுதிஷ்டிரர் உங்களுடைய முன்னோர்களும் புண்யமான செய்கையுள்ளவர்களுமான குரு, [1]ஸம்வரணன்முதலான ராஜரிஷிகளுடைய நடையையும் புத்திசாலியானபரதருடைய நடையையும் அனுஸரிக்கிறார். இவரிடத்தில் சிறிதும்தோஷமில்லை. நாங்கள் உம்மால் பரிபாலிக்கப்பட்டு எப்பொழுதும் ஸுகமாக வாஸம்செய்தோம். உம்மிடத்திலும் உமதுபுத்திரனிடத்திலும் சிறிதும் அப்பிரியமில்லை. குருநந்தனரே! இந்த ஞாதிகளின்சண்டைவிஷயத்தில் துர்யோதனனைப் பற்றி எதைச்சொல்லுகிறீரோ அதுவிஷயத்திலும் உம்மை ஸமாதானப் படுத்துகிறேன் கௌரவர்கள் நாசத்தையடைந்ததென்பது துர்யோதனனாலும் உம்மாலும் கர்ணனாலும் சகுனியினாலும் செய்யப்பட்டதன்று. அது தெய்வத்தால் நடந்ததென்று கருதுகிறோம். அந்தத் தெய்வத்தைத் தடுக்க முடியாது. தெய்வத்தை மனிதனுடைய முயற்சியினால் தடுக்க முடியாது. மஹாராஜரே! பதினெட்டு அக்ஷௌஹிணி ஸேனைகள் (யுத்தத்திற்கு)வந்தன. அவைகள் போர்வீரர்களுள் சிறந்த கௌரவர்களாலும் பீஷ்மர், துரோணர், கிருபர்முதலானவர்களாலும் மஹாத்மாவான கர்ணனாலும் வீரனான யுயுதானனாலும் திருஷ்டத்யும்னனாலும் பீமன் அர்ஜுனன் நகுலன் ஸஹதேவன் என்னும் நான்குபாண்டவர்களாலும் யுத்தத்தில் பதினெட்டு நாட்களில் கொல்லப்பட்டன. வேந்தரே! இந்த நாசமானது தெய்வபலமின்றி நடக்கவில்லை. க்ஷத்திரியன் போர்க்களத்தில் க்ஷத்திரியனுடன் யுத்தம்செய்து கொல்வதும் காலம்வந்தவுடன் மரிப்பதும் மிக்க அவஸ்யமே. கல்விபலமும் பாகுபலமும் பொருந்தின அந்தப் புருஷஸ்ரேஷ்டர்களால் குதிரைகளுடனும் தேர்களுடனும் யானைகளுடனும் கூடின இந்தப்பூமிமுழுவதும் அழிக்கப்பட்டது. மஹாத்மாக்களான அரசர்களுடைய வதத்தில் உம்முடையபுத்திரனும் நீரும் உம்முடைய வேலைக்காரர்களும் கர்ணனும் சகுனியும் காரணமல்லர். கௌரவஸ்ரேஷ்டரே! அரசர்கள் ஆயிரக்கணக்காகக் கொல்லப்பட்டனர் என்பது முழுதும் தெய்வத்தால்செய்யப்பட்டதென்று தெரிந்துகொள்ளும். இதுவிஷயத்தில் எவன் என்னசொல்லத் தகுந்தவன்? நீர் இந்தஉலகத்திற்கெல்லாம் பிரபுவாகவும் குருவாகவும் எண்ணப்பட்டவர். ஆகை

1 அஜமீடபுத்திரனான ருக்ஷனுடைய புத்திரன். ஆதிபர்வம் 187-ம் அத்யாயம் பார்க்க.

யால், உம்முடையபுத்திரனைத் தர்மாத்மாவென்று அறிகிறோம். அந்த அரசன் பிராம்மணஶ்ரேஷ்டர்களால் அனுமதி கொடுக்கப்பட்டுத் துணை வீரர்களுடன் வீரலோகஞ்சென்று ஸுகமாக மகிழட்டும். நீரும் எப்பொழுதும் தர்மத்தில் நிலைபெற்றவராகிப் புண்ணியத்தை அடையப் போகிறீர். நீண்டகைகளுள்ளவரே! நீர் உலகத்திலுள்ளதும் வேதத்திலுள்ளதுமான தர்மத்தை அறிவீர். புருஷஶ்ரேஷ்டர்களான பாண்டவர்களுடைய பராக்ரமமும் எங்களுக்குத் தெரியும். அவர்கள் தேவலோகத்தையும் பரிபாலிக்கத் திறமையுள்ளவர்கள் பூமியைப் பரிபாலிப்பார்களென்பதில் என்ன ஸந்தேஹம். சிறந்த புத்தியுள்ளவரே! குருகுலஶ்ரேஷ்டரே! சீலத்தை அணியாகக்கொண்ட பாண்டவர்களை நல்ல காலங்களிலும் கெட்ட காலங்களிலும் பிரஜைகள் அனுஸரிப்பார்கள். அரசரான பாண்டவர் பிராம்மணர்களுக்குக் கொடுத்த அக்ரஹாரங்களையும் (குடை முதலான) பிருதுகளையும் முந்திய அரசர்கள் செய்த தானங்களையும் அவஶ்யம் பரிபாலித்தே வருகிறார். குந்தியின் புத்திரரான இந்த யுதிஷ்டிரர் நீண்ட ஆலோசனையுள்ளவர்; மென்மையான தன்மையுள்ளவர்; குபேரன்போல எப்பொழுதும் மனவடக்கமுள்ளவர்; பெருந்தன்மையுள்ள மந்திரிகளுள்ளவர்; சிறந்தமனமுள்ளவர்; பகைவனிடத்திலும் தயையுள்ளவர்; சுத்தர்; பரதர்களுள் சிறந்தவர். மேதாவியான இவர் ருஜுவாகப் பார்க்கிறார்; எப்பொழுதும் எங்களைப் புத்திரர்களைப்போல ரக்ஷிக்கிறார். ராஜரிஷியே! அவ்வாறே, பீமார்ஜுனர் முதலானவர்களும் யுதிஷ்டிரருடைய சேர்க்கையால் இந்த ஜனங்களுக்கு அப்பிரியத்தைச் செய்யமாட்டார்கள். கௌரவரே! அவர்கள் மிருதுவாக இருப்பவர்களிடம் மிருதுத்தன்மையுள்ளவர்களும் குரூரத்தன்மையுள்ளவர்களிடத்தில் ஸர்ப்பத்திற்கொப்பானவர்களும் சிறந்த வீர்யமுள்ளவர்களும் மஹாத்மாக்களும் பட்டணத்திலுள்ளவர்களுக்கு நன்மையைச் செய்வதில் ஆசையுள்ளவர்களுமாக இருக்கின்றனர். குந்தியும் திரௌபதியும் உலூபியும் ஸுபத்திரையும் இந்த ஜனங்களுக்கு ஒருகாலும் பிரதிகூலங்களைச் செய்யமாட்டார்கள். உம்மால் செய்யப்பட்டதும் யுதிஷ்டிரரால் வளர்க்கப்பட்டதுமான இந்தஸ்நேஹத்தைப் பட்டணத்து ஜனங்களும் கிராமத்துஜனங்களும் விடமாட்டார்கள். மஹாரதர்களான குந்திபுத்திரர்கள் அதர்மிஷ்டர்களாயிருக்கும் மனிதர்களையும் தர்மமார்க்கத்தைக் கைப்பற்றியவர்களாகிப் பரிபாலிப்பார்கள். ராஜரே! (ஆகையால்), நீர் யுதிஷ்டிரரைப்பற்றி மனத்திலுள்ள துக்கத்தைவிலக்கிவிட்டுத் தர்மத்துடன்கூடின காரியங்களைச் செய்யும்.

பரதஸ்ரேஷ்டரே! உமக்கு நமஸ்காரம்.' என்றுசொன்னர். தர்மத்துடன்கூடினதும் குணங்களால் மேன்மைபெற்றதுமான அவருடைய அந்தவசனத்தை அந்த ஜனங்களெல்லாரும் 'நல்லது; நல்லது' என்று கௌரவித்து அங்கீகரித்தனர். திருதராஷ்டிரனும் அந்தவாக்கியத்தை அடிக்கடி அப்பொழுது பாராட்டி (அந்த) ஜனங்களை மெள்ளமெள்ள அனுப்பினன். பரதஸ்ரேஷ்டரே! அந்த ஜனங்களால் நன்குபூஜிக்கப்பட்டவனும் சுபமாகப்பார்க்கப்பட்டவனுமான அந்தஅரசன் அஞ்சலி செய்து அந்தஜனங்களைக் கௌரவித்தான். பிறகு, திருதராஷ்டிர ராஜன் காந்தாரியுடன் தன்வீடுசென்று, இரவுவந்தவுடன், ஸுகமாகச் சயனஞ்செய்துகொண்டான்.

பன்னிரண்டாவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

—:o:—

(திருதராஷ்டிரன், பீஷ்மர்முதலியோருக்கு ஸ்ராத்தஞ்செய்யப் பொருள் வேண்டினதும், பீமன் மறுக்க மற்றையோர் கொடுத்ததும்.)

பிறகு, இரவுவிடிந்தபின், அம்பிகாபுத்திரனை திருதராஷ்டிரன், விதுரரை யுதிஷ்டிரருடைய வீட்டுக்கு அனுப்பினன். சிறந்த தேஜஸுள்ளவரும் புத்திசாலிகள் எல்லாரிலும் சிறந்தவருமான விதுரர் சென்று, திருதராஷ்டிர ராஜனுடைய கட்டளையினல், தர்மம்தவருத வரும் தலைவருமான யுதிஷ்டிரரைநோக்கிச் சொல்லலானர். 'அரசரே! திருதராஷ்டிரமஹாராஜர் வனவாஸத்திற்காகத் தீக்ஷைபெற்றிருக்கிருர். வரப்போகிற இந்தக் [1]கார்த்திகியில் அரண்யம் செல்லப்போகிருர். குருகுலஸ்ரேஷ்டனே! அவர் உன்னை ஒருகாரியத்திற்காகப் பார்க்கவிரும்புகிருர். நீ அனுமதிகொடுத்தால் அவர் மஹாத்மாவும் கங்காபுத்திரருமான பீஷ்மருக்கும் துரோணருக்கும் ஸோமதத்தனுக்கும் புத்திசாலியான பாஹ்லீகனுக்கும் எல்லாப் புத்திரர்களுக்கும் கொல்லப்பட்ட மற்றுமுள்ள ஸுஹ்ருத்துக்களுக்கும் இழிவான ஸைந்தவனுக்கும் ஸ்ராத்தம் செய்ய விரும்புகிருர்' என்று சொன்னர். விதுரருடைய இந்த வசனத்தைக் கேட்டுப் பாண்டவரான யுதிஷ்டிரரும் அர்ஜுனனும் மனமகிழ்ந்து கொண்டாடினர். உறுதியான கோபமுள்ளவனும் சிறந்த

---

1 க்ருத்திகாநக்ஷத்ரம் சேர்ந்த பூர்ணிமை

பராக்ரமமுள்ளவனுமான பீமனே, அப்பொழுது துரியோதனன் செய்ததை நினைத்து விதுரருடைய அந்த வார்த்தையை அங்கீகரிக்கவில்லை. கிரீடியான பல்குனன் பீமஸேனனுடைய கருத்தை உணர்ந்து சிறிது வணக்கத்துடன் நரஸ்ரேஷ்டனை அவனை நோக்கி, 'பீம! மன்னரும் தந்தையும் முதியவரும் வனவாஸத்திற்காகத் தீக்ஷை அடைந்திருப்பவருமான திருதராஷ்டிரர் எல்லா ஸுஹ்ருத்துக்களுக்கும் ஸ்ராத்த காரியத்தைச் செய்யவிரும்புகிறார். சிறந்த கைகளுள்ளவனே! கௌரவர் உன்னால் ஜயிக்கப்பட்ட தனத்தைப் பீஷ்மர் முதலானவர்களுக்காகக் கொடுக்க விரும்புகிறார். அதைப்பற்றி நீ அனுமதி கொடுக்கவேண்டும். நீண்ட கைகளுள்ளவனே! முன் எந்தத்ருதராஷ்டிரரை நாம் யாசித்தோமோ அவர் இப்பொழுது நம்மை யாசிக்கிறார். இது தெய்வச்செயல். காலத்தின் மாறுதலைப் பார்! இந்த அரசர் முன்பு பூமிமுழுவதற்கும் பிரபுவாயிருந்து (இப்பொழுது) பிறர்களால் மந்திரிகள் கொல்லப்பட்டவராகிக் கானகம்செல்ல விரும்புகிறார். புருஷஸ்ரேஷ்டனே! தானத்தைத் தவிர வேறு உன்னுடைய தரிசனம் வேண்டாம். சிறந்த புஜபலமுள்ளவனே! இதைத்தவிர மற்றது அபகீர்த்தியைத் தருவதும் அதர்மமுமாகும். மூத்த ஸஹோதரரும் தலைவருமான யுதிஷ்டிரராஜரை அனுஸரிப்பாயாக. பரதஸ்ரேஷ்டனே! கொடுக்கவும் கொடாமலிருக்கவும் நீ தகுந்தவனல்லை' என்று சொன்னான். இவ்விதம் சொல்லுகின்ற அர்ஜுனனை யுதிஷ்டிரரும் கொண்டாடினார்.

பீமஸேனனோ அப்பொழுது கோபத்துடன் அர்ஜுனனைப் பார்த்து, 'அர்ஜுன! பீஷ்மருக்கும் ஸோமதத்தராஜனுக்கும் பூரிஸ்ரவஸுக்கும் ராஜரிஷியான பாஹ்லீகனுக்கும் மஹாத்மாவான துரோணருக்கும் மற்ற ஸுஹ்ருத்துக்களுக்கும் நாம் ஸ்ராத்தம் செய்வோம். கர்ணனுக்குக் குந்தி செய்வாள். புருஷஸ்ரேஷ்டனே! கௌரவராஜன் ஸ்ராத்தங்களைச் செய்யவேண்டாம். இவ்விதம் என்னுடைய புத்தியிருக்கிறது: உங்களுடைய பகைவர்கள் ஸந்தோஷிக்கவேண்டாம். குலத்தைக் கெடுத்த பாபிகளான எவர்கள் இந்தப்பூமியை முழுவதும் அழித்தார்களோ துர்யோதனன் முதலான அவர்களெல்லாரும் கஷ்டத்திலிருந்து பெரிய கஷ்டத்தை அடையட்டும். பன்னிரண்டு வருஷங்களிலிருந்த விரோதத்தையும் திரௌபதிக்குச் சோகத்தை வளரச்செய்த அஜ்ஞாதவாஸயாத்திரையையும் நீ இப்பொழுது எவ்விதம் மறந்தாய்? நீ (முன்) [1]ஆபரணங்களையும் பூஷணங்களையும் கழற்றிவிட்டுக் கிருஷ்ணாஜி

1 அணியின் வகை,

னத்தை உத்தரீயமாகக்கொண்டு பாஞ்சாலபுத்திரியுடன் திருதராஷ்டிர ராஜனுக்கருகில் சென்றாயே; அப்பொழுது திருதராஷ்டிரனுக்கு நம்மிடத்திலிருந்த ஸ்நேஹம் எங்கே போயிற்று? நீங்கள் பன்னிரண்டு வருஷங்கள் அரண்யத்தில் அரண்யத்திலுள்ளவற்றைப் புஜித்துக்கொண்டிருந்தீர்களே; அப்பொழுது அந்தத்துரோணரும் பீஷ்மரும் ஸோமதத்தனும் எங்கே இருந்தார்கள்? அப்பொழுது பெரியதகப்பனார் பிதாவாயிருந்துகொண்டு உன்னைப் பார்க்கவில்லையே? பார்த்த! குலத்தில் இழிவானவனும் கெட்ட புத்தியுள்ளவனுமான இவன் விதுரரை நோக்கி, 'சூதாட்டத்தில் என்ன ஜயிக்கப்பட்டது? என்று சொன்னானே; அதை நீ மறந்து விட்டாயா?' என்று சொன்னான். இவ்விதம் சொல்லுகின்ற அந்தப் பீமஸேனனை புத்திசாலியும் குந்திபுத்திரருமான யுதிஷ்டிரராஜர் அதட்டி, 'பேசாமலிரு' என்று சொன்னார்.

பதின்மூன்றாவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

——:o:——

(பீமன் துரியோதனன் முதலியோரின் ஸ்ராத்தத்துக்குப் பொருள்கொடுக்க மறுத்ததும், யுதிஷ்டிரர் தம்பொக்கசத்திலிருந்து வேண்டும்பொருளை எடுத்துக்கொள்ளும்படி திருதராஷ்டிரனுக்குத் தெரிவித்ததும்.)

அர்ஜுனன், 'பீமஸேன! நீ எனக்கு மூத்த ஸஹோதரனும் குருவுமாக இருக்கிறாய். ஆகையால், நானே வேறொன்றும் சொல்லத் துணியவில்லை. ராஜரிஷியான திருதராஷ்டிரரோ எல்லாவிதத்தாலும் பூஜிக்கப்படத்தக்கவர். பெரியோர்களுடைய மரியாதையைக் கடக்காதவர்களும் புருஷோத்தமர்களுமான ஸாதுக்கள் அபகாரங்களை நினைக்க மாட்டார்கள். உபகாரங்களையே நினைப்பார்கள்' என்று சொன்னான். மஹாத்மாவான அந்த அர்ஜுனனுடைய இவ்விதமான வார்த்தையைக் கேட்டுத் தர்மாத்மாவும் குந்தியின் புத்திரருமான யுதிஷ்டிரர் விதுரரை நோக்கி, 'விதுரரே! 'புத்திரர்களுக்காகவும் உபகாரம் செய்தவர்களான பீஷ்மர் முதலான எல்லா ஸுஹ்ருத்துக்களுக்காகவும் எவ்வளவு தானம் செய்ய விரும்புகிறாரோ அவ்வளவையும் நான் என்னுடைய பொக்கசத்திலிருந்து கொடுக்கிறேன்' என்று நான் சொன்னதாகக் கௌரவராஜரிடம் சொல்லும். பிரபுவே! பீமன் மனவருத்தப்பட வேண்டாம்' என்று சொன்னார். தர்மராஜர் இவ்விதம் சொல்லி அந்த அர்ஜுனனைப் புகழ்ந்

தார். பீமஸேனன் அர்ஜுனனைக் கடைக்கண்ணால் பார்த்தான். பிறகு, புத்திசாலியான அந்த யுதிஷ்டிரர் விதுரரைப் பார்த்து, 'அந்த அரசர் பீமஸேனன்மீது கோபிக்கக்கூடாது. ஏனெனில், புத்திசாலியான பீமஸேனன் கானகத்தில் பனி மழை வெயில் முதலான பலவித துக்கங்களால் மிகக் கஷ்டப்பட்டவன். இது உமக்குத் தெரியும். ஆகையினால், 'நீர் விரும்புகிறதையெல்லாம் என்னுடைய வீட்டிலிருந்து பெற்றுக் கொள்ளும்' என்று நான் சொன்னதாகப் பரதஸ்ரேஷ்டரான திருதராஷ்டிர ராஜனிடம் சொல்லும். 'மிகக் கஷ்டப்பட்டவனான பீமஸேனன் கோபத்தால் எதைச் செய்கிறானோ அதை மனத்தில் வைக்கக்கூடாது' என்று அந்த அரசரிடம் சொல்லவேண்டும். 'என்னுடைய வீட்டிலும் அர்ஜுனனுடைய வீட்டிலுமிருக்கிற தனத்திற்கு மஹாராஜரான நீரே உடையவர்' என்று அந்த அரசனிடம் சொல்ல வேண்டும். அரசர் இஷ்டப்படி பிராம்மணர்களுக்குக் கொடுக்கட்டும்; செலவு செய்யட்டும். அவர் இப்பொழுது புத்திரர்களுக்கும் ஸுஹ்ருத்துக்களுக்கும் கடன் தீர்ந்தவராகட்டும். 'ராஜரே! என்னுடைய இந்தச் சரீரமும் தனங்களும் உம்முடைய அதீனமானவை. [1]இதில் எனக்கு ஸம்சயமில்லை என்று நீர் தெரிந்துகொள்ளும்' (என்று அவரிடம் சொல்லும்)' என்று சொன்னார்.

பதினைன்காவது அத்யாயம்.

ஆச்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

——:o:——

(விதுரர், யுதிஷ்டிரர் பொருள் கொடுக்கச் சம்மதித்ததைத் திருதராஷ்டிரனுக்குத் தெரிவித்தது.)

ராஜரே! யுதிஷ்டிரராஜரால் இவ்வாறு சொல்லப்பட்டவரும் அறிவில் சிறந்த பண்டிதருமான அந்தவிதுரர் திருதராஷ்டிரனிடம் சென்று சிறந்த பொருளுள்ள பின்வரும் வாக்கியத்தைச் சொல்லலானார். 'உம்முடைய வசனத்தை ஆதியிலிருந்து யுதிஷ்டிரராஜனிடம் சொன்னேன். மிக்க ஒளியுள்ள அவனும் உம்முடைய வாக்கியத்தைக் கேட்டுக் கொண்டாடினான். மிக்க தேஜஸுள்ளவனான அர்ஜுனன் அவனுடைய வீட்டையும் வீட்டிலுள்ள பொருளையும் முக்கியமான பிராணனையும் உமக்கு அர்ப்பணம் செய்கிறான். ராஜரிஷியே! உம்முடைய புத்திர

1 வேறுபாடம்.

னை யுதிஷ்டிரனும் ராஜ்யத்தையும் பிராணன்களையும் தனங்களையும் இளைய ஸஹோதரர்களையும் மற்றுமுள்ளவற்றையும் உமக்கு அர்ப்பணம் செய்கிறான். மிக்க பாகுபலமுள்ள பீமஸேனனோ மிகுதியான எல்லாத் துயரங்களையும் நினைத்துப் பெருமூச்சுவிட்டுக் கஷ்டப்பட்டு அனுமதி கொடுத்தான். ராஜரே! நீண்டகைகளுள்ள அவனைத் தர்மசீலனை யுதிஷ்டிரராஜனும் அர்ஜுனனும் ஸமாதானம்செய்து ஸுஹ்ருத்தாக இருக்கும்படி நிலைநிறுத்தினார்கள். யுதிஷ்டிரன் உமக்குச் சொன்னதாவது, 'பீமஸேனன் அந்த விரோதத்தை நினைத்து அநீதியாக எதைச்செய்தானோ அதைப்பற்றி நீர் கோபித்துக்கொள்ளக் கூடாது. மன்னரே! க்ஷத்திரியர்களுடைய தர்மமானது இவ்விதமானதன்றோ? இந்தப் பீமஸேனன் மாசற்ற க்ஷத்திரிய தர்மத்தில் உறுதியாக இருக்கிறான். அரசரே! பீமஸேனனுக்காக நானும் அர்ஜுனனும் அடிக்கடி யாசிக்கிறோம். கிருபை செய்யும். என்னிடத்தில் இருக்கும் பொருளுக்கு நீரே தலைவர். ராஜரே! உமக்கு விருப்பமுள்ள வரையில் தனத்தைக் கொடும். பாரதரே! எங்களுடைய ராஜ்யத்திற்கும் பிராணன்களுக்கும் நீரே தலைவர்' என்பது. (மேலும்) குந்தியின் புத்திரரான யுதிஷ்டிரராஜரும் அர்ஜுனனும் என்னை நோக்கி, 'கௌரவச்ரேஷ்டரான திருதராஷ்டிரர் பிராம்மணர்களுக்குக் கொடுக்கத்தக்க அக்கிரகாரங்களையும் புத்திரர்களுக்குச் சிராத்தத்தையும் ரத்தினங்களையும் பசுக்களையும் வேலைக்காரிகளையும் வேலைக்காரர்களையும் வெள்ளாடுகளையும் செம்மறியாடுகளையும் பிராம்மணர்களுக்குப் பூஜைசெய்து கொடுக்கட்டும். விதுரரே! நீர் மன்னருடைய உத்தரவினால் ஆங்காங்கு ஏழைகளுக்கும் குருடர்களுக்கும் சக்தியற்றவர்களுக்கும் மிகுதியான அன்னமும் ரஸமும் பானமும் நிறைந்த ஸபைகளையும், பசுக்களுக்குத் தொட்டிகளையும் செய்விப்பீராக. மற்றுமுள்ள பலவித புண்ணியத்தையும் செய்யும்' என்று சொன்னார்கள். மேல் எதைச் செய்யவேண்டுமோ அதை நீர் சொல்லவேண்டும்' என்று சொன்னார். ஜனமேஜயரே! விதுரர் இவ்விதம் சொன்னவுடன், திருதராஷ்டிரன் அவர்களைப் புகழ்ந்து கார்த்திகியில் மஹாதானம் செய்ய மனத்தில் எண்ணினான்.

பதினைந்தாவது அத்யாயம்.

ஆஶ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

——:o:——

(திருதராஷ்டிரன் ஶ்ராத்தஞ்செய்து பிராம்மணர்களை அன்னமுதலியவற்றால் திருப்தியடைவித்தது.)

அரசரே! விதுரரால் இவ்விதம் சொல்லப்பட்ட திருதராஷ்டிர ராஜன் யுதிஷ்டிர ராஜருடைய செய்கையினாலும் அர்ஜுனனுடைய செய்கையினாலும் பிரீதியுள்ளவனானன். பிறகு, அந்த ராஜஶ்ரேஷ்டன் பீஷ்மர், புத்திரர்கள், ஸுஹ்ருத்துக்கள் இவர்களின் நிமித்தம் ஆயிரக்கணக்கான தகுந்த பிராம்மணர்களையும் ரிஷிஶ்ரேஷ்டர்களையும் நன்கு பார்த்து அன்னங்களையும் பானங்களையும் செய்வித்து வாகனங்களையும் வஸ்திரங்களையும் ஸுவர்ணங்களையும் [1]மணிகளையும் [2]ரத்தினங்களையும் வேலைக்காரிகளையும் வேலைக்காரர்களையும் பிருதுகளையும் சிறந்த கம்பளங்களையும் கிராமங்களையும் நிலத்தையும் தனத்தையும் அலங்கரிக்கப்பட்ட யானைகளையும் குதிரைகளையும் கன்னிகைகளையும் உத்தம ஸ்திரீகளையும் துரோணர் பீஷ்மர் பாஹ்லிகன் ஸோமதத்தன் துரியோதனராஜன் மற்றப் புத்திரர்கள் ஜயத்ரதன் முதலான எல்லாஸுஹ்ருத்துக்கள் இவர்களுடைய பெயரைத் தனித்தனிசொல்லி எல்லாப்பிராம்மணர்களுக்கும் குறிப்பிட்டுக் குறிப்பிட்டுக் கொடுத்தான். அநேகமான பசுக்களையும் தனங்களையும் தக்ஷிணையாகக் கொண்டதும் அதிகமான தனக்குவியலும் ரத்தினக்குவியலுமுள்ளதுமான அந்தச் சிராத்தமாகிற யஜ்ஞமானது அப்பொழுது யுதிஷ்டிரருடைய அனுமதியின்மேல் நடந்தது. அந்தச்சிராத்தமாகிற யஜ்ஞத்தில் அப்பொழுது கணக்கிடுகிறவர்களும் எழுதுகிறவர்களும் யுதிஷ்டிரருடைய உத்தரவினால் அந்தத்ருதராஷ்டிர ராஜனை நோக்கி, 'அரசரே! இவர்களுக்குக் கொடுக்கத்தக்க எதைக் கொடுக்கலாம்? உத்தரவு செய்யும்' என்று எப்பொழுதும் கேட்டார்கள். அதில் அப்பொழுது அவர் சொன்னவுடன் அதைக்கொண்டு வந்தும் கொடுத்தார்கள். குந்தியின் புத்திரரும் புத்திசாலியுமான யுதிஷ்டிரராஜருடைய உத்தரவினால் நூறு கொடுக்க வேண்டியதற்கு ஆயிரமும் ஆயிரத்திற்குப் பதினாயிரமும் கொடுக்கப்பட்டன. இவ்விதம் தனங்களாகிற நீர்த்தாரைகளைப் பொழிகின்ற அரசனாகிற மேகமானது அந்தப் பிராம்மணர்களை மழைபொழிகின்ற மேகமானது பூமி

---

1 முத்து முதலியன. 2 மாணிக்க முதலியன.

யைத் திருப்தியடையும்படி செய்வதுபோலத் திருப்தியடையும்படிசெய்தது. சிறந்த புத்தியுள்ளவரே! அரசன் அதில் அதற்குப் பிறகே எல்லா வர்ணத்தார்களையும் அன்னம் பானம் ரஸம் இவற்றின் பெருக்கினால் முழுகும்படி செய்தான். வஸ்திரம் தனம் ரத்தினம் இவற்றின் குவியலாகிற பிரவாஹமுள்ளதும் மிருதங்கங்களுடைய சப்தமாகிற ஒலியுள்ளதும் பசுக்களும் குதிரைகளுமாகிற மகரங்களும் சுழல்களுமுள்ளதும், பலவித ரத்தினங்களாகிற பெரிய நிதிகளுள்ளதும் கிராமங்களும் அக்ரகாரங்களுமாகிற தீவுகளால் நிறைந்ததும் மணிகளும் ஸுவர்ணமுமாகிற ஜலமுள்ளதும் திருதராஷ்டிரனாகிற தெப்பத்தால் அலைக்கப்பட்டதுமான அந்தச் சிராத்தமாகிற ஸமுத்திரமானது உலகத்தை முழுகும்படி செய்தது. மஹாராஜரே! இவ்விதம் அந்தத் திருதராஷ்டிரன் புத்திரர்களுக்கும் பௌத்திரர்களுக்கும் பித்ருக்களுக்கும் தனக்கும் காந்தாரிக்கும் ஸ்ராத்தத்தைச் செய்தான். அந்த அரசன் மிகுதியான தானங்களைக்கொடுத்து எப்பொழுது களைப்படைந்தானோ அப்பொழுது தானயஜ்ஞத்தை நிறுத்தினான். இவ்விதம் குரு குலத்தில் பிறந்தவனான அந்த அரசன் நடர்களும் நர்த்தகர்களும் மிக நர்த்தனம் செய்யப்பெற்றதும் அதிகமான அன்னமும் ரஸமும் தக்ஷிணையுமுள்ளதுமான தானமாகிற பெரியயாகத்தைச் செய்தான். பரதர்களுள் சிறந்தவரே! அம்பிகாபுத்திரனான (திருதராஷ்டிர) ராஜன் இவ்விதம் பத்துநாட்கள் தானங்களைச்செய்து புத்திரர்களுக்கும் பௌத்திரர்களுக்கும் கடன் தீர்ந்தவனானான்.

பதினைந்தாவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

—:o:—

(திருதராஷ்டிரன் காந்தாரியின் தோளையும் காந்தாரி குந்தியின் தோளையும் பிடித்துக்கொண்டு அனைவரும் வருந்திப் பின்தொடரக் காட்டுக்குப் புறப்பட்டது.)

பிறகு, விடியற்காலையில், சிறந்த புத்தியுள்ளவனும் அம்பிகாபுத்திரனுமான அந்தத் திருதராஷ்டிரராஜன் காந்தாரியுடன் வனவாஸத்தில் ஆவலுள்ளவனாகிப் பாண்டவவீரர்களை வரவழைத்து விதிப்படி (அவர்களுக்கு) ஆசீர்வாதம்செய்து கார்த்திகியில் வேதத்தின் கரையை அடைந்தவர்களான பிராம்மணர்களைக் கொண்டு (உதவஸநீய மென்னும்,)

இஷ்டியைச் செய்வித்து மரப்பட்டையையும் கிருஷ்ணாஜினத்தையும் உடுத்துக்கொண்டும் அக்னிஹோத்திரத்தை முன்னிட்டுக்கொண்டும் [1] மருகிகளால் சூழப்பட்டவனாகி அந்த வீட்டிலிருந்து புறப்பட்டான். பிறகு, விசித்திரவீர்யனுடைய புத்திரனான திருதராஷ்டிரராஜன் புறப்படும்பொழுது கௌரவஸ்திரீகளும் பாண்டவஸ்திரீகளும் கௌரவ ராஜனுடைய வம்சத்தில்பிறந்த ஸ்திரீகளும் (பிரயாணத்தை நிறுத்தும்படி) பிரார்த்திக்க, அப்பொழுது அவர்களுடைய (அந்தச்) சப்தமானது தோன்றியது. பிறகு, புருஷஸ்ரேஷ்டனான திருதராஷ்டிரராஜன் பொரிகளாலும் விசித்திரமானபுஷ்பங்களாலும் அந்தவீட்டைப் பூஜித்து எல்லா வேலைக்காரர்களுக்கும் குதிரைகளைக் கொடுத்து அனுப்பிவிட்டு அவ்விடமிருந்து செல்லலானான். பிறகு, யுதிஷ்டிரராஜர் நடுக்கமுற்று அஞ்ஜலி செய்துகொண்டு கண்ணீரால் தழுதழுத்த குரலுடன், 'மஹாராஜரே! ஸாதுவே! ஐயா! எங்கே போகிறீர்?' என்று உரத்த குரலுடன் சொல்லிப் பூமியில்விழுந்தார். அவ்வாறே, பரதஸ்ரேஷ்டனான அர்ஜுனனும் கடுந்துயரத்தால் மிகத்தபித்து அடிக்கடி பெருமூச்சுவிட்டு யுதிஷ்டிரரை, 'இவ்விதம் செய்யவேண்டாம்' என்றுசொல்லித் தடுத்துப் பிறகு மிக்க மனத்தளர்ச்சியுள்ளவனானான். வீரர்களான பீமஸேனனும் அர்ஜுனனும் நகுலனும் ஸஹதேவனும் விதுரரும் ஸஞ்சயனும் யுயுத்ஸுவும் கிருபரும் தௌம்யரும் (மற்றப்) பிராம்மணர்களும் கண்ணீரால் தழுதழுத்த குரலுள்ளவர்களாகப் பின்சென்றனர். பிறகு, குந்தியானவள், நேத்திரங்களைக் கட்டிக்கொண்டிருப்பவளும் செல்லுகின்றவளுமான காந்தாரியைத் (தன்) தோளில் வைக்கப்பட்ட அவளுடைய கையைச் சுமந்துகொண்டு சென்றாள். சிறப்புற்றவனான திருதராஷ்டிரராஜன் காந்தாரியினுடைய தோளைக் கையால் பிடித்துக்கொண்டு சென்றான். அவ்வாறே, துருபதன்பெண்ணான கிருஷ்ணையும் ஸுபத்திரையும் பாலனான புத்திரனுள்ளவளும் குருகுலத்தவளுமான உத்தரையும் சித்திராங்கதையும் மற்றுமுள்ள எல்லாஸ்திரீகளும் நாட்டுப்பெண்களும் திருதராஷ்டிரனுடன் புறப்பட்டார்கள். ராஜரே! அப்பொழுது, துக்கத்தால் குரரிபக்ஷிகள்போல் அழுகின்ற அந்தஸ்திரீகளுடைய சப்தமானது உரக்கத் தோன்றிற்று. பிறகு, பிராம்மணர்கள் க்ஷத்திரியர்கள் வைஸ்யர்கள் சூத்திரர்கள் இவர்களுடைய மனைவிகளும் நாற்புறமும் சூழ்ந்துகொண்டனர். ராஜரே! அந்தத் திருதராஷ்டிரன் (வனத்திற்குச்)செல்லும்பொழுது ஹஸ்தினாபுரத்திலுள்ள ஜனங்கள், முன்பு

---

1 ராஜா என்னும் சொல் விடப்பட்டது.

பாண்டவர்கள் கௌரவர்களுடைய ஸபையில் சூதாடி (க்கானகம்) செல்லும்பொழுது துயரப்பட்டதுபோல, துயரப்பட்டார்கள். சந்திரனும் ஸூரியனும்பார்த்திராத சிலஸ்திரீகளும், கௌரவச்ரேஷ்டனான அந்த அரசன் மஹா வனத்திற்குச் செல்லும்பொழுது சோகத்தால் பீடிக்கப் பட்டவர்களாகி ராஜமார்க்கத்தில் வந்தார்கள்.

பதினேழாவது அத்யாயம்.

ஆச்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

(திருதராஷ்டிரன் காட்டுக்குப் புறப்படும்போது விதுரரும் ஸஞ்சயனும் கூடப்புறப்பட்டதும், குந்தியும் பாண்டவர்கள் பலவாறு தடுத்தும் அவர்களைத் தேற்றிக் காந்தாரியுடன் காட்டுக்கே புறப்பட்டதும்.)

அரசரே! பிறகு, அரண்மனைகளின் உப்பரிகைகளிலும் பூமியிலும் ஸ்திரீகளுடையவொலியும் புருஷர்களுடையவொலியும் மிகவும் அதிகமாகத் தோன்றின. புத்திசாலியான அந்த அரசன் நடுக்கமுற்று அஞ்சலி செய்துகொண்டு புருஷர்களாலும் ஸ்திரீகளாலும் நெருக்கமுள்ள ராஜமார்க்கத்தால் மிகச்ரமப்பட்டு வெளிப்பட்டான். அவன் ஹஸ்தினபுரத்திலிருந்து பெரிய வாயிலின்வழியாக வெளிப்பட்டு அந்தக் கூட்டத்தை அடிக்கடி திரும்பிச் செல்ல அனுமதிகொடுத்தான். விதுரரும் ஸேனாதிபதியும் ஸூதனும் கவல்கண குமாரனுமான ஸஞ்சயனும் அரசனுடன் வனம்செல்ல உத்ஸாஹமுள்ளவர்களானார்கள். பூபாலனான திருதராஷ்டிரன் கிருபரையும் மஹாரதனான யுயுத்ஸுவையும் திரும்பும்படி செய்து யுதிஷ்டிரரிடத்தில் ஒப்புவித்தான். பட்டணத்தார்களின்கூட்டமானது திரும்பினவுடன், அந்தப்புரத்துடன் கூடின யுதிஷ்டிரராஜர் அப்பொழுது திருதராஷ்டிரனால் அனுமதி கொடுக்கப்பட்டுத் திரும்புவதற்கு விரும்பினார். பரதச்ரேஷ்டரே! அவர், தாயாரான குந்தியினிடம் சென்று, 'நான் அரசருடன் செல்லுகிறேன். நீ திரும்பு. அரசியே! நீ மருமகள்களால் சூழப்பட்டு நகரம் செல். தவத்தில் நிச்சயமுள்ளவரும் தர்மாத்மாவுமான இந்த அரசர் செல்லட்டும்' என்று சொன்னார். தர்மபுத்திரரால் இவ்விதம் சொல்லப்பட்டவளும் கண்ணீரால் கலங்கின கண்களுள்ளவளுமான குந்தியானவள் அப்பொழுது காந்தாரியைப் பிடித்துக்கொண்டு சென்றுகொண்டேயிருந்தாள். குந்தி, 'மஹாராஜனே! ஸஹதேவன்மீது ஒருபொழுதும்

கோபித்துக் கொள்ளாதே. ராஜனே! அவன் எப்பொழுதும் என்னிடத்திலும் உன்னிடத்திலும் ஆசையுள்ளவனன்றோ? யுத்தங்களில் பின்வாங்கி ஓடாதவனான கர்ணனை எப்பொழுதும் நினைப்பாயாக. அந்தவீரன் அக்காலத்தில் அறிவில்லாதவளான என்னால் [1]விரதத்தை இழந்தவனாகச் செய்யப்பட்டான். அருமைப் புத்திரனே! ஸூரிய குமாரனை கர்ணனைப் பாராதவளும் அறிவில்லாதவளுமான என்னுடைய ஹிருதயமானது நூறாகப் பிளந்துபோகாமலிருப்பதால் அது நிச்சயமாக இரும்பினால் செய்யப்பட்டதே. பகைவரை அடக்குபவனே! இவ்விதம் நடந்தபின் நான் என்ன செய்யக்கூடும்? ஸூரிய புத்திரனை நான் விளங்கச் சொல்லாமலிருந்தது என்மேல் பெரிய குற்றம். நீண்ட கைகளுள்ளவனே! பகைவரை அழிப்பவனே! நீ எப்பொழுதுமே பிராதாக்களுடன் ஸூரிய புத்திரனான அக்கர்ணனுக்காக உத்தமமான தானத்தைக்கொடு. பகைவரை அழிப்பவனே! நீ எப்பொழுதும் திரௌபதிக்குப் பிரியத்தைச் செய்வதில் உறுதியாக இருக்க வேண்டும். கௌரவஸ்ரேஷ்டனே! நீ பீமஸேனனையும் அர்ஜுனனையும் நகுலனையும் ஸமாதானம் செய்யவேண்டும். ராஜனே! குலத்தின் பாரமானது இப்பொழுது உன்னைச் சார்ந்திருக்கிறது. நான் வனத்தில் [2]மாமனார் மாமியார்களுடைய பாதங்களில் பணிவிடை செய்துகொண்டு மேனியில் அழுக்குப்படிந்து தவஞ்செய்பவளாகக் காந்தாரியுடன் வஸிக்கப் போகிறேன்' என்று சொன்னாள்.

இவ்விதம் சொல்லப்பட்டவரும் தர்மாத்மாவும் இந்திரியங்களை வென்றவரும் புத்திசாலியும் ஸஹோதரர்களுடன் கூடினவருமான அவர் மனவருத்தமுற்று ஒன்றும் பேசாமலிருந்தார். தர்மராஜரான யுதிஷ்டிரர் ஒரு முகூர்த்தகாலம் ஆலோசித்துத் தைன்யத்துடன் சிந்தையும் சோகமும் மேலிட்டவராகித் தாயாரை நோக்கி, '(அன்னையே!) என்ன இது செய்ய முயன்றாய்? நீ இவ்விதம் சொல்லக்கூடாது. நான் உனக்கு அனுமதி கொடுக்கமாட்டேன். நீ கிருபைசெய்ய வேண்டும். நீ முந்தி எங்களுக்குச் சுபத்தைப் பார்க்கும் விஷயத்தில் உத்ஸா

1 அவனுக்கு க்ஷத்ரியனுக்குரிய க்ரியைகளில்லாமற்போனமை இங்கு குறிப்பிடப்பட்டது; 'அவகீர்ண:' என்பது மூலம்; 'எறியப்பட்டான்' என்றும் கொள்ளலாம்.

2 'திருதராஷ்டிரன் பாண்டுவுக்குத் தமையனாகையால் பிதாவுக்குச் சமமானது பற்றி இவ்விதம் கூறப்பட்டது' என்பது பழையவுரை.

ஹத்தை உண்டுபண்ணி (இப்பொழுது,) [1]விதுலையினுடைய வார்த்தைகளால் எங்களை விடத் தகுந்தவளல்லை. நான் உன்னுடைய புத்தியைப் புருஷோத்தமரான வாஸுதேவரிடமிருந்து கேட்டு அரசர்களைக் கொன்று இந்த ராஜ்யத்தை அடைந்தேன். முன்பு நான் கேட்ட உன்னுடைய அந்தப் புத்தியானது இப்பொழுது எங்கே போயிற்று? க்ஷத்திரியதர்மத்திலிருக்கும் என்னை விட்டுவிட்டு நீ இப்பொழுது போகக் கூடாது. புகழ்பெற்றவளே! எங்களையும் ராஜ்யத்தையும் விட்டுவிட்டு நாட்டுப்பெண்களுமில்லாமல் செல்லக்கடினமான வனங்களில் எவ்விதம் வஸிக்கப்போகிறாய்? இப்பொழுது என்மீது கிருபைசெய்' என்று சொன்னார். குந்தியானவள் கண்ணீரால் தழுதழுத்த புத்திரனுடைய இவ்விதமான வார்த்தைகளைக் கேட்டுக் கண்ணீர் நிறைந்த கண்களுள்ளவளாகிச் சென்றுகொண்டேயிருக்க, பீமஸேனன் அவளைநோக்கி, 'தாயே! புத்திரர்களால் ஜயிக்கப்பட்ட இந்த ராஜ்யத்தை அனுபவிக்க வேண்டியதும் ராஜதர்மங்களை அடையவேண்டியதுமான காலத்தில் உனக்கு இந்தப்புத்தி எங்கிருந்து வந்தது? நீ முன்பு எங்களை எதற்காகப் பூமியை அழிக்கும்படி செய்தாய்? (இப்பொழுது) என்னகாரணத்திற்காக (எங்களை) விட்டுவிட்டு வனம் செல்ல விரும்புகிறாய்? நீ பாலர்களான எங்களையும் துக்கமும் சோகமும்மேலிட்டவர்களும் மாத்ரியின் புத்திரர்களுமான இந்த நகுல ஸஹதேவர்களையும் வனத்திலிருந்து இங்கு எதற்காக அழைத்து வந்தாய்? தாயே! கிருபை செய். புகழ்பெற்றவளே! நீ இப்பொழுது கானகம் செல்லக்கூடாது. அம்மா! அர்ஜுனனுடைய வன்மையால் ஸம்பாதிக்கப்பட்ட யுதிஷ்டிரருடைய செல்வத்தை நீ அனுபவி' என்று சொன்னான். சீக்கிரம் வனவாஸத்தில் உத்ஸாஹமுள்ளவளும் நிச்சயமுள்ளவளுமான அந்தக் குந்தியானவள் இவ்விதம் புலம்புகின்ற புத்திரர்களுடைய பலவிதமான வார்த்தைகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்பொழுது திரௌபதியும் துக்கம் அடைந்த முகத்தையுடையவளாகி அழுதுகொண்டு, ஸுபத்ரையுடன், வனவாஸத்தின் பொருட்டுச் செல்லுகின்ற மாமியாரைப் பின்தொடர்ந்து சென்றாள். வனம் செல்ல நிச்சயம் செய்துகொண்டவளும் சிறந்த அறிவுள்ளவளுமான அந்தக் குந்தியானவள், அழுகின்ற எல்லாப் புத்திரர்களையும் அடிக்கடி பார்த்துக்கொண்டு சென்றுகொண்டே

---

1 ஸௌவீரராஜன் மனைவி; இவள் தன் மகனைப் போருக்குத் தூண்டினாளென்னும் கதை குந்தியால் சொல்லப்பட்டிருக்கிறது. உத்யோக பர்வம் 133-வது அத்யாயமுதல் காண்க.

யிருந்தாள். பாண்டவர்களோ வேலைக்காரர்களுடனும் அந்தப்புரத்துட னும் அவளைப் பின்தொடர்ந்து சென்றனர். பிறகு, அந்தக் குந்தியான வள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு புத்திரர்களை நோக்கிப் பின் வரும் வார்த்தையைச் சொல்லலானாள்.

பதினெட்டாவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

---:o:---

(குந்தி, வருந்திய பாண்டவர்களைக் காரணங்கூறி ஸமாதானப்படுத்தியது.)

குந்தி, 'சிறந்தகைகளுள்ளவனே! பாண்டவ! நீ சொல்லும் இது உண்மைதான். மன்னவர்களே! நான் முன்பு கஷ்டப்படும் உங்களை ரக்ஷித்தேன். சூதாடி ராஜ்யம் கவரப்பட்டவர்களும் ஸுகத்தையும் இழந்தவர்களும் ஞாதிகளால் அவமதிக்கப்பட்டவர்களுமான உங்களை நான் காப்பாற்றினேன். புருஷஶ்ரேஷ்டர்களே! பாண்டுவின் ஸந்ததி நசியாமலும் உங்களுடைய கீர்த்தி அழியாமலும் இருக்கவேண்டு மென்று (உங்களை யான்) ரக்ஷித்தேன். நீங்களெல்லாரும் இந்திரனுக்கு ஒப்பானவர்களும் தேவர்களுக்குச்சமமான பராக்கிரமமுள்ளவர்களும் பிறருடைய முகத்தை எதிர்பாராதவர்களுமாக இருக்கவேண்டுமென்று நான் அவ்விதம் செய்தேன். தர்மத்தைச் செய்பவருள் சிறந்தவனும் அரசனும் இந்திரனுக்கொப்பானவனுமான நீ மறுபடியும் காட்டில் கஷ் டப்படக்கூடாதென்று எண்ணி (நான் உங்களை) ரக்ஷித்தேன். பதினா யிரம் யானைகளுக்குச் சமமான வன்மையுள்ளவனும் பிரஸித்திபெற்ற பராக்ரமமும் ஆண்மையுமுள்ளவனுமான இந்தப் பீமஸேனன் நாசமடை யக்கூடாதென்றெண்ணி (உங்களை நான்) ரக்ஷித்தேன். அவ்வாறே, பீம ஸேனனுக்குத் தம்பியும் இந்திரனுக்கொப்பானவனுமான இந்த அர்ஜு னன் நாசமடையக்கூடாதென்றெண்ணி (இவனை நான்) ரக்ஷித்தேன். மூத்தோர்களிடம் பக்தியுள்ளவர்களான இந்த நகுல ஸஹதேவர்களும் பசியினால் நாசமடையக்கூடாதென்று (நான் இவர்களை) ரக்ஷித்தேன். பருத்தவளும் கருமை நிறமுள்ளவளும் மிக்கவிசாலமான கண்களுள்ள வளுமான இந்தத் திரௌபதியும் ஸபையின்கண் வீணாகத் துன்பப் படுத்தப்பட்டவளாகக்கூடாது என்றும் அந்தக் காரியம் செய்யப்பட் டது. பீமஸேன! நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே வாழை

யைப்போல நடுக்கமுற்றவளும் பெண்களுடைய தர்மத்தை ஆஸ்ரயித்த வளும் அழகான மேனியுள்ளவளும் சூதாடி ஜயிக்கப்பட்டவளுமான திரௌபதியைத் துச்சாஸனன் எப்பொழுது மூர்க்கத்தனத்தால் தாஸி யைப்போல இழுத்தானோ அப்பொழுதே, இந்த வம்சமானது, அவமதிக் கப்பட்டதென்று நான் தெரிந்துகொண்டேன். அப்பொழுது என்னு டைய மாமனார் முதலான கௌரவர்களும் உட்கார்ந்திருந்தார்கள். அவள் தெய்வத்தையே நாதனாகவேண்டிக் குரரிபக்ஷிபோலப் புலம்பி னாள். மன்னர்களே! பாவியும் கெட்ட புத்தியுள்ளவனுமான துச்சாஸ னன் எப்பொழுது இவளைக் கூந்தலில் பற்றியிழுத்தானோ அப்பொழுது நான் மூர்ச்சையடைந்தேன். அருமைப் புத்திரர்களே! உங்களுக்குத் தேஜஸ் விருத்தியடைய வேண்டியதற்காக நான் அப்பொழுது விதுலை யினுடைய வாக்கியத்தால் உங்களை ரக்ஷித்தேனென்று தெரிந்துகொள் ளுங்கள். புத்திரர்களே! இந்த ராஜவம்சமானது பாண்டுவுக்குப் பிறகு என்னுடைய புத்திரர்களை அடைந்து நாசமடையாமலிருக்கவேண்டு மென்று (நான் உங்களை) ரக்ஷித்தேன். ராஜனே! எவனுக்குப் பிறகு வம் சமானது அழிந்துபோகிறதோ வம்சத்தைக் கெடுத்தவனான அவ னுடைய புத்திரர்களும் பௌத்திரர்களும் புண்ணிய லோகங்களை அடையமாட்டார்கள். புத்திரர்களே! முன்பு நான் பர்த்தாவினுடைய விஸ்தாரமான ராஜ்யத்தின் பயனை அனுபவித்தேன். மஹாதானங்களைக் கொடுத்தேன். விதிப்படி ஸோமபானம் செய்தேன். நான் என்னுடைய பிரயோஜனத்திற்காக வாஸுதேவனைத் தூண்டவில்லை. விதுலையின் அவ்விதப் புலம்பல்களால் (உங்களை) ரக்ஷிக்க வேண்டி அந்தக் காரியம் செய்யப்பட்டது. புத்திரர்களே! நான் புத்திரர்களால் ஜயிக்கப்பட்ட ராஜ்யத்தின் பயனை விரும்பவில்லை. பிரபுவே! புண்ணியமான பர்த்தா வின் உலகங்களைத் தவத்தால் (அடைய) விரும்புகிறேன். யுதிஷ்டிரா! நான் வனத்தில் வசிக்கின்ற மாமனாருக்கும் மாமியாருக்கும் பணி விடைசெய்து தவத்தால் சரீரத்தை உலர்த்தப் போகிறேன். கௌரவஸ் ரேஷ்டனே! பீமஸேனன் முதலானவர்களுடன் திரும்பு. உன்னுடைய புத்தியைத் தர்மத்தில் நிறுத்து. சித்தமும் சிறந்ததாக இருக்கட்டும்' என்று சொன்னாள்.

பத்தோன்பதாவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

---:0:---

(பாண்டவர் முதலியோர் வருத்தத்துடன் திரும்பியதும், திருதராஷ்டிரன் முதலியோர் கங்கைக்கரையில் மாலைக்கடன்களைச் செய்து இரவைக்கழித்ததும்.)

ராஜஸ்ரேஷ்டரே! பாரதரே! குந்தியின் வசனத்தைக் கேட்டுப் பாண்டவர்கள் வெட்கிப் பாஞ்சாலியுடன் திரும்பினார்கள். பிறகு, அவ்விதம் சென்றவளான குந்தியைப் பார்த்து, அப்பொழுது அழுகின்ற எல்லா அந்தப்புரஸ்திரீகளினுடைய ஒலியும் பெரிதாகவே உண்டாயிற்று. பிறகு, பாண்டவர்கள் அப்பொழுது திருதராஷ்டிர ராஜனைப் பிரதக்ஷிணம்செய்து நமஸ்கரித்து அந்தக் குந்தியைத் திருப்பாமல் தாம் திரும்பினார்கள். பிறகு, சிறந்த தேஜஸுள்ளவனும் அம்பிகையின் புத்திரனுமான திருதராஷ்டிரன், காந்தாரியையும் விதுரரையும் நல்வார்த்தை கூறிப் பிடித்துக்கொண்டு, 'யுதிஷ்டிரனுடைய தாயான குந்திதேவியானவள் நன்கு திரும்பிச்செல்லட்டும். யுதிஷ்டிரன் சொல்வதெல்லாம் உண்மையே. எவள் புத்திரர்களுடைய இந்தப் பெரியசெல்வத்தையும் பெரும் பயனையும் புத்திரர்களையும் விட்டுவிட்டு அறிவில்லாதவள்போலச் செல்லமுடியாத கானகம் செல்லுவாள்? இவள் ராஜ்யத்திலிருந்துகொண்டே தவம்புரியவும் பெரிதான தானங்களையும் விரதங்களையும் செய்யவும் கூடும். இப்பொழுது என்னுடைய வார்த்தையைக் கேட்கவேண்டும். காந்தாரி! மருமகள் பணிவிடைசெய்து அதனால் நான் மிக்க ஸந்தோஷமடைந்தேன். தர்மங்களை அறிந்தவளே! ஆகையால், நீ இவளுக்கு அனுமதி கொடுக்கவேண்டும்' என்று சொன்னான். அரசனால் இவ்விதம் சொல்லப்பட்ட காந்தாரியானவள் குந்தியை நோக்கி அரசன் சொன்ன அந்த எல்லா வசனத்தையும் விசேஷமான தன்னுடைய வாக்கியத்தையும் சொன்னாள். தேவியான அந்தக் காந்தாரி, அப்பொழுது வனவாஸம் செய்ய எண்ணம்கொண்டவளும் தர்மத்தை முக்கியமாகக் கொண்டவளும் பதிவ்ரதையுமான குந்தியைத் திருப்புவதற்குச் சக்தியற்றவளானாள். அப்பொழுது கௌரவஸ்திரீகள் அந்தக் குந்தியின் அவ்வித நிலைமையையும் நிச்சயத்தையும் உணர்ந்து கௌரவஸ்ரேஷ்டர்கள் திரும்பினதையும் பார்த்து அழுதார்கள். அப்பொழுது, குந்தியின் புத்திரர்களும் எல்லா மருமகளும் திரும்பினவுடன், சிறந்த பிரஜ்ஞை

யுள்ள திருதராஷ்டிரராஜன் வனத்தைக்குறித்துச் சென்றான். அப்பொழுது அந்தப் பாண்டவர்களனைவரும் மிக்க தைன்யமுற்றவர்களும் துக்கமும் சோகமும் மேலிட்டவர்களுமாகி ஸ்திரீகளுடன் வாகனங்களில் ஏறி நகரம் சென்றனர். ஸ்திரீகளுடனும் முதியவர்களுடனும் சிறுவர்களுடனும் கூடின ஹஸ்தினபுரமென்னும் அந்தப் பட்டணமானது, (அப்பொழுது) ஸந்தோஷமும் ஆனந்தமுமற்று உத்ஸவத்தை இழந்ததுபோல இருந்தது. குந்தியைவிட்டுப்பிரிந்த பாண்டவர்களனைவரும் (தாயை) விட்டுப்பிரிந்த கன்றுகள்போல உத்ஸாஹமற்றவர்களும் மனத்தளர்ச்சியுள்ளவர்களும் மிக்க துயரத்தால் பீடிக்கப்பட்டவர்களுமாயிருந்தார்கள். பிரபுவான திருதராஷ்டிரனோ அந்தப்பகலில் நெடுந்தூரம்சென்று, பிறகு, கங்கையின் கரையில் வாஸம் செய்தான். தபோவனத்தில் ஆங்காங்கு வேதத்தின் கரையை அடைந்தவர்களான பிராம்மணச்ரேஷ்டர்களால் முறைப்படி மூட்டப்பட்ட அக்னிகள் விளங்கின. பிராயம் முதிர்ந்த அந்த அரசனும் அக்கினியை மூட்டினான். பாரதரே! அப்பொழுது அந்தஅரசன் அக்கினிகளைப் பூஜித்தும் விதிப்படி ஹோமம் செய்தும் ஸந்தியாகாலத்தை அடைந்த ஸூரியனை உபாஸித்தான். பிறகு, விதுரரும் ஸஞ்சயனும் கௌரவவீரனான மன்னனுக்கும் காந்தாரிக்கும் குசங்களால் அருகில் படுக்கையை ஏற்படுத்தினார்கள். யுதிஷ்டிரருடைய தாயும் நல்ல விரதத்திலிருப்பவளுமான குந்தியானவள் காந்தாரிக்கு அருகில் தர்ப்பத்தின்மீது ஸுகமாகச் சயனம்செய்தாள். அவர்களுடைய அனுமதியின்மேல் விதுரர் முதலானவர்களும் ரித்விக்குக்களும் கூடவந்த பிராம்மணர்களும், தகுந்த இடத்தில் சயனம் செய்தனர். நன்கு அத்தியயனம்செய்கிற பிராம்மணச்ரேஷ்டர்களையுடையதும் நன்கு ஜ்வலிக்கின்ற அக்னியுள்ளதுமான அந்த ராத்திரியானது அவர்களுக்கு [1]ப்ராம்மீராத்ரிபோல ஸந்தோஷத்தை விருத்தி செய்வதாயிற்று. பிறகு, இரவு சென்றவுடன், அவர்களெல்லாரும் காலைக்கடன்களைச் செய்து அக்கினியில் ஹோமம்செய்துவிட்டு உபவாஸத்தை முக்கியகதியாகக் கொண்டவர்களாகி வடக்கு முகமாகப் பார்த்துக்கொண்டு கிரமமாகச் சென்றார்கள். பட்டணத்திலும் கிராமத்திலுமுள்ள ஜனங்களுடன் பேசுகின்றவர்களும் துக்கிக்கின்றவர்களுமான அவர்களுக்கு முதல்நாள் அந்த வாஸமானது அதிக துக்ககரமாயிருந்தது.

---

1 'வேதகோஷம் செய்யப்படுகிற ஓர் இரவு' என்பது இங்கிலீஷ் மொழிபெயர்ப்பிலுள்ள குறிப்பு.

இருபதாவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

—:o:—

(திருதராஷ்டிரன் விதுரர் முதலானவருடன் குருக்ஷேத்ரஞ்சென்று சதயூபாஸ்ரமத்தில் வியாஸர் உபதேசித்தபடி கடுந்தவஞ் செய்தது)

பிறகு, அரசன் விதுரருடைய ஸம்மதத்தின்மேல் பரிசுத்தமும் புண்ணியம் செய்த ஜனங்களுக்குத் தகுந்ததுமான கங்கைக் கரையில் வாஸம் செய்தான். பரதஸ்ரேஷ்டரே! அவ்விடத்தில் அவரை வனத்தில் வசிக்கும் பிராம்மணர்களும், க்ஷத்திரியர்கள், வைஸ்யர்கள், சூத்திரர்கள் இவர்களில் அநேகம் கூட்டங்களும் பூஜித்தார்கள். அவர்களால் சூழப்பட்ட அந்த அரசன் சிஷ்யர்களுடன்கூடின அவர்களைக் கதைகளால் ஸந்தோஷப்படுத்தி விதிப்படி பிரதிபூஜை செய்து அனுமதி கொடுத்தான். ஸாயங்காலத்தில் அந்த அரசனும் புகழ்பெற்றவளான காந்தாரியும் அவ்விடமிருந்து கங்கைக்குச் சென்று விதிப்படி சுத்தி செய்துகொண்டார்கள். பாரதரே! அப்பொழுது விதுரர்முதலான மற்றுமுள்ள அந்த எல்லாப் புருஷர்களும் தீர்த்தங்களில் தனித்தனி ஸ்நானம் செய்து எல்லாக் கிரியைகளையும் செய்தார்கள். ராஜரே! பிறகு, குந்திபோஜனுடைய புத்திரியான குந்தியானவள், சுத்தி செய்து கொண்டவரும் முதியவருமான மாமனையும் காந்தாரியையும் கங்கைக் [1]கரைக்கு அழைத்துக்கொண்டு வந்தாள். அப்பொழுது ரித்விக்குக்கள் அரசனுக்கு வேதியில் [3]பரிஸ்தரணத்தைச் செய்தார்கள். ஸத்திய ஸந்தனை அந்த அரசன் அப்பொழுது அக்னியில் ஹோமம் செய்தான். பிறகு, வ்ருத்தனும் நியமமுள்ளவனும் இந்திரியங்களை அடக்கினவனுமான அந்த அரசன் உடன் வருகிறவர்களுடன் கங்கைக் கரையிலிருந்து குருக்ஷேத்திரம் சென்றான். புத்திசாலியான அந்த அரசன் அங்கு ஆஸ்ரமமிருக்கும் இடத்தை நோக்கிச் சென்று பண்டிதனை சதயூபனென்னும் ராஜரிஷியை அடைந்தான். அவனோ கேகய தேசங்களில் பகைவரை வாட்டுபவனும் சிறந்தவனுமான அரசனாக இருந்தான். அவன் தன் புத்திரனை மனிதர்களுக்கு அரசனாக இருக்கச் செய்துவிட்டு வனத்திற்கு வந்தான். அந்த திருதராஷ்டிரராஜன் அந்தச் சதயூபனுடன் வியாஸருடைய ஆஸ்ரமத்திற்குச் சென்றான். ராஜரே! அங்கு வியாஸர்

1. வேறுபாடம். 2. அக்னிமேடை.

3. அக்னியைச் சுற்றித் தர்ப்பை முதலியவற்றைப் பரப்புதல்.

அந்தக் கௌரவஸ்ரேஷ்டனை விதிப்படி வரவேற்றார். அப்பொழுது கௌரவ புத்திரனை அந்த அரசன் அவ்விடத்தில் தீக்ஷையைப் பெற்று அந்தச் சதயூபனுடைய ஆஸ்ரமத்தில் வாஸம் செய்தான். மஹாராஜரே! அப்பொழுது, சிறந்த அறிவுள்ள (சதயூபனென்னும்) அரசன் அந்தத் திருதராஷ்டிர ராஜனுக்கு அரண்யத்தில் செய்யவேண்டிய விதியை முழுதும் வ்யாஸருடைய அனுமதியின்மேல் சொன்னான். அரசரே! இவ்விதம், சிறந்த மனமுள்ளவனான அந்தத் திருதராஷ்டிரன் அப்பொழுது தன்னையும் கூடவந்தவர்களான அவர்களையும் தவம் புரியும்படி செய்தான். மஹாராஜரே! அவ்வாறே தேவியான காந்தாரியானவள் மரப்பட்டையையும் கிருஷ்ணாஜினத்தையும் உடுத்துக் கொண்டு குந்தியுடன் சமமான விரதத்தை அனுஷ்டித்தாள். வேந்தரே! அவர்கள் இந்திரியக் கூட்டத்தை நன்கு அடக்கிச் செய்கையினாலும் மனத்தாலும் வாக்காலும் நேத்ரத்தினாலும் சிறந்ததான தவத்தைச்செய்தார்கள். அந்தத் திருதராஷ்டிரராஜன் அங்கு தோலும் எலும்புமானவனும் நன்கு உலர்ந்த மாம்ஸமுள்ளவனும் ஜடையும் கிருஷ்ணாஜினமும் தரித்தவனும் மரப்பட்டையை மேனியில் போர்த்துக் கொண்டவனும் மோஹம் விலகியவனுமாயிருந்துகொண்டு மஹரிஷிபோலக் கடுந்தவம் புரிந்தான். அப்பொழுது தர்மார்த்தங்களை அறிந்தவரும் சிறந்த புத்தியுள்ளவருமான விதுரரும் ஸஞ்சயனுடன் கடுமையான தவத்தில் உறுதியுள்ள சித்தமுள்ளவரும் இளைத்தவரும் மரப்பட்டையையும் சீரத்தையும் உடுத்தவருமாயிருந்துகொண்டு மனைவியுடன் கூடின அந்த அரசனை உபசரித்தார்.

இருபத்தோராவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

—:o:—

(நாரதர் முதலியோர் திருதராஷ்டிரனைக் காண வந்ததும், நாரதர் அந்தவனம் ராஜரிஷிகளுக்கு ஸ்வர்க்கம்தந்ததைத் திருதராஷ்டிரனுக்குக் கூறி அவர்களுக்கும் ஸித்திதருமென்றதும்.)

பிறகு, முனிஸ்ரேஷ்டர்களான நாரதரும், பர்வதரும், மஹா தபஸ்வியான தேவலரும், சிஷ்யருடன்கூடின வியாஸரும், மற்றுமுள்ள பண்டிதர்களான ஸித்தர்களும், வ்ருத்தனும் மிக்க தார்மிகனுமான சதயூபனென்னும் ராஜரிஷியும் திருதராஷ்டிரராஜனைப் பார்ப்பதற்காக அவ்

விடம் வந்தார்கள். மஹாராஜரே! குந்தியானவள் அவர்களுக்கு விதிப்படி பூஜையைச் செய்தாள். அந்தத் தவசிகளும் அவள் செய்த உபசாரத்தால் ஸந்தோஷமடைந்தார்கள். ஐயா! அந்த மஹரிஷிகள் அப்பொழுது மஹாத்மாவான திருதராஷ்டிரராஜனை ஸந்தோஷிக்கச் செய்து கொண்டு தர்மத்துடன்கூடின கதைகளைச் சொன்னார்கள். பிறகு, எல்லாவற்றையும் பிரத்யக்ஷமாகக் கண்டவரும் தேவரிஷியுமான நாரதர் ஒரு கதையின் நடுவில் பின்வரும் கதையைச் சொல்லலானார்.

'முற்காலத்தில் பிரம்மதேவருக்கொப்பானவரும் ஓரிடமிருந்தும் பயமில்லாதவரும் ஸஹஸ்ரசித்யரென்று சொல்லப்பட்டவரும் சதயூபனுக்குப் பிதாமஹருமான அரசர் ஒருவர் இருந்தார். தர்மாத்மாவான ஸஹஸ்ரசித்யரென்னும் அந்த அரசர் மிக்க தார்மிகனான மூத்தகுமாரனிடத்தில் ராஜ்யத்தை வைத்துவிட்டு வனம் சென்றார். பூபதியும் சிறந்த ஒளியுள்ளவருமான அவர் ஜ்வலிக்கின்ற தவத்தின் முடிவை அடைந்து இந்திரனுடைய வீடு சென்றார். ராஜரே! தவத்தால் பாவத்தை எரித்தவரான அந்த அரசரை முன்பு நான் வரும்பொழுது இந்திரனுடைய வீட்டில் பலமுறை பார்த்திருக்கிறேன். அவ்வாறே, பகதத்தனுடைய பிதாமஹனும் மனிதர்களைப் பரிபாலித்தவனுமான சைலாலயனென்னும் அரசனும் தபோபலத்தினாலேயே இந்திரனுடைய வீடு சென்றான். ராஜனே! அவ்வாறே, வஜ்ரபாணியான இந்திரனுக்கொப்பான ப்ருஷத்ரன் என்னும் ஓர் அரசன் இருந்தான். அவனும் இவ்விடம் வந்து தவம்புரிந்து தேவலோகம் சென்றான். ராஜனே! இந்த ஆரண்யத்தில் மாந்தாதாவின் புத்திரனான புருகுத்ஸனென்னும் அரசனும் சிறந்த ஸித்தியை அடைந்தான். நதிகளுள் சிறந்த நர்மதை [1]எவனுக்கு மனைவியாயிருந்ததோ அந்த அரசன் இந்த ஆரண்யத்தில் தவம்புரிந்து ஸ்வர்க்கம் சென்றான். ராஜனே! மிக்க தார்மிகனான சசலோமனென்னும் ஓர் அரசன் இருந்தான். அவனும் இந்த வனத்தில் நன்கு தவம்புரிந்து அதனால் ஸ்வர்க்கம் சென்றான். ராஜனே! நீயும் வியாஸருடைய அனுக்கிரகத்தினால் இந்தத் தபோவனத்தை அடைந்து (மற்றவரால்) அடைய முடியாததும் சிறந்ததுமான ஸித்தியை அடைவாய். ராஜஶ்ரேஷ்டனே! நீயும் தவத்தின் முடிவில் ஒளியினால் சூழப்பட்டவனாகிக் காந்தாரியுடன் அந்த மஹாத்மாக்களுடைய கதியை அடையப்போகிறாய். இந்திரனுடைய

1 இக்ஷ்வாகுவம்சத்துத் துர்யோதனன் என்பவன்; அநு, பர்வம், பக்கம் 9.

ஸமீபத்திலிருக்கும் பாண்டுவானவன் எப்பொழுதும் உன்னை நினைத்துக் கொண்டிருக்கிறான். மஹாராஜனே! அவனும் உனக்கு எப்பொழுதும் க்ஷேமத்தைச் செய்வான். உன்னுடைய மருகியும் யுதிஷ்டிரனுடைய தாயும் புகழ்பெற்றவளுமான குந்தியானவள் உனக்கும் காந்தாரிக்கும் பணிவிடைசெய்வதால் பர்த்தாவின் உலகத்தை அடைவாள். அந்த யுதிஷ்டிரன் ஸநாதனமான தர்மமல்லவா? ராஜனே! நாங்கள் இதைத் திவ்யதிருஷ்டியினால் பார்க்கிறோம். விதுரனும் மஹாத்மாவான யுதிஷ்டிரன்மீது பிரவேசிக்கப்போகிறான். ஸஞ்சயன் அவனைத் தியானம்செய்து இங்கிருந்து ஸ்வர்க்கத்தை அடையப்போகிறான்' என்று சொன்னார். கௌரவஶ்ரேஷ்டனும் மஹாத்மாவும் வித்வானுமான திருதராஷ்டிரன் மனைவியுடன் இதைக்கேட்டு ஸந்தோஷமுள்ளவனாகி நாரதருடைய வாக்கியத்தைப் புகழ்ந்து (அந்த) நாரதருக்கு நிகரற்ற பூஜையைச் செய்தான். ராஜரே! பிறகு, அந்த எல்லாப் பிராம்மணக்கூட்டங்களும் திருதராஷ்டிரராஜனுடைய ஸந்தோஷத்தால் மிக்க ஸந்தோஷமுள்ளனவாகி அப்பொழுது அடிக்கடி நாரதரை மிகப் பூஜித்தன.

இருபத்திரண்டாவது அத்யாயம்.

ஆஶ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

———:o:———

(சதயூபரால் கேட்கப்பட்ட நாரதர், திருதராஷ்டிரன் மூன்று வருஷத்துக்குப் பிறகு காந்தாரியுடன் தபோலோகமடைவானென்றது.)

பிராம்மணஶ்ரேஷ்டர்கள் நாரதருடைய அந்தவாக்கியத்தைப் புகழ்ந்தார்கள். சதயூபனென்னும் ராஜரிஷியோ நாரதரை நோக்கி, 'சிறந்த காந்தியுள்ளவரே! பகவானான உம்மால் கௌரவராஜனுக்கும் இந்த எல்லா ஜனங்களுக்கும் எனக்கும் ஶ்ரத்தை விருத்திபண்ணப்பட்டது. தேவரிஷியே! உலகங்களால் பூஜிக்கப்பட்டவரே! திருதராஷ்டிரராஜரைப்பற்றிச் சொல்ல ஒரு விருப்பம் இருக்கிறது. அதை நான் சொல்லுகிறேன்; கேளும். பிரம்மரிஷியே! எல்லாவிருத்தாந்தங்களின் உண்மையையும் அறிந்தவரும் திவ்யதிருஷ்டியுடன்கூடினவருமான நீர் மனிதர்களின் பலவித கதிகளையும் பார்க்கிறீர். பல அரசர்கள் மஹேந்திரனுடைய உலகத்தை அடைந்திருப்பதை நீர் சொன்னீர். சிறந்த முனிவரே! இந்த மன்னருக்குக் கிடைக்கும் உலகங்களை நீர்

சொல்லவில்லை. பிரபுவே! இந்த அரசரும் எப்பொழுது எப்படிப் பட்ட ஸ்தானத்தை அடைவாரென்று உம்மிடமிருந்து கேட்க விரும்புகிறேன். அதனை எனக்கு உள்ளபடி சொல்லும்' என்ற வாக்கியத்தைச் சொன்னான். அந்தச் சதயூபனால் இவ்விதம் சொல்லப்பட்டவரும் திவ்யஜ்ஞானமுள்ளவரும் சிறந்த தவமுள்ளவருமான நாரதர் ஸபையின் நடுவில் எல்லாருடைய மனத்திற்குமிசைந்ததான வாக்கியத்தைச் சொல்லலானார். 'ராஜரிஷியே! நான் (ஒரு ஸமயம்) தற்செயலாக இந்திரனுடைய ஸபைக்குச் சென்றேன். அங்கு சசீபதியான இந்திரனையும் அரசனான பாண்டுவையும் கண்டேன். ராஜனே! அங்கு இந்தத் திருதராஷ்டிரராஜன் இப்பொழுதும் செய்வதும் (ஒருவராலும்) செய்ய முடியாததுமான இந்தத்தவத்தைப்பற்றிய பின்வரும் கதை நடந்தது. அங்கு நான் இதை இந்திரன் நேரில் சொல்லக் கேட்டேன். (அதாவது)—இந்தத் திருதராஷ்டிரராஜனுக்கு ஆயுள்முடிய மூன்றுவருஷங்கள் மிச்சமிருக்கின்றன. பிறகு, வியாஸமஹரிஷியின் புத்திரனும் பெரிய பாக்கியம் பெற்றவனும் தவத்தால் பாவத்தை எரித்தவனுமான இந்தத் திருதராஷ்டிரராஜன், திவ்யாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவனும் குபேரனால் பூஜிக்கப்பட்டவனுமாகிக் காந்தாரியுடன் இஷ்டப்படி செல்லும் விமானமேறிக் குபேரனுடைய உலகத்திற்குச் செல்லப்போகிறான். தர்மாத்மாவான அவன் வியாஸருடைய தபோபலத்தால் தேவர்கள் கந்தர்வர்கள் ராக்ஷஸர்கள் இவர்களின் உலகங்களிலும் தன் இஷ்டப்படி ஸஞ்சரிக்கப்போகிறான்—(என்பது). பெரிய தேவரஹஸ்யமான இதை நான் உங்களுக்குப் பிரியத்தால் சொன்னேன். நீங்களோ கல்வியைத் தனமாகக் கொண்டவர்கள்; தவத்தால் பாவத்தை எரித்தவர்கள்' என்று சொன்னார். இவ்விதம் தேவரிஷியான அந்த நாரதருடைய இனிமையான அந்த வார்த்தையைக்கேட்டு அந்த எல்லாப் பண்டிதர்களும் அந்த அரசனும் ஸந்தோஷமுள்ளவர்களாயினர். வித்வான்களும் ஸித்தர்களுடையகதியை அடைந்தவர்களுமான அவர்கள் இவ்விதம் கதைகளைச் சொல்லிக்கொண்டு திருதராஷ்டிரனுடனிருந்து, பிறகு, இஷ்டப்படி சென்றார்கள்.

இருபத்துமூன்றாவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

-:o:—

(யுதிஷ்டிரர் முதலியோர் குந்தி முதலியோர்களின் பிரிவினாலும் அபிமன்யு முதலியவர்களின் மரணத்தினாலும் உண்டான துக்கத்தால் தம்தம் வேலைகளையும் நன்கு பாராமலிருந்தது.)

அரசரே! கௌரவேந்திரன் வனம் சென்றவுடன், பாண்டவர்கள் துக்கத்தோடும் சோகத்தோடும் கூடினவர்களும் தாயாருடைய (பிரிவினாலுண்டான) சோகத்தோடு கூடினவர்களுமானார்கள். அவ்வாறே, பட்டணத்திலுள்ள ஜனங்களெல்லோரும் ராஜனைப்பற்றித் துக்கித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது, பிராம்மணர்கள் அரசனைப்பற்றிய கதைகளைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். (அவையாவன)—பிராயம் முதிர்ந்தவனான அந்த அரசன் நிர்ஜனமானவனத்தில் எவ்விதம் வஸிப்பான்? பெரிய பாக்கியமுள்ள காந்தாரியும் பிருதையென்னும் அந்தக் குந்தியும் எவ்விதம் வஸிப்பார்கள்? ஸுகத்திற்குத்தக்கவனும் அறிவைக் கண்ணாகக் கொண்டவனும் சிறந்த மனமுள்ளவனுமான அந்த ராஜரிஷியானவன் ஸுகத்தை இழந்து பெரிதான அந்தவனத்தை அடைந்து என்ன நிலைமையை அடைந்தானோ? குந்தியானவள் செய்வதற்கு மிகவும் அரிதான காரியத்தைச் செய்தாள். அவள் புத்திரர்களையும் ராஜ்யஸம்பத்தையும் விட்டுவிட்டு வனத்தில் பிரியப்பட்டாளே! பிராதாவுக்குப் பணிவிடைசெய்பவரும் நல்ல அறிவுள்ளவருமான விதுரரும், புத்திசாலியும் எஜமானனிட்ட அன்னத்தைப் பயன்படுத்துபவனும் கவல்கண குமாரனுமான அந்த ஸஞ்சயனும் என்ன நிலைமையை அடைந்தார்களோ?—(என்பன). சிறுவர் முதலான பட்டணத்திலுள்ள அந்த ஜனங்கள் சிந்தையும் சோகமும் மேலிட்டவர்களாகி ஆங்காங்கு ஒருவரோடொருவர் சேர்ந்து (இவ்விதமான) கதைகளைச் சொல்லிக் கொண்டார்கள். அந்த எல்லாப் பாண்டவர்களும் மிக்க சோகமேலிட்டவர்களாகி வயது முதிர்ந்தவளான தாயையும் அவ்வாறே வயது முதிர்ந்தவனும் புத்திரர்களை இழந்தவனும் தந்தையுமான திருதராஷ்டிரராஜனையும் பெரியபாக்கியமுள்ள காந்தாரியையும் சிறந்த அறிவுள்ள விதுரரையும்பற்றித் துக்கித்துக்கொண்டு பட்டணத்தில் சிறிது காலம் வாஸம் செய்தார்கள். அவர்களைப்பற்றிக் கவலைப்படுகின்றவர்களான அந்தப் பாண்டவர்களுக்கு அப்பொழுது ராஜ்யத்திலும் ஸ்திரீகளிடத்திலும் வேதாத்யயனங்களிலும் விருப்பம் உண்டாகவில்லை. அவர்கள்

அரசரைப் பற்றிச் சிந்தித்தும் கோரமான அந்த ஞாதிகளின் வதத்தை அடிக்கடி நினைத்தும் மிக்க ஒழிவை அடைந்தார்கள். அந்த வீரர்கள் பாலனான அபிமன்யுவுக்குப் போர்முனையில் நேர்ந்த நாசத்தையும் சிறந்த புஜபலமுள்ளவனும் யுத்தங்களில் (புறங்காட்டி) ஓடாதவனுமான கர்ணனுக்கு நேர்ந்த மரணத்தையும் அவ்வாறே திரௌபதியின் குமாரர்களுக்கும் மற்ற ஸுஹ்ருத்துக்களுக்கும் நேர்ந்தவதத்தையும் நினைத்து மனத்துயரமுள்ளவர்களாயினர். பாரதரே! அவர்கள் சிறந்த வீரர்கள் கொல்லப்பட்டதும் ரத்தினங்களை இழந்ததுமான பூமியை எப்பொழுதும் சிந்தித்தும் ஆறுதலை அடையவில்லை. புத்திரர்களை இழந்தவளான திரௌபதியும் கோபமுள்ளவளான ஸுபத்திரையுமாகிய இரண்டுதேவிகளும் அப்பொழுது பிரீதியும் ஸந்தோஷமும் அற்றவர்களாயிருந்தார்கள். உமது முந்திய பிதாமஹர்களான அவர்கள் உத்தரையின் புத்திரனும் உன்னுடையதந்தையுமான பரிக்ஷித்தைக் கண்டு உயிரைத் தரித்துக்கொண்டிருந்தார்கள்.

இருபத்துநான்காவது அத்யாயம்.

ஆச்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

---:o:---

(யுதிஷ்டிரர் திரௌபதிமுதலியவர்களுடனும் தம்பிமாருடனும் நகரஜனங்களுடனும் குந்திமுதலியவர்களைக் காணக் காட்டுக்கு வந்தது.)

இவ்விதம், புருஷச்ரேஷ்டர்களும் தாயாரை ஸந்தோஷிக்கச் செய்கின்றவர்களும் வீரர்களுமான அந்தப் பாண்டவர்கள் தாயாரை நினைத்து மிக்க துக்கமுள்ளவர்களானார்கள். எந்தப் பாண்டவர்கள் முன்பு எப்பொழுதும் ராஜகாரியங்களில் மனத்தைச் செலுத்தினவர்களாக இருந்தார்களோ அவர்கள் அப்பொழுது பட்டணத்திலுள்ள ராஜகாரியங்களையெல்லாம் செய்யவில்லை. சோகாவேசம் கொண்டவர்கள்போல ஒன்றிலும் ஸந்தோஷமடையவில்லை. அவர்கள் ஸம்பாஷணை செய்யப்பட்டாலும் சிறிதும் மறுமொழி கூறவில்லை. வீரர்களும் (பிறரால்) அவமதிக்க முடியாதவர்களும் காம்பீர்யத்தில் கடலுக்கொப்பானவர்களுமான அவர்கள் சோகத்தால் கெடுக்கப்பட்ட அறிவுள்ளவர்களாகிப் பிரஜ்ஞையற்றவர்கள்போலிருந்தார்கள். பிறகு, அந்தப் பாண்டு புத்திரர்கள், 'மிக இளைத்தவளான குந்தியானவள் வயதுமுதிர்ந்தவர்களான திருதராஷ்டிரரையும் காந்தாரியையும் எவ்விதம் போஷிப்பாள்?'

என்று தாயாரைப்பற்றிச் சிந்தித்தார்கள். புத்திரர்களை இழந்தவரும் ஆதரவற்றவருமான அந்த அரசரும் ஒருவராக மனைவியுடன் துஷ்ட மிருகங்கள் வஸிக்கப்பெற்ற வனத்தில் எவ்விதம் வஸிப்பார்? தேவியும் பெரிய பாக்கியமுள்ளவளும் பந்துக்களை இழந்தவளுமான அந்தக் காந்தாரியும் நிர்ஜனமான வனத்தில் குருடரும் பிராயம் முதிர்ந்தவருமான பர்த்தாவை எவ்விதம் பின்தொடர்ந்து செல்வாள்?' (என்றும் சொன்னார்கள்.) இவ்விதம் சொல்லிக்கொண்டிருக்கும் அவர்களுக்கு அப்பொழுது திருதராஷ்டிரனைப் பார்க்க வேண்டுமென்கிற விருப்பத்தால் ஆவலும் (வனம்) செல்லப் புத்தியும் உண்டாயின. ஸஹதேவனோ, யுதிஷ்டிரராஜரை நமஸ்கரித்துப் பின்வரும் வசனத்தைச் சொல்லலானான். 'ஓ! ராஜேந்திரரே! (வனம்) செல்லும் விஷயத்தைப்பற்றி உம்முடைய எண்ணத்தை நான் கண்டுகொண்டேன். உம்மிடம் கௌரவத்தால் சீக்கிரமாகப் பேசுவதற்கு என்னால் முடியவில்லை. (வனம்) செல்ல வேண்டியதற்காக இதோ நான் ஆயத்தமாக இருக்கிறேன். வயது முதிர்ந்தவளும் ஜடை தரித்தவளும் தவம் செய்பவளும் தர்ப்பங்களாலும் நாணல்களாலும் காயப்படுத்தப் பட்டவளும் (பிறரால்) துக்கப்படத்தகுந்த நிலைமையிலிருப்பவளுமான அந்தக் குந்தியைப் பாக்கியத்தினால் பார்க்கப்போகிறேன். அரண்மனைகளிலும் உப்பரிகைகளிலும் வளர்ந்தவளும் மிக்க ஸுகத்தை அடைந்தவளும் (இப்பொழுது) மிகவும் துக்கத்தை அடைந்தவளும் களைத்தவளுமான தாயாரை நான் எப்பொழுது பார்ப்பேன்? பரதஶ்ரேஷ்டரே! மனிதர்களுடைய நிலைமைகள் நிலையற்றவை. (ஆகையினால்தான்,) ராஜபுத்திரியான குந்தியானவள் வனத்தில் கஷ்டப்பட்டு வஸிக்கிறாள்' என்று சொன்னான். ஸஹதேவனுடைய வார்த்தையைக் கேட்டு ஸ்திரீகளுள் சிறந்தவளான திரௌபதி தேவியானவள் யுதிஷ்டிரராஜரைப் பூஜித்துப் புகழ்ந்து சொல்லலானாள். ராஜரே! அந்தக் குந்திதேவியை நான் எப்பொழுது பார்ப்பேன்? அந்தக் குந்தியானவள் ஜீவித்திருப்பாளா? இப்பொழுது அவள் ஜீவித்திருந்தால்தான் எனக்கு ஸந்தோஷமுண்டாகும். உமக்கு எப்பொழுதும் இந்தப் புத்தியானது இருக்க வேண்டும். உம்முடைய சித்தமானது தர்மத்தில் மகிழட்டும். ராஜேந்திரரே! நீர் இப்பொழுது எங்களுக்கு மேன்மையைச் செய்யப்போகிறீரே. ராஜரே! இந்தஸ்திரீகளை, குந்தியையும் காந்தாரியையும் மாமனாரையும் பார்க்க விருப்பம் கொண்டு (வனம் போகக்) காலை முன்வைத்திருப்பவர்களாகத் தெரிந்து

கொள்ளும்' என்று சொன்னாள். பரதர்களில் சிறந்தவரே! திரௌபதிதேவியினால் இவ்வாறு சொல்லப்பட்ட அந்த அரசர், ஸேனாதிபதிகளை வரவழைத்து எல்லாரையும் நோக்கி, 'மிகுதியான தேர்களும் யானைகளுமுள்ள என்னுடைய சேனையை வெளிப்படுத்துங்கள். வனத்திலிருக்கும் திருதராஷ்டிரராஜரைப் பார்க்கப் போகிறேன்' என்ற இந்த வசனத்தைச் சொல்லினர். யுதிஷ்டிரராஜர் அந்தப்புரக்காவலாளர்களை நோக்கி, 'பலவிதமான என்னுடைய எல்லாவாகனங்களும் ஆயிரக்கணக்கான பல்லக்குக்களும் ஆயத்தம் செய்யப்பட வேண்டும். வண்டிகளும் கடைகளும் தாவளிவீடுதிகளும் பொக்கசமும் சிற்பிகளும் பொக்கசாதிகாரிகளும் குருக்ஷேத்திரத்திலுள்ள ஆஶ்ரமத்தைக்குறித்துச் செல்லவேண்டும். பட்டணத்திலுள்ள எந்த மனிதன் அரசரைப் பார்க்க விரும்புகிறானோ அவனும் தடுக்கப்படாமல் அநுமதி கொடுக்கப்பட்டும்; நன்கு ரக்ஷிக்கப்பட்டும் செல்லட்டும். என்னுடைய [1]ஸூதர்களும் [2]பௌரோகவர்களும் எல்லாச் சமையல் செய்யும் உபகரணத்தையும் பலவிதமான பக்ஷியங்களையும் போஜ்யங்களையும் வண்டிகளில் கொண்டு போகட்டும். நாளைக்கே பிரயாணமென்று பறையறையச் செய்யவேண்டும். தாமதம் வேண்டாம். இப்பொழுதே மார்க்கத்திலும் பலவிதமான வீடுகள் அமைக்கப்படட்டும்' என்று சொன்னார். அரசரே! பாண்டவரான அந்த அரசர் இவ்விதம் உத்தரவு செய்துவிட்டு மறுநாள் பிராதாக்களுடன் ஸ்திரீகளையும் வ்ருத்தர்களையும் முன்னிட்டுக்கொண்டு புறப்பட்டார். அந்த அரசர் ஜனஸமூகத்தைப் பரிபாலித்துக்கொண்டு ஐந்து தினங்கள் வெளியில் வஸித்தார். பிறகு, வனத்தைக் குறித்துச் சென்றார்.

இருபத்தைந்தாவது அத்யாயம்.

ஆஶ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

———:O:———

(யுதிஷ்டிரர் வாகனங்களிலேறிய ஸஹோதரர் முதலியவருடன் சதயூபாஶ்ரமவனம் சென்றது.)

பிறகு, பரதஶ்ரேஷ்டரான யுதிஷ்டிரர் லோகபாலர்களுக்கு ஒப்பானவர்களும் அர்ஜுனனை முதன்மையாகக் கொண்டவர்களுமான மனிதர்களால் ரக்ஷிக்கப்படுகின்ற சேனைக்குக் கட்டளையிட்டார். பிறகு,

1. சமையற்காரர்கள். 2. சமையலதிகாரிகள்.

அந்தச் சேனையில் 'பூட்டப்படட்டும்; பூட்டப்படட்டும்' என்றும் 'பூட்டியாயிற்று; பூட்டியாயிற்று' என்றும் பிரியத்துடன் உரக்கச்சொல்லுகின்ற குதிரைக்காரர்களுடைய சப்தமானது பெரிதாகத் தோன்றிற்று. ராஜரே! சில மனிதர்கள் [1]யானங்களோடும் சிலர் மிக்க வேகமுள்ள குதிரைகளோடும் சிலர் ஜ்வலிக்கின்ற அக்னிக்கொப்பான பொற்றேர்களோடும் மற்றும் சிலர் சிறந்த யானைகளோடும் சிலர் ஒட்டகங்களோடும் சென்றார்கள். [2]நகரங்களாலும் பிராஸங்களாலும் போர் புரிகின்றவர்களான மற்றவர்கள் காலாட்களாகச் சென்றார்கள். திருதராஷ்டிரனைப் பார்க்க விருப்பமுள்ளவர்களான பட்டணத்திலும் கிராமத்திலுமுள்ள ஜனங்களும் பலவித வாகனங்களோடு கௌரவராஜரான யுதிஷ்டிரரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். படைத்தலைவரும் கௌதமருமான அந்தக் கிருபாசாரியரும் அரசருடைய வசனத்தால் சேனையை நடத்திக்கொண்டு ஆஸ்ரமத்தைக் குறித்துச் சென்றார். பிறகு, கௌரவராஜரும் கௌரவஸ்ரேஷ்டருமான யுதிஷ்டிரர் பிராம்மணர்களால் சூழப்பட்டவரும் அநேகர்களான ஸூதர்களாலும் மாகதர்களாலும் வந்திகளாலும் ஸ்தோத்திரம் செய்யப்படுகின்றவரும் தலையில் பிடிக்கப்படுகின்ற வெண்குடையுடன் கூடினவருமாகப் பெரிய தேர்ப்படையுடன் சென்றார். பயங்கரமான செய்கையுள்ளவனும் வாயுகுமாரனுமான பீமஸேனன் மலைக்கொப்பானவைகளும் ஆயத்தமாயிருக்கும் யந்திரங்களுடனும் ஆயுதங்களுடனும் கூடினவைகளுமான யானைகளோடு சென்றான். அவ்வாறே, மாத்ரீபுத்திரர்களான நகுலஸஹதேவர்களும் குதிரைகளின்மீது ஏறிக்கொண்டு (வீரர்களால்) நன்கு சூழப்பட்டவர்களும் வேகமாகச் செல்லுகின்றவர்களும் கவசமணிந்தவர்களும் த்வஜமுள்ளவர்களுமாகச் சென்றார்கள். இந்திரியங்களை ஜயித்தவனும் சிறந்த தேஜஸுள்ளவனுமான அர்ஜுனனும், ஸூர்யனுடைய காந்திபோன்ற காந்தியுள்ளதும் வெண்குதிரைகள் பூட்டப்பட்டதும் திவ்யமுமான ரதத்துடன் அரசனைப் பின்தொடர்ந்து சென்றான். திரௌபதி முதலான ஸ்திரீகளின்கூட்டங்களும் பல்லக்குக்களில் ஏறிக்கொண்டு ஸ்திரீபாலகர்களால் ரக்ஷிக்கப்பட்டு மிகுதியான தனத்தைத் தானஞ்செய்துகொண்டு சென்றார்கள். பரதஸ்ரேஷ்டரே! தேர்களும் யானைகளும் குதிரைகளும் நிறைந்ததும் புல்லாங்குழல் வீணை இவைகளின் ஒலியுள்ளதுமான அந்தப்பாண்டவருடைய சேனையானது

1. 'மனிதர்களால் சுமக்கத்தக்கவை' என்பது பழைய உரை.
2. புலிநகம்

அப்பொழுது பிரகாசித்தது. ராஜரே! அந்தக் கௌரவஸ்ரேஷ்டர்கள் அழகான நதிகளின் தீரங்களிலும் தடாகங்களிலும் வஸித்துக்கொண்டு நாளடைவில் சென்றார்கள். சிறந்த தேஜஸுள்ள யுயுத்ஸுவும் புரோஹிதரான தௌம்யரும் யுதிஷ்டிரருடைய வசனத்தால் பட்டணத்தை ரக்ஷித்துக்கொண்டிருந்தார்கள். பிறகு, யுதிஷ்டிரராஜர் கிரமமாக மிக்க பரிசுத்திகரமான யமுனாநதியைக் கடந்து குருக்ஷேத்திரம் சென்றார். குருகுலத்தில் பிறந்தவரே! அந்த யுதிஷ்டிரர் புத்திசாலியான சதயூபனென்னும் அந்த ராஜரிஷியினுடைய ஆஸ்ரமத்தையும் திருதராஷ்டிரனுடைய ஆஸ்ரமத்தையும், தூரத்தில் கண்டார். பரதஸ்ரேஷ்டரே! பிறகு, எல்லா ஜனங்களும் மிக்க ஸந்தோஷமடைந்து சீக்கிரமாக அந்த வனத்தை மிகப்பெரிய சப்தங்களால் நிரப்பிக்கொண்டு பிரவேசித்தார்கள்.

இருபத்தாறுவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

———:o:———

(யுதிஷ்டிரர்முதலியோர் திருதராஷ்டிரன்முதலியவர்களைக் கண்டு தந்தம் பெயரைச்சொல்லி வணங்கியதும், திருதராஷ்டிரன் நிலைமையைக் கண்டு வருந்திய அவர்களை அவன் தேற்றியதும்.)

பிறகு, அந்தப் பாண்டவர்கள் தூரத்திலேயே (வாகனங்களிலிருந்து) இறங்கிக் காலால் நடந்து மிக்க வணக்கத்துடன் திருதராஷ்டிரராஜனுடைய ஆஸ்ரமத்தைக்குறித்துச் சென்றார்கள். அந்த எல்லா யுத்தவீரர்களும் பட்டணத்திலிருந்து வந்த ஜனங்களும் கௌரவஸ்ரேஷ்டர்களுடைய மனைவிகளும் அப்பொழுது கால்களாலேயே நடந்து சென்றார்கள். பிறகு, அந்தப் பாண்டவர்கள் ஒருவருமில்லாததும் மான் கூட்டங்களால் வியாபிக்கப்பட்டதும் வாழைத் தோட்டங்களால் விளங்கும்படி செய்யப்பட்டதுமான திருதராஷ்டிரருடைய ஆஸ்ரமத்தை அடைந்தார்கள். பிறகு, விரதானுஷ்டானமுள்ளவர்களான தபஸ்விகள், வந்திருக்கும் பாண்டவர்களைப் பார்ப்பதற்காக மிக்க களிப்புடன் அவ்விடம் வந்தார்கள். பிறகு, யுதிஷ்டிரராஜர் கண்ணீரால் நனைக்கப்பட்டவராகி அவர்களை நோக்கி, 'கௌரவ வம்சத்தைப் போஷிப்பவரும் எங்களுடைய பெரிய தந்தையாருமான அவர் எங்கே சென்றார்?' என்று வினவினார். பிறகு, அவர்கள், அவரை நோக்கி,

'பிரபுவே! அவர் ஸ்நானம் செய்துவிட்டுப் புஷ்பங்களும் குடத்தில் தீர்த்தமும் கொண்டுவருவதற்காக யமுனைக்குப் போயிருக்கிறார்' என்ற வாக்யத்தைச் சொன்னார்கள். பிறகு, அந்தப் பாண்டவர் அவர்களால் சொல்லப்பட்ட மார்க்கத்தோடு கால்நடையாகச் சீக்கிரம் சென்று அருகில் அவர்களனைவரையும் கண்டார்கள். பிறகு, அவர்கள் பிதாவைப் பார்க்க விரும்பி வேகமாகச் சென்றார்கள். புத்திசாலியான ஸஹதேவனோ, வேகமாகக் குந்தியிருக்குமிடத்திற்கு ஓடித் தாயாருடைய பாதங்களைப் பிடித்துக்கொண்டு உரக்க அழுதான். அந்தக் குந்தியும், கண்ணீரால் கலக்கமுற்ற முகமுள்ளவளாகிப் பிரியனான புத்திரனைப் பார்த்து (அந்த)ச் சிறியகுமாரனை இருகைகளாலும் கட்டித் தூக்கிக் காந்தாரியினிடம் ஸஹதேவன் வந்திருப்பதாகச் சொன்னாள். குந்தியானவள், பிறகு, யுதிஷ்டிரராஜரையும் பீமஸேனனையும் அர்ஜுனனையும் நகுலனையும் கண்டு வேகமாக அருகில் வந்தாள். அந்தக் குந்தி, தம்பதிகளும் புத்திரர்களை இழந்தவர்களுமான அந்தக் காந்தாரிக்கும் திருதராஷ்டிரனுக்கும் முன்னால் (நின்று) அவர்களை இழுத்துக் கொண்டு வந்தாள். பிறகு, அந்தப் பாண்டவர்கள் அவளைக்கண்டு பூமியில் விழுந்தார்கள். ராஜரே! புத்திரர்களை இழந்தவர்களான அவ்விருவர்களின் பாதங்களிலும் விழுந்தார்கள். உறுதியான சித்தமுள்ளவனும் மேதாவியும் பிரபுவுமான திருதராஷ்டிரராஜன் அவர்களைக் குரலைக்கொண்டும் தொட்டும் தெரிந்துகொண்டு ஸமாதானப்படுத்தினான். பிறகு, மஹாத்மாக்களான அந்தப் பாண்டவர்கள் கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு காந்தாரியையும் அரசனையும் தாயையும் விதிப்படி பூஜித்தார்கள். அப்பொழுது, அந்தப் பாண்டவர்கள் தாயாலும் மறுபடியும் தேறுதலடையும்படி செய்யப்பட்டுப் பிரஜ்ஞையை அடைந்து எல்லாருடைய தீர்த்தகலசங்களையும் தாம் வாங்கிக்கொண்டார்கள். அவ்வாறே, புருஷஸ்ரேஷ்டர்களுடைய மனைவிகளும் அந்த அந்தப்புரஜனங்களும் பட்டணத்து ஜனங்களும் கிராமத்துஜனங்களும் அப்பொழுது அந்தத் திருதராஷ்டிரராஜனைப் பார்த்தார்கள். அப்பொழுது, யுதிஷ்டிரராஜர் அந்த ஜனங்களைப் பெயருடனும் கோத்திரத்துடனும் (அரசனுக்குத்) தெரிவித்தார். அவனும் அவர்களை உபசரித்தான். அவர்களால் சூழப்பட்டவனும் ஆனந்த பாஷ்பத்தால் கலங்கின கண்களுள்ளவனுமான அந்தத் திருதராஷ்டிரராஜன் தன்னை முன்போல் ஹஸ்திநபுரத்தில் வீட்டில் இருப்பவனாக எண்ணினான். புத்திசாலியான அந்த அரசனும் காந்தாரியும் குந்தியும், திரௌபதி முதலான

மருமக்களால் நமஸ்கரிக்கப்பட்டு ஆசீர்வாதம் செய்தனர். பிறகு, திருதராஷ்டிரன் [1]ஸித்தர்களாலும் சாரணர்களாலும் ஸேவிக்கப்பட்டதும் பார்க்க விருப்பமுள்ளவர்களால் நிறைந்ததும் நக்ஷத்திரக்கூட்டங்களால் வியாபிக்கப்பட்ட ஆகாயம் போன்றதுமான ஆஸ்ரமத்திற்கு வந்தான்.

இருபத்தேழாவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

—:o:—

(ஸஞ்சயன் தவசிகளுக்கு யுதிஷ்டிரர் முதலியோரைக் காட்டிப் பெயர் முதலியவற்றையும் கூறியது.)

பரதஸ்ரேஷ்டரே! அந்தத் திருதராஷ்டிரராஜன், புருஷஸ்ரேஷ்டர்களும் அழகிய தாமரைமலர்போன்ற கண்களுள்ளவர்களும் பிராதாக்களுமான அந்தப் பாண்டவர்களுடனும், விசாலமான மார்பையுடையவர்களும் கௌரவராஜருடைய புத்திரர்களுமான பாண்டவர்களைப் பார்ப்பதற்காகப் பலதேசங்களிலிருந்துவந்தவர்களும் பெரிய பாக்கியமுள்ளவர்களுமான தாபஸர்களுடனும், அந்த ஆஸ்ரமத்தில் உட்கார்ந்தான். அந்தத் தாபஸர்கள், 'இவர்களுள் யுதிஷ்டிரர் யார்? பீமன் யார்? அர்ஜுனன் யார்? நகுலன் யார்? ஸஹதேவன் யார்? புகழ்பெற்ற திரௌபதி யார்? அறிய விரும்புகிறோம்' என்று வினவ, அப்பொழுது ஸூதனான ஸஞ்சயன் அவர்களுக்கு அந்தப் பாண்டவர்களையும் திரௌபதியையும் மற்றுமுள்ள எல்லாக் கௌரவஸ்திரீகளையும் முக்கியமாகப் பெயருடன் சொல்லலானான். ஸஞ்சயன், 'ஸுவர்ணம்போலச் சுத்தமான மஞ்சள் நிறமுள்ளவரும் மெலிந்தவரும் பெரியஸிம்மம்போல மிக வளர்ந்திருப்பவரும் நீண்டுஉயர்ந்த மூக்குள்ளவரும் அகன்றும் நீண்டும் சிவந்துமிருக்கிற கண்களுள்ளவருமான இவர் கௌரவராஜரான யுதிஷ்டிரர். மதம்கொண்ட கஜராஜன்போலச் செல்பவனும் புடம் போட்ட ஸுவர்ணம்போலச் சுத்தமான மஞ்சள் நிறமுள்ளவனும் பருத்த விசாலமான தோள்களுள்ளவனும் பருத்தும் நீண்டுமிருக்கிற கைகளுள்ளவனுமான இவன் பீமஸேனன். இவனைப் பாருங்கள்; பாருங்கள். இவனுக்குப் பக்கத்திலிருப்பவனும் சிறந்த வில்லாளியும் கருமை நிறமுள்ளவனும் தருணனும் கஜயூதபதிபோலப் பிரகாசிப்பவனும் ஸிம்மம்போல் உயர்ந்த தோள்களுள்ளவனும் யானைபோல் உல்லாஸ

---

1. இதை ஆகாயத்திற்கு விசேஷணமாகவும் கொள்ளலாம்.

மாக நடப்பவனும் தாமரைமலர்போன்ற விசாலமான கண்களுள்ளவனு மான இந்தவீரன் அர்ஜுனன். குந்தியின் பக்கத்தில் இருப்பவர்களும் புருஷோத்தமர்களும் விஷ்ணுவுக்கும் மஹேந்திரனுக்கும் ஒப்பானவர்க ளும் அழகிலும் வன்மையிலும் சீலத்திலும். மானிடலோகத்தில் முழு தும் ஒப்பில்லாதவர்களுமான இவர்கள் இரட்டையர்கள். தாமரை இதழ் போல நீண்ட கண்களுள்ளவளும் சிறிது யௌவனப் பருவத்தை அடைந்தவள்போலிருப்பவளும் நீலோத்பலம் போன்ற காந்தியுள்ள வளும் நகரதேவதை போன்றவளும் வடிவமெடுத்துவந்த லக்ஷ்மிபோல நிற்பவளுமான இவள் திரௌபதி. பிராம்மணஸ்ரேஷ்டர்களே! இவளுக் குப் பக்கத்தில் நிற்பவளும் ஸுவர்ணத்திற்கொப்பான மேனியுள்ள வளும் வடிவத்துடன்கூடின பார்வதிபோன்றவளும் ஸத்யம் தவறாத வளுமான இவள், சக்கரத்தை ஆயுதமாகக்கொண்டவரும் ஒப்பற்றவரு மான அந்த வாஸுதேவருடைய ஸஹோதரி. ஸுவர்ணம்போலச் சுத்தமான மஞ்சள் நிறமுள்ளவளான இவள் நாகராஜனுடைய புத்திரி யும் அர்ஜுனனுடைய மனைவியுமான உலூபிகை. [1]புதிய இலுப்பைப் புஷ்பங்களுக்கொப்பான நிறமுள்ள இவள் ராஜகுமாரியான சித்ராங் கதை. செழுமையான நீலோத்பலமாலைக்கொப்பான நிறமுள்ள இவள் மன்னர்களுடைய படைகளுக்குத் தலைவனும் எப்பொழுதும் [2]அர்ஜுன னுக்குமேற்போக முயல்பவனும் அரசனுமான திருஷ்டத்யும்னனுடைய தங்கை; பீமஸேனனுடைய முக்ய மனைவி. சம்பகமாலைபோல மஞ்சள் நிறமுள்ளவளான இவள் ஜராஸந்தனென்று பிரஸித்திபெற்றவனும் மகததேசாதிபதியுமான மன்னனுடைய புத்திரி; மாத்ரீயின் இளைய குமாரனான ஸஹதேவனுடைய மனைவி. நீலோத்பலம்போலக் கருமை நிறமுள்ள சரீரமுள்ளவளும் தாமரைமலர்போல நீண்ட கண்களுள்ளவ ளும் மரத்திற்கருகிலுள்ள கொடிபோல நிற்பவளுமான மற்றும் இவள் மாத்ரீயின் மூத்தகுமாரனான நகுலனுடைய மனைவி. புடம் போட்ட ஸுவர்ணம்போல மஞ்சள் நிறமுள்ளவளும் புத்திரனையுடையவளுமான

---

1. 'ஸமமான ஜாதியில் பிறந்தவளும் புதிய இலுப்பைப் புஷ்பங்களை அணிந்தவளும்' என்பது பழைய உரை.

2. 'பஸ்பர்த்த க்ருஷ்ணேந ஸதா ந்ருபோ யஃ' என்பது மூலம். 'கிருஷ் ணனோடு எப்போதும் ஸ்பர்த்தையுள்ள சல்யன்' என்று நீலகண்ட வ்யாக்யா னம் கூறுகிறது. 'க்ருஷ்ணேந' என்பதற்கு 'அர்ஜுனனோடு' என்று பொருள் கொண்டு 'அர்ஜுனனோடு எப்போதும ஸ்பர்த்தையுள்ள திருஷ்டத்யும்னன்' என்று லக்ஷாபரண வ்யாக்யானம் கூறுகிறது. இங்கே லக்ஷாபரண வ்யாக்யா னத்தின் கருத்தே கொள்ளப்பட்டது.

இவள் விராடராஜனுடைய புத்திரியும் யுத்தத்தில் ரதத்தில் இருக்கும் துரோணர் முதலான அந்த வீரர்களால் ரதத்தை இழந்திருக்கும் ஸமயத்தில் கொல்லப்பட்டவனான அபிமன்யுவின் மனைவியுமான உத்தரை. (அலங்காரமின்றி) வகிர்ந்த கூந்தலுள்ளவர்களும் வெண்மையான உத்தரீயமுள்ளவர்களும் நூற்றுக்குமேலிருப்பவர்களுமான இவர்கள் மன்னர்களின் மனைவிகளும் மானிட வீரர்களால் புத்திரர்களும் பர்த்தாக்களும் கொல்லப்பட்டவர்களுமான முதியவரான இந்தத் திருதராஷ்டிரராஜருடைய மருகிமார்கள். [1]பிரம்மத்தைப்பற்றிய எண்ணமுள்ளவர்களே! கபடமற்ற புத்தியும் ஸ்வபாவமுமுள்ளவர்களே! உங்களால் வினவப்பட்டவர்களும் மிக்க பரிசுத்தமான ஸ்வபாவமுள்ளவர்களும் மன்னர்களுடைய மனைவிகளுமான இவர்களையெல்லாம் முக்கியமானவர்களாக உங்களுக்குச்சொன்னேன். நீங்களெல்லாரும் சிறந்த தபோபலமுள்ளவர்கள்; பொறுமையுள்ளவர்கள்; இந்திரியங்களை அடக்கினவர்கள்; நற்குலத்தில் பிறந்தவர்கள்' என்று சொன்னார். (அந்தத்) தவஞ்செய்வோர்களெல்லாரும் போனபின், கௌரவருள் வயதுமுதிர்ந்தவனும் சிறந்தவனுமான அந்தத் திருதராஷ்டிரராஜன் இவ்விதம் அந்த ராஜபுத்திரர்களுடன் சேர்ந்து அப்பொழுது க்ஷேமத்தையெல்லாம் விசாரித்தான். யுத்த வீரர்களும், அந்த ஆஶ்ரம மண்டலமென்றெண்ணி, வாகனத்தை விட்டுப் பிரவேசித்தும் ஸ்திரீகளும் முதியோர்களும் பாலர்களும் நன்கு பிரவேசித்துமிருக்கும்பொழுது, (அரசன்) அவர்களைத் தக்கபடி க்ஷேமங்களை விசாரித்தான்.

இருபத்தெட்டாவது அத்யாயம்.

ஆஶ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

—:o:—

(திருதராஷ்டிரனும் யுதிஷ்டிரரும் ஒருவரை ஒருவர் க்ஷேமம் விசாரித்ததும், விதுரரைப்பற்றி யுதிஷ்டிரர் கேட்டதும், விதுரர் கூட்டத்தைக் கண்டு விலகுவதை ஒருவன் காட்ட யுதிஷ்டிரர் விரைந்து விதுரரிடம் ஓடியதும், அவர் யுதிஷ்டிரரிடம் யோகத்தால் பிரவேசித்ததும், யுதிஷ்டிரர் அந்த அதிசயத்தைத் திருதராஷ்டிரன்முதலியோருக்குச் சொல்லியதும்.)

திருதராஷ்டிரன், 'யுதிஷ்டிர! சிறந்த கைகளுள்ளவனே! நீ எல்லாப் பிராதாக்களுடனும் பட்டணத்திலும் கிராமத்திலுமுள்ள ஜனங்களுட

1. 'பிரம்மண்ய பாவா ருஜுபுத்திஸத்வா:' என்று மாற்றப்பட்டது.

னும் க்ஷேமமாக இருக்கிறாயா? ராஜனே! உன்னை அடுத்துப் பிழைப்ப வர்களும் உன்னுடைய மந்திரிகளும் வேலைக்காரர்வகைகளும் ஆசாரியர் களும் க்ஷேமமாக இருக்கிறார்களா? அவர்கள் உன்னுடைய தேசத்தில் பயமின்றி வஸிக்கின்றனரா? புராதனமாகவுள்ளதும் ராஜரிஷிகளால் அநுஷ்டிக்கப்பட்டதுமான நடையை அநுஸரிக்கிறாயா? நீதிகளைக் கடவாமல் உன்னுடைய பொக்கசம் நிரப்பப்படுகிறதா? பகைவர்களி டத்திலும் மத்யஸ்தர்களிடத்திலும் மித்திரர்களிடத்திலும் (அவரவர் களுக்குத்) தக்கபடி நடந்துகொள்ளுகிறாயா? பிராம்மணர்களுக்கு அக் கிரஹாரங்களைக் கொடுத்து நன்கு பரிபாலிக்கிறாயா? பரதஶ்ரேஷ்டனே! உன்னுடைய நல்லொழுக்கத்தால் பகைவர்களும் ஸந்தோஷப்படுகின்ற னரா? (அப்படியிருந்தால்) பட்டணத்து ஜனங்களும் வேலைக்காரர்களும் பந்துவும் ஸந்தோஷிக்கிறார்களா என்று விசாரிக்கவும் வேண்டுமோ? ராஜேந்திர! நீ ஶ்ரத்தையுடன் பித்ருக்களையும் தேவர்களையும் உத்தேசித் து யாகம் செய்கிறாயா? பாரத! அதிதிகளை அன்னபானங்களால் பூஜிக் கிறாயா? குடும்பிகளான பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் வைஶ்யர் களும் சூத்திரர்களும் தங்கள் கர்மங்களை அநுஷ்டித்துக்கொண்டு உன் னுடைய நீதிமார்க்கத்தில் இருக்கின்றனரா? ஸ்திரீகளும் பாலர்களும் விருத்தர்களும் துயரப்படாமலும் உன்னிடம் யாசியாமலும் இருக்கின்ற னரா? புருஷஶ்ரேஷ்டனே! உன்னுடைய வீட்டில் ஸுமங்கலிகள் பூஜிக்கப்படுகின்றனரா? மஹாராஜனே! இந்த ராஜரிஷிவம்சமானது உன்னை அரசனாக அடைந்து தக்க கீர்த்தி குன்றாமலிருக்கின்றதா?' என்று வினவினன். இவ்விதம் வினவுகின்ற அந்தத்திருதராஷ்டிரனை நோக்கி நியாயத்தை அறிந்தவரான அந்த யுதிஷ்டிரர், குசலப்பிரஶ் னத்துடன்கூடின வாக்கியத்தை மறுமொழியாகக் கூறலானர்.

யுதிஷ்டிரர், 'ராஜரே! உமக்குத் தவம் வ்ருத்தியடைகின்றதா? உமக்கு ஶ்ரமமும் சிறிதாக இருக்கிறதா? என்னுடைய தாயான இவளும் களைப்பின்றிப் பணிவிடை செய்கிறாளா? ராஜரே! இவளுடைய வனவாஸ மானது பயனுள்ளதாகுமா? என்னுடைய பெரிய தாயும் குளிர்ச்சியினு லும் காற்றினுலும் வழிநடப்பதாலும் மெலிந்தவளாகச் செய்யப்பட்ட வளும் கோரமான தவத்துடன்கூடினவளும் தேவியுமான இந்தக் காந் தாரியும் துயரப்படாமலிருக்கிறாளா? கொல்லப்பட்டவர்களும் சிறந்த வீரியமுள்ளவர்களும் க்ஷத்திரியதர்மத்தை முக்கிய கதியாகக்கொண்ட வர்களுமான புத்திரர்களையும் எப்பொழுதும் பாபத்தைச் செய்தவர் களான எங்களையும் நினையாமலிருக்கிறாளா? ராஜரே! இந்த விதுரர்

எங்கே? அவரை நாங்கள் காணவில்லையே? இந்த ஸஞ்சயரும் தவத்தில் உறுதிபெற்று க்ஷேமமாக இருக்கிறாரா?' என்று வினவினார். இவ்விதம் வினவப்பட்ட திருதராஷ்டிரன், அந்த மன்னரை நோக்கி, 'புத்திரனே! விதுரன் க்ஷேமமாக இருக்கிறான்; கோரமான தவத்தை அடுத்திருக்கிறான். வாயுவை ஆகாரமாகக் கொண்டவனும் (வேறு) ஆகாரமில்லாதவனும் இளைத்தவனும் நரம்புகள் நிறைந்தவனுமாயிருக்கிறான். அவன் ஒருஸமயம் பிராம்மணர்களால் இந்தச் சூன்யமான வனத்தில் ஓரிடத்தில் காணப்படுகிறான்' என்று சொன்னார். அவன் இவ்விதம் சொல்லிக்கொண்டிருக்கும்போது, ஜடைதரித்தவரும் [1]வாயில் கல்லைக்கௌவிக்கொண்டிருப்பவரும் இளைத்தவரும் திகம்பரரும் அழுக்கினால் பூசப்பட்ட சரீரமுள்ளவரும் காட்டிலுள்ள புழுதிபடிந்தவரும் தூரத்தில் காணப்பட்டவருமான விதுரர், 'தர்மாத்மாவான விதுரர் ஜனத்தைக் கண்டு இதோ திரும்புகிறார்' என்று அப்பொழுது அரசனிடம் சொல்லப்பட்டார். ஆஶ்ரமத்திலுள்ள ஜனத்தைக்கண்டு சீக்கிரமாகத் திரும்பிக் கோரமான வனத்தில் பிரவேசிக்கின்றவரும் ஓரிடத்தில் காணப்பட்டும் ஓரிடத்தில் காணப்படாமலுமிருப்பவருமான அந்த விதுரரை யுதிஷ்டிரராஜர் ஒருவராகவே பின்தொடர்ந்து ஓடினார். அரசர், 'ஓ! ஓ! விதுரரே! நான் உமக்குப் பிரியனான யுதிஷ்டிரன்' என்று சொல்லிக்கொண்டு முயற்சியுடன் அவருக்கு எதிரில் வந்தார். பிறகு, அறிஞருள் சிறந்தவரான விதுரர் அந்த வனமத்தியில் பரிசுத்தமும் ஏகாந்தமுமான இடத்தில் ஓர்மரத்தில் சாய்ந்துகொண்டு நின்றார். சிறந்த புத்தியுள்ள யுதிஷ்டிரராஜர் மிக இளைத்தவரும் உருவத்தால் மட்டும் அறிவிக்கப்பட்டவரும் சிறந்த புத்தியுள்ளவருமான அவரைத் தெரிந்துகொண்டார். ராஜாவானவர், 'நான் யுதிஷ்டிரன்' என்ற வாக்கியத்தைச் சொல்லி விதுரருடைய [2]ஆஶ்ரமத்தில் எதிரில் நின்றார். அவரும் குறிப்பால் மறுமொழி கூறினார். பிறகு, அந்த விதுரர் மனத்தை ஒருவழிப்படுத்தி இமைகொட்டாமலிருந்துகொண்டு தம்முடைய நேத்திரத்தை அவருடைய நேத்திரத்தோடுசேரும்படி செய்து, அந்த அரசரை உற்றுப்பார்த்தார். புத்திசாலியான விதுரர் (தம்முடைய) அவயவங்களை (அவருடைய) அவயவங்களுடனும் பிராணன்களைப் பிராணன்களுடனும் இந்திரியங்களை இந்திரியங்களுடனும் பிரவேசிக்கும்படி செய்தார். தேஜஸினால் ஜ்வலிப்ப

---

1. இப்படி செய்வது மௌனம் கருதிப் போலும்.

2. 'விதுரர் கேட்கும்படி எதிரில் நின்று அவரைத் துதித்தார்' என்பது வேறுபாடத்தின் பொருள்.

வர் போலிருக்கும் அந்த விதுரர், யோகபலத்தை அவலம்பித்து, அரச ரான தர்மராஜருடைய சரீரத்தில் பிரவேசித்தார். அப்பொழுது, யுதிஷ்டிரராஜர், விதுரருடைய சரீரத்தை அவ்வாறே நிச்சலமான கண்களுள்ளதும் விருக்ஷத்தை ஆச்ரயித்ததும் ஜீவனை இழந்ததுமாகக் கண்டார். மிக்கதேஜஸுள்ளவரும் பாண்டவருமான தர்மராஜர் அப்பொழுது தம்மைப் பலமடங்கு பலமுள்ளவராக எண்ணினார்; தாமும் விதுரரும் ஒரே தர்மத்தின் அம்சத்திலிருந்து பிறந்தவர்களென்பதையும் நினைத்துக்கொண்டார். ராஜரே! மிக்க தேஜஸுள்ள யுதிஷ்டிரர், வியாஸர் சொல்லியபடி தமக்குப் புராதனமாகவுள்ளதும் வரப்போகின்றதுமான யோகதர்மத்தை முழுதும் நினைத்துக்கொண்டார். வித்வானான தர்மராஜரும் அப்பொழுது அவருக்கு அவ்விடத்தில் ஸம்ஸ்காரம் செய்ய விரும்பித் தகனம் செய்ய விருப்பமுள்ளவரானார். பிறகு, (அசரீரியான) வாக்கானது, 'ஓ! ஓ! ராஜரே! விதுரரென்று பெயருள்ள இந்தச் சரீரத்தை நீர் இங்கு இவ்விதம் தகனம் செய்யவேண்டாம். இவர் ஸநாதனமான தர்மம். பாரதரே! இவருக்கு [1]வைகர்த்தன மென்னும் உலகம் கிடைக்கப்போகிறது. பகைவரை வாட்டுபவரே! இவர் யதிதர்மத்தை அடைந்தவர். இவர் துக்கிக்கப்படத்தக்கவரல்லர்' என்று சொல்லிற்று. இவ்விதம் சொல்லப்பட்ட அந்தத் தர்மராஜர், மறுபடியும், அவ்விடமிருந்து திரும்பி விசித்திரவீர்யனுடைய குமாரனை திருதராஷ்டிரராஜனுக்கு அதை முழுதும் அறிவித்தார். பிறகு, தைரியமுள்ள அந்தத் திருதராஷ்டிரராஜனும் அந்த எல்லா ஜனங்களும் பீமஸேனன்முதலானவர்களும் மிக்க ஆச்சரியமடைந்தார்கள். திருதராஷ்டிர ராஜன் அதைக் கேட்டுப் பிரீதியுள்ளவனாகித் தர்மராஜரை நோக்கி, 'ராஜனே! என்னுடையனவான இந்தத் தீர்த்தத்தையும் கிழங்கையும் கனியையும் பெற்றுக்கொள். மனிதன் எதைப் புஜிக்கிறானோ அதையே அவன் அதிதிக்குக் கொடுக்கவேண்டுமென்று கருதப்பட்டிருக்கிறது' என்று சொன்னான். இவ்விதம் சொல்லைக்கேட்ட அந்தத் தர்மபுத்திரர் அரசனை நோக்கி, 'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லி, அரசன் கொடுத்த கனியையும் கிழங்கையும் தம்பிகளுடன் புஜித்தார். அவர்கள் எல்லாரும் கனியையும் கிழங்கையும் ஜலத்தையும் புஜித்துவிட்டு, பிறகு, மரங்களின் அடிகளில் இடத்தை ஏற்படுத்திக்கொண்டு அன்றிரவு வாஸம் செய்தார்கள்.

1. 'ஸாந்தானிகமென்னும் உலகங்கள்' என்பது வேறுபாடம்.

இருபத்தோன்பதாவது அத்யாயம்.

ஆஶ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

——:o:——

(யுதிஷ்டிரர் திருதராஷ்டிரனிடம் அநுமதிபெற்றுத் தம்பிமாருடன் மஹரிஷிகளின் ஆஶ்ரமங்களைப் பார்த்ததும், சதயூபர் முதலியவர்களும் சிஷ்யருடன்கூடிய வியாஸரும் திருதராஷ்டிரனுடைய ஆஶ்ரமத்துக்கு வந்ததும்.)

அரசரே! பிறகு, புண்ணியமான கர்மமுள்ள இவர்களுக்கு ஆஶ்ரமத்தில் சுபமானதும் நக்ஷத்திரங்கள் நிறைந்ததுமான அந்த இரவு சென்றுகொண்டிருந்தது. பிறகு, அவர்களுக்கு அவ்விடத்தில் தர்மத்தையும் அர்த்தத்தையும் நிமித்தமாகக்கொண்டனவும் விசித்ரமான பதங்களின் பிரயோகமுள்ளனவும் பலவித ஶ்ருதிகளுடன்கூடினவைகளுமான கதைகள் நடந்தன. ராஜரே! அப்பொழுது, பாண்டவர்கள் மிகச் சிறந்த சயனங்களை விட்டுவிட்டுத் தாயைச்சூழ்ந்து நாற்புறங்களிலும் பூமியில் சயனம் செய்தனர். அப்பொழுது, அந்தப் புருஷஶ்ரேஷ்டர்கள் சிறந்த மனமுள்ள திருதராஷ்டிரராஜன் எதை ஆகாரம் செய்தானோ அதையே புஜித்து அன்றிரவு வஸித்தார்கள். இரவு சென்றவுடன், யுதிஷ்டிரராஜர் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு பிராதாக்களுடனும் அந்தப்புரங்களுடனும் பரிவாரங்களுடனும் வேலைக்காரர்களுடனும் புரோஹிதருடனும் திருதராஷ்டிரனுடைய அநுமதியின்மேல் ஆஶ்ரம மண்டலத்தை ஸுகமாக ஒவ்வோர் இடத்தையும் பார்த்தார். அந்த ஆஶ்ரமங்களில் நன்கு ஜ்வலிக்கின்ற அக்னியுள்ளவைகளும் ஸ்நானம் செய்தவர்களும் அக்னியில் ஹோமம் செய்தவர்களுமான முனிவர்களால் அருகிலிருக்கப் பெற்றவைகளும் வனத்திலுள்ள புஷ்பஸமூஹங்களோடும் நெய்யை ஹோமம் செய்வதால் கிளம்பின புகைகளோடும் வேதமே வடிவெடுத்தாற்போன்ற சரீரங்களையுடைய முனிவர்களின் கூட்டத்தோடும் கூடினவைகளுமான அந்த வேதிகளையும் பார்த்தார். பிரபுவே! அந்த ஆஶ்ரம மண்டலமானது ஆங்காங்கு பயமின்றித் தங்கியிருக்கும் மான்களின் கூட்டங்களாலும் பயமின்றிக் கானம்செய்வதுபோலக் (கத்துகின்ற) பறவைக் கூட்டங்களாலும் மயில்களுடைய கேகாசப்தங்களாலும் [1]தாத்யூஹங்களுடைய ஒலிகளாலும் ஸுககரமாகவும் காதுக்கு இனிமையாகவுமிருக்கின்ற குயில்களுடைய கூவொலிகளாலும்

---

1. ஒருவகைக் குருவி.

பிராம்மணர்களுடைய வேதாத்தியயன கோஷங்களாலும் ஒவ்வோரிடத்திலும் அலங்கரிக்கப்பட்டதும் கனி கிழங்குகளினுடைய பெரிய குவியல்களால் விளங்கும்படி செய்யப்பட்டதுமாயிருந்தது. அரசரே! பாரதரே! மனிதர்களை ரக்ஷிப்பவரே! பிறகு, பூபதியான அந்த யுதிஷ்டிரராஜர் தபஸ்விகளுக்காகக் கொண்டுவரப்பட்ட பொற்கலசங்களையும் அத்திக்கட்டையால் செய்த கலசங்களையும் கிருஷ்ணாஜினங்களையும் கம்பளங்களையும் ஸ்ருக்கையும் ஸ்ருவத்தையும் கமண்டலுக்களையும் ஸ்தாலிகளையும் குடங்களையும் இருப்புப்பாத்திரங்களையும் (மற்றும்) பலவிதப் பாத்திரங்களையும் மற்றும் விரும்பப்பட்டதையும் (எவரெவர்) எது எதை எவ்வளவு எவ்வளவு விரும்பினரோ (அவரவருக்கு) அதை அதை அவ்வளவு அவ்வளவாகக் கொடுத்தார். தர்மாத்மாவும் பூபதியுமான அந்த அரசர் இவ்விதம் ஆச்ரம மண்டலத்தைச் சுற்றிவந்து (தபஸ்விகளுக்கு) அந்தத்தனத்தையெல்லாம் கொடுத்துவிட்டு மறுபடியும் திரும்பிவந்து ஆஹ்னிகத்தைச் செய்துவிட்டுக் காந்தாரியுடன் கவலையின்றி வீற்றிருப்பவனும் பூபதியுமான திருதராஷ்டிரராஜனை அப்பொழுது பார்த்தார். தர்மாத்மாவான அவர், சிஷ்யைபோல் வணக்கத்துடன் அருகிலிருப்பவளும் சிஷ்டாசாரமுள்ளவளும் தாயுமான குந்தியையும் பார்த்தார். அந்த யுதிஷ்டிரர் அந்த அரசனைப் பூஜித்துத் தம்முடைய பெயரையும் சொல்லி (அவனால்) 'உட்காரு' என்று அநுமதி கொடுக்கப்பட்டு முனிவர்களுக்குரிய ப்ருஸி என்னும் குசாஸனத்தில் உட்கார்ந்தார். பரதஸ்ரேஷ்டரே! பீமஸேனன் முதலான பாண்டவர்களும் (திருதராஷ்டிரனை) நமஸ்கரித்து அபிவாதனம் செய்து அவனுடைய அனுமதியின்மேல் உட்கார்ந்தார்கள். அவர்களால் சூழப்பட்ட அந்தக் கௌரவராஜன் பிரம்மதேஜஸைத் தரிப்பவரும் தேவர்களால் சூழப்பட்டவருமான பிருஹஸ்பதிபோல மிகவும் விளங்கினான். அவர்கள் அவ்வாறு உட்கார்ந்திருக்கும்போது குருக்ஷேத்திரத்தில் வாஸம் செய்பவர்களும் சதயூபர் முதலானவர்களுமான மஹரிஷிகள் வந்தார்கள். பகவானும் பிராம்மணரும் தேவகணங்களாலும் ரிஷிகணங்களாலும் பணிவிடை செய்யப்பெற்றவரும் சிஷ்யர்களால் சூழப்பட்டவரும் மிக்க தேஜஸுள்ளவருமான வியாஸரும் (வந்து) அரசனுக்குக் காட்சி கொடுத்தார். பிறகு, குருகுலத்தில் தோன்றியவனான அந்தத் திருதராஷ்டிரராஜனும் குந்தீபுத்திரரான யுதிஷ்டிரரும் பீமஸேனன் முதலானவர்களும் எதிர்சென்று அபிவாதனம் செய்தார்கள். பிறகு, வியாஸர் சதயூபர் முதலானவர்களால் சூழப்பட்டவராகவந்து திருதராஷ்டிரராஜனை, 'உட்காரு' என்று சொன்

ளூர். அப்பொழுது வியாஸரானவர் சிறந்ததும் பட்டினால் செய்யப்பட்டதும் கிருஷ்ணாஜினமும் தர்ப்பமும் மேலே போடப்பட்டதும் தமக்காக அமைக்கப்பட்டதுமான ஆஸனத்தில் உட்கார்ந்தார். விஸ்தாரமான தேஜஸுள்ளவர்களான அந்த அந்தணஸ்ரேஷ்டர்களெல்லாரும் வியாஸரால் அனுமதிகொடுக்கப்பட்டு நாற்புறங்களிலும் ஆஸனங்களில் உட்கார்ந்தார்கள்.

முப்பதாவது அத்யாயம்.

ஆஸ்ரமவாஸபர்வம். (தொடர்ச்சி.)

——:o:——

(வியாஸர் திருதராஷ்டிரனை க்ஷேமம் விசாரித்து விதுரனுடைய உண்மை வடிவ முதலியவற்றைக் கூறி மற்றமுனிவரால் செய்யமுடியாத திருதராஷ்டிரனுடைய விருப்பத்தைச் செய்வதாகப் பிரதிஜ்ஞை செய்தது.)

பிறகு, மஹாத்மாக்களான பாண்டவர்கள் உட்கார்ந்தவுடன், ஸத்தியவதியின் புத்திரரான வியாஸர், (திருதராஷ்டிர) ராஜனை அழைத்துச் சொல்லலானார். 'திருதராஷ்டிர! சிறந்தகைகளுள்ளவனே! ராஜனே! உனக்குத் தவம் நடந்துகொண்டிருக்கிறதா? உன்னுடைய மனமானது வனவாஸத்தில் பிரியமுள்ளதாயிருக்கிறதா? ராஜனே! உன்னுடைய உள்ளத்தில் புத்திரர்களுடைய விநாசத்தினாலுண்டான சோகமானது இல்லாமலிருக்கிறதா? குற்றமற்றவனே! உனக்கு எல்லா ஞானங்களும் நன்கு தெளிந்திருக்கின்றனவா? புத்தியை உறுதியாகச் செய்துகொண்டு வனவாஸத்திற்குரிய விதியைச் செய்கிறாயா? (என்னுடைய) மருமகளான காந்தாரியானவள் சோகத்தால் கவரப்படாமல் இருக்கிறாளா? அவள் சிறந்த [1]பிரஜ்ஞையுள்ளவள்; [2]புத்தியுள்ளவள். தேவியும் தர்மார்த்தங்களை அறிந்தவளும் ஜனன மரணங்களின் தத்வத்தை அறிந்தவளுமான அவள் துக்கப்படாமலிருக்கிறாளா? ராஜனே! தன்புத்திரனை விட்டுவிட்டுக் குருவான உனக்குப் பணிவிடைசெய்ய ஆசைகொண்டவளான குந்தியானவள் அகங்காரமில்லாமல் உனக்குப் பணிவிடைசெய்கிறாளா? தர்மபுத்திரனான அரசன் உன்னால் (ஆசீர்வாதம் செய்து) ஸந்தோஷிக்கும்படி செய்யப்பட்டானா? இந்தப்பீமனும் அர்

1. மூன்றுகாலங்களிலுமுள்ளவற்றின் அறிவு. 2 நிகழ்காலத்திலுள்ளதின் அறிவு.

ஜுனனும் நகுலனும் ஸஹதேவனும் தேறுதலடையும்படி செய்யப் பட்டார்களா? இவர்களைப்பார்த்து நீ ஸந்தோஷப்படுகிருயா? உன் னுடையமனம் நிர்மலமாக இருக்கிறதா? அரசனே! நீ ஞானமுண்டாகி நல்ல எண்ணமுள்ளவனாக இருக்கிருயா? பாரத! மஹாராஜனே! பகையின்மை உண்மை கோபமின்மை இம்மூன்றும் எல்லாப் பிராணி களுக்கும் சிறந்தனவல்லவா? பாரத! உனக்கு வனவாஸத்தால் மோஹமானது இல்லாமலிருக்கிறதா? வனத்திலுள்ள ஆகாரமும் உபவாஸமும் உனக்குப் பிரியமாக இருக்கின்றனவா? ராஜேந்திர! மஹாத்மாவும் தர்ம ஸ்வரூபியும் மிகச்சிறந்த புத்தியுள்ளவனுமான விதுரன் இந்தவிதியால் சென்றதும் அறியப்பட்டது. அந்தத் தர்ம ராஜன் மாண்டவ்யருடைய சாபத்தால் விதுரனுகப் பிறந்தான். அவன் சிறந்த புத்தியுள்ளவன்; மஹாயோகி; மஹாத்மா; மிகச் சிறந்தமனமுள் ளவன். தேவர்களுள் பிருஹஸ்பதியும் அஸுரர்களுள் சுக்கிரரும் புருஷஸ்ரேஷ்டனை விதுரனைப்போலப் புத்திசாலிகளல்லர். அக் காலத்தில் மாண்டவ்யரென்னும் ரிஷியானவர் நெடுங்காலமாக ஸம்பாதிக் கப்பட்ட தபோபலத்தை அழித்து ஸநாதனமான தர்மத்தைச் சபித்தார். மஹாராஜனே! தேவர்களுக்குத் தெய்வமும் ஸநாதனமுமான அந்தத் தர்மமானது முந்தி பிராம்மணருடைய உத்தரவினுலும் என்னுலும் தன்னுடைய சக்தியினுலும் விசித்திரவீர்யனுடைய க்ஷேத்திரத்தில் உனக்கு மிகச்சிறந்த புத்தியுள்ள பிராதாவாகப் பிறந்தது. மனத்தால் தரிப்பதினுலும் தியானஞ்செய்வதாலும் அதனைத் தர்மமென்று கவிகள் சொல்லுகின்றனர். ஸனாதனமான அந்தத் தர்மமானது ஸத்தியத்தினு லும் இந்திரியங்களின் அடக்கத்தினுலும் மனத்தின் அடக்கத்தினுலும் அஹிம்ஸையினுலும் தானத்தினுலும் தவத்தினுலும் வ்ருத்தியடை கிறது. அரசனே! பேரறிவாளனும் அளவற்றபுத்தியுள்ளவனுமான அந் தத்தர்மராஜனுல் கௌரவராஜனை தர்மனென்னும் இந்தயுதிஷ்டிரன் யோகபலத்தால் பிறந்தான். அக்னிபோலவும் வாயுபோலவும் ஜலம் போலவும் பூமிபோலவும் ஆகாசம்போலவும் தர்மமானது இவ்வுலகத்தி லும் மேலுலகத்திலும் இருக்கிறது. ராஜேந்திர! சராசரமான எல்லா வற்றையும் வியாபித்து எல்லாரிடத்திலும் இருப்பதான அந்தத் தர்ம மானது தேவதேவர்களாலும் பாவமற்றவர்களான ஸித்தர்களாலும் காணப்படுகிறது. தர்மமே விதுரன். விதுரனே யுதிஷ்டிரன். ராஜனே வேலைக்காரன்போல நிற்கும் அப்படிப்பட்ட இந்தப்பாண்டவன் உன் னுல் பார்க்கத்தக்கவன். உன்னுடைய பிராதாவும் புத்திக்கிசைந்த

வனும் மஹாத்மாவும் சிறந்த யோகபலத்தோடுகூடினவனுமான அந்த விதுரன் குந்தியின் குமாரனும் மஹாத்மாவுமான யுதிஷ்டிரனைக் கண்டு அவனிடம் பிரவேசித்துவிட்டான். பரதஶ்ரேஷ்டனே! நான் உனக்கும் சீக்கிரத்தில் க்ஷேமத்தை உண்டுபண்ணுகிறேன். அருமைப்புத்திரனே! என்னை ஸம்சயத்தை அறுப்பதற்காக வந்தவனாக அறி. உலகத்தில் முன்பு எந்த மஹரிஷிகளாலும் செய்யப்படாததும் ஆச்சரியமாக இருப்பதும் தவத்தின் பயனுமான செய்கையை உங்களுக்குக் காண்பிக்கிறேன். பூபாலனே! என்னிடத்திலிருந்து எதை அடைய விரும்புகிறாய்? குற்றமற்றவனே! பார்க்கவும் தொடவும் கேட்கவும் விரும்பப்பட்டதை உனக்கு நான் செய்கிறேன்' என்று சொன்னார்'' என்றார்.

ஆஶ்ரமவாஸபர்வம் முற்றிற்று.

முப்பத்தோராவது அத்யாயம்.

புத்ரதர்சனபர்வம்.

—:o:—

(யுதிஷ்டிரர் முதலியோர் திருதராஷ்டிராஶ்ரமத்தில் ஒருமாதம் வஸித்ததும், வியாஸர் நாரதர் முதலிய எல்லாரும் சேர்ந்திருக்கையில் காந்தாரி திருதராஷ்டிரனுக்குப் புத்ரர்களை நேரிற்காண விருப்பமிருப்பதைச் சொல்லியதும், வியாஸர் குந்தியின் விருப்பம் என்னவென்று அவளைக் கேட்டதும்)

ஜனமேஜயர், "பிராம்மணரே! ராஜஶ்ரேஷ்டனான திருதராஷ்டிரராஜன் மனைவியுடனும் மருமகளான குந்தியுடனும் வனவாஸத்தை அடைந்தும், தர்மங்களை அறிந்தவரான விதுரர் தர்மராஜரிடம் பிரவேசித்தும், பாண்டுபுத்திரர்களெல்லாரும் ஆஶ்ரமமண்டலத்தில் வஸித்துக்கொண்டிருக்கும்போது, மிக்க தேஜஸ்வியான வியாஸ மஹரிஷியானவர் எந்த ஆச்சரியத்தைச் செய்கிறேனென்று சொன்னாரோ அதை எனக்குச் சொல்லும். தர்மம்தவறாதவரும் குருகுலத்தில் பிறந்தவருமான யுதிஷ்டிரராஜர் அப்பொழுது ஜனங்களுடன் எவ்வளவு காலம் வனத்தில் வாஸம்செய்தார்? பிரபுவே! சேனையுடனும் அந்தப்புரத்துடனும் அந்த மஹாத்மாக்கள் எதைப்புஜித்துக்கொண்டு அங்கு வாஸம் செய்தார்கள்? இதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.'' என்று வினவ, வைசம்பாயனர் சொல்லலானார்.

"மஹாராஜரே! யுதிஷ்டிரர் வனவாஸத்தை அடைந்திருக்கும் பூபதியான திருதராஷ்டிரனைப் பார்ப்பதற்காகப் பிராதாக்களுடனும் சேனையுடனும் (அரண்யம்) சென்றார். பரதஸ்ரேஷ்டரே! அவ்விடத்தில் அவர்களுக்கு முதல்தினம் ஜலமும் கிழங்கும் கனியும் போஜனமாகவும், பூமி படுக்கையாகவும் இருந்தன. ராஜரே! அப்பொழுது பாண்டவர்கள் குருராஜனை திருதராஷ்டிரனால் அனுமதி கொடுக்கப்பட்டு (மறுநாள்முதல்) வனத்தில் பலவிதமான அன்னபானங்களையும் படுக்கைகளையும் அடைந்தார்கள். அவர்கள் சேனையுடனும் அந்தப்புரத்துடனும் ஒருமாஸம் வனத்தில் வாஸம் செய்தார்கள். குற்றமற்றவரே! அப்பொழுது வியாஸர் அவ்விடம் வந்தார். ராஜரே! பாரதரே! அவ்வாறே, அவர்களெல்லாரும் திருதராஷ்டிரராஜனுக்கு அருகில் அந்த வியாஸருடன் உட்கார்ந்து கதைகளைச் சொல்லிக்கொண்டிருக்கும் போது, நாரதரும் பர்வதரும் பெரியதவமுள்ள தேவலரும் மற்ற முனிவர்களும் விஸ்வாவஸுவும் தும்புருவும் சித்ரஸேனனும் வந்தார்கள். பெரியதவமுள்ளவரும் கௌரவராஜருமான யுதிஷ்டிரர் திருதராஷ்டிரனால் அனுமதிசெய்யப்பட்டு அவர்களுக்கும் முறைப்படி பூஜையைச் செய்தார். அவர்கள் எல்லாரும் யுதிஷ்டிரரிடமிருந்து பூஜையை அடைந்து, பிறகு, புண்ணியமானவைகளும் பறவைகளின் இறகுகளாகிற பஞ்சுகளால் செய்யப்பட்டவைகளும் சிறந்தவைகளுமான ஆஸனங்களில் உட்கார்ந்தார்கள். கௌரவஸ்ரேஷ்டரே! அவர்கள் அங்கு உட்கார்ந்தவுடன், சிறந்த புத்தியுள்ளவனை அந்த திருதராஷ்டிரராஜன் பாண்டவர்களால் சூழப்பட்டு உட்கார்ந்தான். பிறகு, காந்தாரியும், குந்தியும், திரௌபதியும், ஸுபத்ரையும், மற்றுமுள்ள ஸ்திரீகளும், மற்ற ஸ்திரீகளுடன் உட்கார்ந்தார்கள். அரசரே! அப்பொழுது, அவர்களுக்குத் திவ்யமானவைகளும், மிக்க தர்மமுள்ளவைகளும், முன்னோர்களான ராஜரிஷிகளையும் தேவர்களையும் அஸுரர்களையும் பற்றியவைகளுமான கதைகள் நடந்தன. பிறகு, கதையின் முடிவில் பேசுகிறவர்களுள் சிறந்தவரும் ப்ரீதியுள்ளவரும் மிக்க தேஜஸுள்ளவரும் வேதங்களை அறிந்தவர்களனைவரிலும் சிறந்தவருமான அந்த வியாஸர், பிரஜ்ஞையைக் கண்ணாகக்கொண்டவனும் பிரபுவுமான அந்தத் திருதராஷ்டிரனை நோக்கி, மறுபடியும் பின்வரும் இந்த வார்த்தையைச் சொல்லலானார்.

'ராஜேந்திர! நீ மனத்தில் சொல்ல விரும்பியிருப்பதை நான் அறிவேன். மஹாராஜனே! புத்திரர்களால் உண்டுபண்ணப்பட்ட சோகத்

திஞல் எரிக்கப்படுகின்ற உனக்கும் காந்தாரிக்கும் எப்பொழுதும் மனத்திலிருக்கும் துக்கத்தையும், குந்திக்கும் திரௌபதிக்கும் மனத்திலிருக்கும் துக்கத்தையும், கிருஷ்ணனுடைய ஸஹோதரியான ஸுபத்ரையானவள் பொறுப்பதும் புத்திரனுடைய விநாசத்திஞலுண்டானதுமான கடுந்துயரத்தையும் நான் அறிவேன். அரசே! கௌரவ நந்தன! நீங்களெல்லாரும் சேர்ந்திருப்பதைக் கேட்ட பிறகு, (உங்களுடைய) ஸந்தேஹத்தை அறுப்பதற்காக நான் வந்தேன். இந்தத் தேவர்களும், கந்தர்வர்களும் இந்த எல்லா மஹரிஷிகளும், நீண்ட காலமாக ஸம்பாதிக்கப்பட்ட என்னுடைய தவத்தின் வீர்யத்தை இப்பொழுது பார்க்கட்டும். சிறந்த அறிவுள்ளவனே! ஆகையால், நான் உனக்கு எந்த இஷ்டத்தைக் கொடுக்கவேண்டும்? சொல்லு. வரனைக்கொடுக்க ஆயத்தனுக இருக்கிறேன். என்னுடைய தபோபலத்தைப் பார்' என்று சொன்னர்.

அளவற்ற அறிவுள்ள வியாஸரால் இவ்வாறு சொல்லப்பட்ட அந்த ராஜேந்திரன், ஒரு முகூர்த்த காலம் ஆலோசித்துச் சொல்லத் தொடங்கினன். 'எனக்கு இப்பொழுது இங்கு ஸாதுக்களான உங்களுடன் சேர்க்கை நேர்ந்தபடியினுல், நான் தன்யனுனேன்; அனுக்ரஹிக்கப்பட்டவனுனேன். என்னுடைய உயிர்வாழ்க்கையும் பயனுள்ளதாயிற்று. தபோதனர்களே! நான் பிரம்மதேவருக்கொப்பான உங்களுடன் சேர்க்கைபெற்றேனுதலால், எனக்கு இப்பொழுதே இஷ்டமானகதி கிடைக்குமென்று எண்ணுகிறேன். பாவமற்றவர்களே! உங்களைப் பார்த்ததினுலேயே நான் பரிசுத்தனுனேன்; இதில் ஸந்தேகமில்லை. எனக்குப் பரலோகத்தைப்பற்றிய பயமுமில்லை. ஆனுல், மிகக்கெட்ட புத்தியுள்ளவனும் மூடனுமான அந்தத் துரியோதனனுடைய மிக்க அநீதிகளை நினைத்துப் புத்திரனிடத்தில் ஆசையுள்ள என்னுடைய மனம் எப்பொழுதும் பரிதபிக்கிறது. பாபபுத்தியுள்ள அவனுல் குற்றமற்றவர்களான பாண்டவர்கள் பீடிக்கப்பட்டார்கள். யானைகளோடும் குதிரைகளோடும் மனிதர்களோடும் கூடின பூமியானது அவனுல் அழிக்கப்பட்டது. என்னுடைய (அந்தப்) புத்திரனிமித்தம் மஹாத்மாக்களும் பற்பல தேசங்களுக்குத் தலைவர்களுமான எல்லா அரசர்களும் வந்து மிருத்யுவின்வசத்தை அடைந்தார்கள். அந்தச் சூரர்கள் மனத்திற்குப் பிரியமான பெற்றேர்களையும் மனைவிகளையும் பிராணன்களையும் இழந்து யமனுடைய வீட்டை அடைந்தார்கள். பிராம்மணரே! மித்திரன்நிமித்தம் போரில் கொல்லப்பட்ட அவர்களுக்கும் அவ்வாறே யுத்தத்தில் கொல்லப்பட்ட என்னுடைய புத்திரர்களுக்கும் பேரர்களுக்கும் என்னகதி? மிக்க பலமுள்ளவரும் வ்ருத்தரும்

சந்தனுவின் புத்திரருமான பீஷ்மரையும் பிராம்மணஶ்ரேஷ்டரான துரோணரையும் உயிர்துறக்கச் செய்வித்து என்னுடைய மனமானது அடிக்கடி பரிதபிக்கின்றது.' மூடனும் பாபியும் சிக்ஷிக்கப்படாத புத்தியுள்ளவனும் பூலோகத்து அரசாட்சியை விரும்பினவனுமான என்னுடைய புத்திரனால், பிரகாசித்துக்கொண்டிருந்த குலமானது, அழிக்கப்பட்டது. ஐயா! அந்தச் சூரர்கள் என்னிமித்தம் மனத்துக்குப் பிரியர்களான மனைவிகளையும் மக்களையும் பலவிதபோகங்களையும் யாகங்களையும் தடாகநிர்மாணங்களையும் இழந்து யமனுடைய வீட்டிற்குச் சென்றார்கள்.. இவற்றையெல்லாம் நினைத்து இரவும் பகலும் பரிதபிக்கின்றவனும் துக்கமும் சோகமும் மேலிட்டவனுமான நான் ஆறுதலை அடையவில்லை. தந்தையே! இவ்விதம் சிந்திக்கின்ற எனக்கு ஆறுதல் உண்டாகவில்லை' என்று சொன்னான்.

ஜனமேஜயரே! அந்த ராஜரிஷியினுடைய பலவிதமான அந்தப் புலம்பலைக்கேட்டுக் காந்தாரிக்கும் குந்திக்கும் திரௌபதிக்கும் ஸுபத்ரைக்கும் கௌரவருடைய மருகிகளான அந்த உத்தம ஸ்திரீகளுக்கும் சோகமானது மறுபடியும் புதிதாக உண்டுபண்ணப்பட்டதாயிற்று. புத்திரசோகத்தால் கவரப்பட்டவளும் கட்டப்பட்ட கண்களுள்ளவளுமான காந்தாரிதேவி எழுந்திருந்து அஞ்சலிசெய்துகொண்டு மாமனாரை நோக்கிப் பின்வரும் வசனத்தைச் சொல்லலானாள். 'கௌரவத்தைக் கொடுப்பவரே! பகவானே! இவர், லோகாந்தரம் சென்ற புத்திரர்களைப் (பார்க்க) விரும்புகிறார். இவருடைய மனத்திலுள்ள அதுவும் உம்மால் தவத்தால் அறியப்பட்டது. முனிஶ்ரேஷ்டரே! பிரபுவே! கொல்லப்பட்ட புத்திரர்களைப்பற்றித் துக்கிக்கின்ற இந்த அரசருக்குப் பதினாறு வருஷங்கள் சென்றன; துயரம் தணியவில்லை. முனிவருள் சிறந்தவரே! புத்திரசோகத்தினால் கவரப்பட்டவரும் பெருமூச்சுவிடுகின்றவருமான இந்தத் திருதராஷ்டிரராஜர் ஓரிடத்திலும் படுக்கிறாரில்லை. நீர் தபோபலத்தினால் வேறு எல்லாஉலகங்களையும் படைக்கத் திறமையுள்ளவராயிருக்கிறீர். லோகாந்தரம் சென்ற புத்திரர்களை அரசருக்குக் காண்பிப்பதைப்பற்றி என்ன ஸந்தேஹம்? எல்லா மருமகள்களுள்ளும் பிரியமான மருமகளும் மிக்க ஞாதிகளையும் மக்களையும் இழந்தவளும் த்ருபதன் பெண்ணுமான இந்தத் திரௌபதியும் மிகத் துயரப்படுகிறாள். அவ்வாறே, கிருஷ்ணனுடைய ஸஹோதரியும் அழகாகப் பேசும் தன்மையுள்ளவளுமான இந்த ஸுபத்ரையென்னும் பெண்ணும் அபிமன்யுவின் வதத்தால் வருத்தமுற்று மிகத்துயரப்படுகிறாள். பூரிஶ்ரவ

னின் மனைவியும் உத்தமியென்று ஒப்புக்கொள்ளப்பட்டவளுமான இந்தப் பெண்ணும் கணவனுடைய வியஸனத்தாலுண்டான சோகத்தால் பிடிக்கப்பட்டு மிகத்துயரப்படுகிறாள். இவளுடையுமாமனாரும் புத்திசாலியும் பாஹ்லிக தேசத்தரசரும் கௌரவஸ்ரேஷ்டருமான ஸோமதத்தரும் தந்தையுடன் பெரிய யுத்தத்தில் கொல்லப்பட்டாரன்றோ? மஹா முனிவரே! ஸ்ரீமானும் சிறந்தபுத்தியுள்ளவரும் யுத்தங்களில் (முதுகுகாட்டி) ஓடாதவரும் உம்முடைய புத்திரருமான இவருடைய எந்த நூறு புத்திரர்களும் போர்க்களத்தில் கொல்லப்பட்டார்களோ அவர்களுடைய இந்த நூறு மனைவிகளும் துக்கத்தாலும் சோகத்தாலும் வியாபிக்கப்பட்டு மன்னருக்கும் எனக்கும் அடிக்கடி சோகத்தை வளரச்செய்துகொண்டு சிறிதும் ஆகாரமில்லாமல் என்னை உபாஸிக்கிறார்கள். பிரபுவே! சூரர்களும் மஹாத்மாக்களும் என்னுடைய மாமனார்களும் மஹாரதர்களுமான அந்த ஸோமதத்தன் முதலானவர்களின் கதி எப்படிப்பட்டது? சிறந்த முனிவரே! பகவானே! இந்த மன்னரும் உம்முடைய மருமகளான இந்தநானும் உம்முடைய அருளால் சோகமற்றுக் காலத்தைப்போக்கவேண்டும்' என்றாள்.

காந்தாரியானவள் இவ்விதம் சொன்னவுடன், விரதத்தினால் இளைத்தமுகத்தையுடைய குந்தியானவள் ரஹஸ்யமாகப் பிறந்தவனும் ஸூரியனுக்கொப்பானவனுமான அந்தப் புத்திரனை நினைத்தாள். ரிஷியும் வரத்தைக்கொடுப்பவரும் தூரத்திலுள்ள விஷயத்தையும் கேட்கவும் பார்க்கவும் திறமையுள்ளவருமான வியாஸர், துயரப்படுகின்றவளும் ஸவ்யஸாசியின் தாயுமான குந்திதேவியைப் பார்த்தார். பிறகு, வ்யாஸரானவர் அவளை நோக்கி, 'பெரிய பாக்கியமுள்ளவளே! நீ எந்தக் காரியத்தைச் சொல்விரும்புகிறாயோ எது உன்னுடைய மனத்தில் இருக்கிறதோ அதைச் சொல்' என்று சொன்னார். பிறகு, குந்தியானவள் மாமனாருக்குத் தலைவணங்கி லஜ்ஜையுடன் புராதனமான வரலாற்றை அப்பொழுது விரித்துரைக்கத் தொடங்கினாள்.

முப்பத்திரண்டாவது அத்யாயம்.

புத்ரதரிசனபர்வம். (தொடர்ச்சி.)

—:o:—

(குந்தி கர்ணன்பிறப்பைக் கூறித் தான் அவனைப் பார்க்க விரும்பியதை வியாஸரிடம் சொல்லியதும், வியாஸர் அது குற்றமன்றென்பதைக் காரணத்துடன் கூறிக் குந்தியின் ஸந்தேகத்தைப் போக்கியதும்.)

குந்தி, 'பகவானே! நீர் எனக்கு மாமனாரும் தெய்வத்திற்கும் தெய்வமுமாக இருக்கிறீர். எனக்குத் தெய்வத்திற்கு மேலான தெய்வமான அப்படிப்பட்ட நீர் என்னுடைய உண்மையான வார்த்தையைக் கேளும். தபஸ்வியும் கோபமுள்ளவருமான துர்வாஸர் என்னும் பிராம்மணர் பிக்ஷையைப் புஜிப்பதற்காக என்னுடைய பிதாவினிடம் வந்தார். நான் அவரைச் சந்தோஷிக்கும்படி செய்தேன். அவர் (என்னுடைய) சுத்தியினாலும் குற்றம் செய்யாமையாலும் சுத்தமான மனத்தினாலும் பெரிய கோபகாரணங்களிலும் ஒருபொழுதும் கோபிக்காமலிருந்தார். கிருதகிருத்யரும் மஹா முனிவருமான அவர், என்னிடம் பிரீதியடைந்து வரன் கொடுக்க விரும்பி என்னை நோக்கி, '(பெண்ணே!) நீ அவசியம் வரனைப் பெற்றுக்கொள்ள வேண்டும்' என்று சொன்னார். பிறகு, நான், சபித்துவிடுவார் என்கிற பயத்தால், மறுபடியும் அந்த பிராம்மணரை நோக்கி, 'அப்படியே ஆகட்டும்' என்று சொன்னேன். அந்தப் பிராம்மணர் மறுபடியும் என்னை நோக்கி, 'கல்யாணி! அழகிய முகமுள்ளவளே! நீ தர்மத்திற்குத் தாயாகப் போகிறாய். நீ எந்தத் தேவர்களை அழைப்பாயோ அந்தத் தேவர்கள் உன்னுடைய வசத்திலிருப்பார்கள்' என்று சொன்னார். (அந்தப்) பிராம்மணர் இவ்விதம் சொல்லிவிட்டு மறைந்தார். பிறகு, நான் ஆச்சரியமுள்ளவளானேன். எல்லா நிலைமைகளிலும் எனக்கு நினைவு விலகவில்லை. பிறகு, நான் உப்பரிகையிலிருக்கும்போது உதிக்கின்ற ஸூரியனைக் கண்டு ரிஷியினுடைய அந்த வாக்கியத்தை நினைத்து (அந்த) ஸூரியனை விரும்பிப் பாலஸ்வபாவத்தால் அதில் தோஷத்தை உணராமல் நின்று கொண்டிருந்தேன். பிறகு, தேவனான ஸூரியன் என்னுடைய ஸமீபத்தில் வந்தான். அவன் தன்னுடைய சரீரத்தைப் பூமியில் (ஒன்றும்) ஆகாயத்தில் (ஒன்றுமாக) இரண்டாகச் செய்து ஒன்றால் உலகங்களைத் தபிக்கச் செய்துகொண்டு இரண்டாவது சரீரத்துடன் என்னிடம் வந்தான். அவன் நடுக்கமுள்ளவளான என்னை நோக்கி,

'(பெண்ணே!) என்னிடம் வரத்தைக் கேட்டுக்கொள்' என்று சொன்னான். நான் அவனைத் தலைவணங்கி, '(ஐயா!) போம்' என்று சொன்னேன். உக்ரமான கிரணங்களுள்ள அவன் என்னை நோக்கி, '(பெண்ணே!) என்னை வீணாக அழைப்பது தகுதியன்று. உன்னையும் உனக்கு வரன் கொடுத்த பிராம்மணனையும் எரித்துவிடுவேன்' என்று சொன்னான். பிறகு, நான் அபகாரம் செய்யாதவரான அந்த பிராம்மணரைச் சாபத்திலிருந்து ரக்ஷிக்கவேண்டி, 'தேவனே! உனக்குச் சமமான புத்திரன் எனக்கு உண்டாகவேண்டும்' என்று சொன்னேன். பிறகு, ஸூரியன் தேஜஸினால் என்னை மோஹிக்கச் செய்து, என்னிடம் பிரவேசித்து, '(பெண்ணே!) உனக்குப் புத்திரன் உண்டாவான்' என்று சொல்லி ஆகாயம் சென்றான். பிறகு, நான் வீட்டிற்குள் ரஹஸ்யமாகப் பிறந்தவனும் பாலனுமான கர்ணனென்னும் புத்திரனைப் [1]பிதாவின் சித்தத்தை ரக்ஷிப்பதற்காக ஜலத்தில் விட்டேன். பிராம்மணரே! அந்த ரிஷி என்னிடம் சொன்னபடி நான் அந்தத் தேவருடைய அநுக்கிரஹத்தினாலேயே மறுபடியும் கன்னிகையானேன். பிரம்மரிஷியே! அறிவில்லாதவளான நான் அந்தப் புத்திரனைப் புத்திபூர்வமாக உபேக்ஷை செய்ததென்பது என்னை எரிக்கிறது. அது உமக்கு நன்றாகத் தெரியும். பகவானே! பாவமோ, பாவமன்றோ, நான் வெளிப்படையாகச் சொன்னேன். எனக்கு அந்தப் புத்திரனைப்பார்க்க விருப்பமிருக்கிறது. அதை நீர் (நிறைவேற்றி) விலக்கவேண்டும். குற்றமற்றவரே! முனிவருள் மிகச்சிறந்தவரே! இந்த மன்னருடைய உள்ளத்திலிருப்பதும் உமக்குத் தெரியும். அவரும் அந்த இஷ்டத்தை இப்பொழுதே அடையவேண்டும்' என்று சொன்னாள்.

இவ்விதம் சொல்லக் கேட்டவரும் வேதத்தை அறிந்தவருள் சிறந்தவருமான வியாஸர், '(குந்தி!) நீ என்னிடம்சொன்ன இவையெல்லாம் இவ்விதமே நடக்கத்தக்கவையும் நல்லகாரியங்களுமாக இருக்கின்றன. உனக்குக் குற்றமுமில்லை. நீ கன்னிகையாயிருந்தவளன்றோ? ஐச்வரத்தன்மையுள்ளவர்களான தேவர்கள் (இதர) சரீரங்களில் பிரவேசிப்பதுண்டு. தேவக்கூட்டங்கள் ஸங்கல்பம் வார்த்தை பார்வை ஸ்பரிசம் புணர்ச்சி ஆகிய ஐந்துவிதத்தினாலும் புத்திரர்களை உண்டுபண்ணிக்கொண்டிருக்கின்றன. குந்தி! மனுஷ்யர்களுடைய தர்மமானது தேவர்களுடைய தர்மத்தால் தோஷத்தையடையாதென்று நீ தெரிந்துகொள். உன்

---

1 'பித்ரு வ்ருத்தாந்த ரக்ஷிணீ' என்பது வேறுபாடம்; 'தந்தையின் நடையைக் காப்பவள்' என்பது பொருள்.

னுடைய மனத்திலுள்ள வருத்தம் விலகட்டும். பலவான்களுக்கு எல்லாம் பத்தியமாகும். பலவான்களுக்கு எல்லாம் சுத்தமாகும். பலவான்களுக்கு எல்லாம் தர்மமாகும். பலவான்களுக்கு எல்லாம் தம்முடையனவாகும்.

முப்பத்துமூன்றுவது அத்யாயம்.

புத்ரதரிசனபர்வம். (தொடர்ச்சி.)

——:o:——

(வியாஸர் பேரில் இறந்தவர்களைக் காட்டுவதாகச் சொல்லித் திருதராஷ்டிரன் முதலியோர் யார் யார் அம்சமென்பதையும்கூறி எல்லாரையும் கங்கைக்கரை செல்லக் கட்டளையிட்டதும், அவர்கள் சென்றதும்.)

கல்யாணி! காந்தாரி! புத்திரர்களையும் பிராதாக்களையும் அவர்களின் பரிவாரங்களையும் (தம்தம்) பர்த்தாக்களுடன்கூடிய மருகிகளையும் இரவில் தூங்கி விழித்தவர்களைப்போலப் பார்க்கப்போகிறாய். குந்தி கர்ணனையும் ஸுபத்ரை அபிமன்யுவையும் திரௌபதி ஐந்து புத்திரர்களையும் பிதாக்களையும் பிராதாக்களையும் பார்க்கப் போகின்றனர். அரசனும் நீயும் குந்தியும் என்னைத் தூண்டுவதற்கு முந்தியே என்னுடைய ஹிருதயத்தில் இந்த நிச்சயமிருந்தது. மஹாத்மாக்களும் புருஷச்ரேஷ்டர்களுமான அவர்களெல்லாரும் துக்கிக்கப்படத்தக்கவர்களல்லர். அவர்கள் க்ஷத்திரிய தர்மத்தை முக்கியமாகக்கொண்டு மரணத்தை அடைந்தார்களன்றோ? நிந்திக்கப்படாதவளே! அந்தத் தேவகார்யமானது அவசியம் நடக்கத்தகுந்ததுதான். அதற்காகவே எல்லாத்தேவர்களும் அம்சங்களால் பூமியில் அவதரித்தார்கள். கந்தர்வர்களும் அப்ஸரஸுகளும் பிசாசர்களும் குஹ்யகர்களும் ராக்ஷஸர்களும் புண்ய ஜனங்களும் ஸித்தர்களும் [1]தேவரிஷிகளும் தேவர்களும் தானவர்களும் நிர்மலர்களான தேவரிஷிகளும் அவதரித்தார்கள். அப்படிப்பட்ட இவர்கள் குருக்ஷேத்திரத்தின்கண் போர்க்களத்தில் மரணமடைந்தார்கள். புத்திசாலியும் திருதராஷ்டிரனென்று பிரஸித்தி பெற்றவனுமான கந்தர்வராஜனே மானிடலோகத்தில் உன்னுடைய பர்த்தாவான திருதராஷ்டிரனாகப் பிறந்தான். தவறாதபுகழுள்ளவனும் மிக்க மேன்மைபெற்றவனுமான பாண்டுவை, மருத்கணத்திலிருந்து உண்டானவனாகத் தெரிந்துகொள். தர்மத்தின் அம்சமானது விதுரனாகவும் யுதிஷ்டிரராஜனாகவும் பிறந்தது.

1. இது இரட்டித்து வருகிறது

துரியோதனனைக் கலியாகவும் சகுனி என்னும் அரசனைத் துவாபரமாக வும் தெரிந்துகொள். அழகிய காட்சியுள்ளவளே! நீ துச்சாஸனன் முதலானவர்களை ராக்ஷஸர்களாகத் தெரிந்துகொள். பலசாலியும் பகை வரை அடக்குபவனுமான பீமஸேனனை மருத்கணத்திலிருந்துண்டான வனாகவும் குந்தியின் புத்திரனான இந்தத் தனஞ்சயனை நரனென்னும் ரிஷியாகவும் கிருஷ்ணனை நாராயணனாகவும் நகுல ஸஹதேவர்களை அஶ்வினீ தேவர்களாகவும் நீ தெரிந்துகொள். குந்தியின் புத்திரனான கர்ணனைத் தன்னுடைய சரீரத்தை இரண்டாகச் செய்துகொண்டு உல கங்களைத் தபிக்கச்செய்கின்றவனும் பிரகாசிப்பவர்களுள் சிறந்தவனுமான ஸூரியனாகத் தெரிந்துகொள். கல்யாணி! அழகிய காட்சியுள்ளவளே! விரோதத்திற்காகக் கிளம்பினவனும் சண்டையை விளைவித்தவனுமான அந்தக் கர்ணனை ஸூரியனாகத் தெரிந்துகொள். ஆறு மஹாரதர்களால் கொல்லப்பட்டவனும் அர்ஜுனகுமாரனுமான அபிமன்யுவானவன், யோகத்தினால் இரண்டுவிதமாகி இவ்வுலகில் பிறந்த சந்திரன். திரௌபதி யுடன் அக்னியினின்றும் உண்டான திருஷ்டத்யும்னன் சுபமான அக்னியின் அம்சமாகவும் சிகண்டியை ராக்ஷஸனாகவும் தெரிந்துகொள். துரோணரைப் பிருஹஸ்பதியின் அம்சமாகவும் அஶ்வத்தாமாவை ருத் திரரிடமிருந்துண்டானவராகவும் தெரிந்துகொள். [1]கங்காபுத்திரரான பீஷ்மரை மானிடத் தன்மையை அடைந்த வஸுவாகத் தெரிந்து கொள். சிறந்த அறிவுள்ளவளே! கல்யாணி! இவ்விதம் இந்தத் தேவர் கள் மானிடத் தன்மையை அடைந்து காரியத்தைச் செய்துவிட்டு மறு படியும் ஸ்வர்க்கம் சென்றனர். (உங்கள்) எல்லாருக்கும் பரலோகத் தைப்பற்றிய பயத்தால் நெடுங்காலமாக உள்ளத்திலிருந்த துயரத்தை இப்பொழுது போக்குகிறேன். நீங்களெல்லாரும் கங்கையென்னும் நதிக்குச் செல்லுங்கள். அவ்விடத்தில் அந்தப் போரில் கொல்லப்பட்ட வர்களையெல்லாம் பார்ப்பீர்கள்' என்று சொன்னார்.

இவ்விதமான வியாஸருடைய வசனத்தைக் கேட்டு எல்லா ஜனங் களும் அப்பொழுது பெரிய ஸிம்மநாதம் செய்துகொண்டு கங்கையை நோக்கிச் சென்றனர். திருதராஷ்டிரனும் மந்திரிகளுடனும் பாண்ட வர்களுடனும் முனிஶ்ரேஷ்டர்களுடனும் வந்திருக்கும் கந்தர்வர்களு டனும் சென்றார். பிறகு, ஸமுத்ரம் போன்ற அந்த ஜனங்களெல்லா ரும் கங்கைக்கருகில் சென்று மகிழ்ச்சியுடன் ஸுகமாக வீற்றிருந்த னர். புத்திசாலியான திருதராஷ்டிரராஜனும் பாண்டவர்களுடனும்

1 வேறுபாடம்.

கூடவந்தவர்களுடனும் ஸ்திரீகளையும் வ்ருத்தர்களையும்முன்னிட்டு வீற்றிருந்தான். மரித்த மன்னர்களைப் பார்க்க விரும்பி இரவை எதிர் பார்க்கும் அவர்களுக்கு அந்தப் பகலும் நூறுவருஷங்கள்போலச் சென்றது. பிறகு, ஸூரியன் புண்யமும் சிறந்ததுமான அஸ்தகிரியை அடைந்தான். பிறகு, அவர்கள் நீராடி மாலைக்கடனைக் கழித்தனர்.

முப்பத்துநான்காவது அத்யாயம்.

புத்ரதர்சனபர்வம். (தொடர்ச்சி.)

—:o:—

(வியாஸர் இரவில் கங்கையிலிறங்கிப் போரிலிறந்தவரை அழைத்ததும், இறந்தவர்கள் தம் தம் ஆபரணம் ஆயுதம் வாகன முதலியவற்றுடன் கங்கையினின்று தோன்றிக் கரைக்கு வந்ததும், திருதராஷ்டிரன் வியாஸர் கொடுத்த ஞானக் கண்ணால் எல்லாரையும் நேரில் கண்டதும்)

பிறகு, அவ்விடத்தில் வந்திருந்தவர்கள் எல்லாரும் ஸாயங்காலத்தில் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்துவிட்டு, இரவு வந்தவுடன், வியாஸரிடம் வந்தார்கள். தர்மாத்மாவான திருதராஷ்டிரனே அப்பொழுது சுத்தனும் ஓரேமனமுள்ளவனுமாகிப் பாண்டவர்களுடனும் அந்த ரிஷிகளுடனும் உட்கார்ந்தான். ஸ்த்ரீகளோ ஒன்றுசேர்ந்து காந்தாரியுடன் உட்கார்ந்தார்கள். பட்டணத்தாரும் தேசத்தாருமான ஜனங்களெல்லாரும் வயதின் கிரமப்படி உட்கார்ந்தார்கள். பிறகு, பெரிய தேஜஸுள்ளவரான வியாஸரென்னும் மஹாமுனிவர் புண்ணியமான கங்கா ஜலத்தில் இறங்கி எல்லா உலகங்களையும் பாண்டவர்களையும் கௌரவர்களையும் சேர்ந்த எல்லாப்போர்வீரர்களையும் பெரியபாக்கியமுள்ளவர்களும் பற்பல தேசவாஸிகளுமான அரசர்களையும் அழைத்தார். அங்குவந்திருந்தவர்களெல்லாரும் அவர்களுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஜனமேஜயரே! பிறகு, ஜலத்தின் நடுவில் கௌரவ பாண்டவர்களுடைய படைகளிரண்டும் சேர்ந்ததுபோல மிகப் பெரிய ஒலி உண்டாயிற்று. பிறகு, பீஷ்மரையும்துரோணரையும்முதன்மையாகக்கொண்ட அந்த அரசர்களெல்லாரும் சேனைகளுடன் அந்த ஜலத்திலிருந்து ஆயிரக்கணக்காக உயரவந்தார்கள். புத்திரர்களுடனும் சேனைகளுடனும் கூடினவர்களான விராடன் துருபதன் இருவர்களும் திரௌபதியின் புத்திரர்களும் அபிமன்யுவும் ராக்ஷஸனான கடோத்கசனும் கர்ணனும் துரியோதனனும் மஹாரதனான சகுனியும் துச்சாஸனனை முதன்மையர்கக்

கொண்டவர்களும் மிக்க பலமுள்ளவர்களுமான திருதராஷ்டிரகுமாரர்களும் ஜராஸந்தனுடைய புத்திரனும் பகதத்தனும் வீர்யமுள்ளவனான ஜலஸந்தனும் பூரிஸ்ரவஸும் சலனும் சல்யனும் தம்பியுடன் கூடின விருஷஸேனனும் ராஜகுமாரனான லக்ஷ்மணனும் புத்திரனுடன் கூடின திருஷ்டத்யும்னனும் சிகண்டியின் எல்லாப் புத்திரர்களும் தம்பியுடன் கூடின திருஷ்டகேதுவும் அசலனும் விருஷகனும் அலாயுதனென்னும் அரக்கனும் பாஹ்லிகனும் ஸோமதத்தனும் சேகிதானனென்னும் அரசனுமாகிய இவர்களும் அதிகமாக இருப்பதால் பெயர்சொல்லப்படாதவர்களான மற்றுமுள்ளபலருமான எல்லாரும் பிரகாசிக்கின்ற வடிவத்துடன் அந்த ஜலத்திலிருந்து மேலே வந்தார்கள். எந்தவீரனுக்கு எந்த அலங்காரமும் எந்தத்துவஜமும் எந்தவாகனமும் எந்தக்கவசமும் எந்த ஆயுதமும் இருந்தனவோ அவன் அதனுடன் காணப்பட்டான். எல்லாரும் திவ்யமான ஆடை உடுத்தவர்களும் எல்லாரும் ஜ்வலிக்கின்ற குண்டலமணிந்தவர்களும் திவ்யமான மாலையும் ஹாரமும் தரித்தவர்களும் திவ்யமான அப்ஸரஸுகளால் சூழப்பட்டவர்களும் பகையும் அஹங்காரமும் கோபமும் பொறுமையுமற்றவர்களும் கந்தர்வர்களால் கானம் செய்யப்படுகின்றவர்களும் வந்திகளால் ஸ்தோத்திரம் செய்யப்படுகின்றவர்களுமாக இருந்தார்கள். ராஜரே! அப்பொழுது, வியாஸமுனிவர் பிரீதியினால் திருதராஷ்டிரனுக்கும் திவ்யமான நேத்திரத்தைத் தபோபலத்தால் கொடுத்தார். புகழ்பெற்றவளான காந்தாரியும் திவ்ய ஜ்ஞானபலத்தை அடைந்து அந்த எல்லாப் புத்திரர்களையும் போரில் கொல்லப்பட்ட மற்றவர்களையும் பார்த்தாள். அந்த எல்லா ஜனங்களும் மிகப் பெரிய ஆச்சரியமும் சிந்திக்க முடியாததும் மயிர் சிலிர்க்கச்செய்வதுமான அதனை வியப்புற்றுக் கண் இமையாமல் பார்த்தார்கள். உத்ஸவங்களுள் மிகச்சிறந்ததும் மனம்மகிழ்ந்த ஸ்திரீகளும் புருஷர்களும் நிறைந்ததுமான அது படத்தில் எழுதின சித்திரம்போல் ஆச்சரியமாகக் காணப்பட்டது. பரதஸ்ரேஷ்டரே! திருதராஷ்டிரனோ அந்த முனிவருடைய அனுக்கிரஹத்தினால், திவ்யநேத்திரத்தால் அவர்களனைவரையும் பார்த்து ஸந்தோஷமடைந்தான்.

முப்பத்தைந்தாவது அத்யாயம்.

புத்ரதரிசன பர்வம். (தொடர்ச்சி.)

—:o:—

(திருதராஷ்டிரன் யுதிஷ்டிரர் முதலியோர் போரிலிறந்தவருடன் அளவளாவி இரவு முழுமையும் விளையாட்டாகக் கழித்தது.)

அரசரே! பிறகு, புருஷஶ்ரேஷ்டர்களான அவர்களெல்லாரும் கோபமும் பகையும் கெட்ட எண்ணமுமற்றவர்களும் தேவலோகத்தில் தேவர்கள்போல மிக்க மனக்களிப்புள்ளவர்களுமாயிருந்துகொண்டு பிரம்மரிஷியினால் ஏற்படுத்தப்பட்டதும் சிறந்ததும் சுபமுமான விதியை ஆஶ்ரயித்துப் புத்திரன் தந்தையோடும் தாயாரோடும், மனைவிகள் கணவர்களோடும், பிராதா பிராதாவோடும், நண்பன் நண்பனோடுமாக ஒருவரோடொருவர் சேர்க்கைபெற்றனர். பாண்டவர்களோ பெரிய வில்லாளியான கர்ணனையும் அபிமன்யுவையும் திரௌபதியின் புத்திரர்களனைவரையும் மிக்க ஸந்தோஷத்துடன் அடைந்தார்கள். பூபாலரே! பிறகு, அந்தப் பாண்டவர்கள் கர்ணனுடன் சேர்ந்து ஸந்தோஷமடைந்து ஸ்நேகத்தில் உறுதிபெற்றிருந்தனர். பரதஶ்ரேஷ்டரே! இவ்விதம் அந்தப்போர்வீரர்களும் அந்த க்ஷத்திரியர்களும் முனிவருடைய அனுக்கிரகத்தினால் கோபமற்றவர்களாகி ஒருவரோடொருவர் சேர்க்கை பெற்றுப் பகையை இழந்து நட்பில் உறுதிபெற்றனர். இவ்விதம் புருஷஶ்ரேஷ்டர்களான எல்லாக் கௌரவமன்னர்களும் மற்றுமுள்ள மன்னர்களும் ஆசாரியர்களோடும் பந்துக்களோடும் புத்திரர்களோடும் சேர்க்கைபெற்று அவ்விரவு முழுவதும் உலாவி மனக்களிப்புற்று மிக்க ஸந்தோஷத்தினால் (தங்களைத்) தேவர்களைப்போல எண்ணினார்கள். பரதஶ்ரேஷ்டரே! அன்று ஒருவரோடொருவர் சேர்க்கைபெற்ற போர்வீரர்களுக்குச் சோகமும் பயமும் நடுக்கமும் சோர்வும் அபகீர்த்தியும் உண்டாகவில்லை. அந்த ஸ்திரீகள் பிதாக்களையும் பிராதாக்களையும் கணவர்களையும் புத்திரர்களையும் ஸந்தித்துப் பெரிய ஸந்தோஷத்தை அடைந்து துக்கத்தை விட்டார்கள், கர்மங்களால் தேவலோகத்தை அடைந்தவர்களும் பிரம்மாவின் ஸபையை அடைந்தவர்களும் வருணலோகத்தை அடைந்தவர்களும் கோலோகத்தை அடைந்தவர்களும் ஸௌரிய லோகத்தையடைந்தவர்களும் யக்ஷர்களையும் ராக்ஷஸர்களையும் பிசாசர்களையும் உத்தர குருதேசங்களையும் விசித்திரமான வேறுகதிகளையும் அடைந்தவர்களுமான மனிதர்களெல்லாரும் (முன்போல்) அந்த வயதும்

ரூபமும் வேஷமுமுள்ளவர்களாக அங்குவந்திருந்தனர். இவ்விதம் அந்த வீரர்களும் அந்த ஸ்திரீகளும் ஓரிரவு விளையாடி ஒருவருக்கொருவர் ஆலிங்கனம் செய்து விடைபெற்றுக்கொண்டு பிறகு வந்ததுபோலச் சென்றார்கள். பிறகு, முனிஸ்ரேஷ்டரான வியாஸர் அந்த ஜனங்களுக்கு அனுமதி கொடுக்க, அவர்கள் க்ஷணத்திற்குள் இவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே மறைந்தனர். மஹாத்மாக்களான அவர்கள் புண்யமான கங்காநதியில் முழுகி, ரதங்களுடனும் த்வஜங்களுடனும் தங்களுடைய வீடுகளுக்குச் சென்றனர். சிலர் தேவலோகத்தையும் சிலர் பிரம்மாவின் ஸபையையும் சிலர் வருணலோகத்தையும் சிலர் குபேர லோகத்தையும் சில அரசர்கள் ஸூரிய லோகத்தையும் சிலர் ராக்ஷஸர்களுடைய உலகத்தையும் சிலர் பிசாசங்களுடைய உலகத்தையும் உத்தரகுருதேசங்களையும் அடைந்தார்கள். விசித்திரமான கதியுள்ளவர்களும் மஹாத்மாக்களுமான அவர்களெல்லாரும் எந்த உலகங்களிலிருந்து தேவர்களுடன் வாகனங்களோடும் பரிவாரங்களோடும் வந்தார்களோ (அந்த உலகங்களை அடைந்தார்கள்.) அப்பொழுது, அவர்களெல்லாரும் போனவுடன், ஜலத்திலிருப்பவரும் மஹா முனிவரும் தர்மசீலரும் மிக்க தேஜஸுள்ளவரும் கௌரவர்களுக்கு நன்மையைச் செய்பவருமான வியாஸர், கணவனை இழந்தவர்களான அந்த க்ஷத்திரியஸ்திரீகளெல்லாரையும் நோக்கி, 'எந்த எந்த உத்தமஸ்திரீகள் பர்த்தாக்களால் ஸம்பாதிக்கப்பட்ட உலகங்களைவிரும்புகிறார்களோ அவரவர்கள் சீக்கிரமாக உத்ஸாகத்துடன் கங்காஜலத்தில் பிரவேசிக்கட்டும்' என்று சொன்னார். பிறகு, அவருடைய வார்த்தையைக் கேட்டு நம்பிக்கையுள்ள உத்தமஸ்திரீகள் மாமனாரிடத்தில் அனுமதி பெற்றுக்கொண்டு கங்காஜலத்தில் பிரவேசித்தார்கள். ராஜரே! பிறகு, பதிவிரதைகளான அந்த எல்லாஸ்திரீகளும் மானிட சரீரங்களால் விடப்பட்டவர்களாகிப் பர்த்தாக்களுடன் சேர்ந்தார்கள். இவ்விதம் நல்லொழுக்கமுள்ளவர்களும் பதிவிரதைகளுமான அந்தஸ்திரீகள் எல்லாரும் வரிசையாக கங்கா ஜலத்தில் பிரவேசித்து (மானிடசரீரங்களால்) விடப்பட்டுப் பர்த்தாக்களுடைய உலகங்களை அடைந்தார்கள். சீலமும் குணமும் பொருந்தியவர்களும் எல்லாக்குணங்களோடும் கூடினவர்களுமான அந்தஸ்திரீகளெல்லாரும் தங்களுடைய பர்த்தாக்கள் போலவே திவ்யமான வடிவமுள்ளவர்களும் திவ்யமான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவர்களும் திவ்யமான மாலையும் வஸ்திரமும் தரித்தவர்களுமாகி விமானத்திலேறிக்கொண்டு சிரமமற்றவர்களாகித்

தம்மிடம் சென்றனர். வரமளிப்பவரும் தர்மத்தில் பிரியமுள்ளவரு மான வியாஸர், அந்தச்சமயத்தில் எவனெவனுக்கு ஏது (ஏது) இஷ்டமோ (அவனவனுக்கு) அதையதைக்கொடுத்தார். அரசர்கள் மறுபடியும் வந்தார்களென்பதைக் கேட்டுப் பற்பல தேசவாஸிகளான மனிதர்களும் ஸந்தோஷமும் பெரிய ஆனந்தமுமுள்ளவர்களானார்கள். பட்டணத்தார்களான அந்த மனிதர்களெல்லாரும் அந்த உத்தமமான ஆச்சரியத்தைக்கண்டு பய எண்ணம் அற்றவர்களும் பாவம் தொலைந்தவர்களுமானார்கள்.

எந்தமனிதன், அவர்கள் பிரியர்களுடன் சேர்ந்ததை நன்கு கேட்பனோ அவன் இங்கும் இறந்த பின்னும் எப்பொழுதும் பிரியங்களை அடைவான். இஷ்டர்களுடனும் உறவினர்களுடனும் சேர்க்கையையும் க்ஷேமத்தையும் சிரமமின்றி அடைவான். வித்வானும் தர்மத்தை நன்கு அறிந்தவனுமான எவன் இதை வித்வான்களுக்குச் சொல்லுவனோ அவன் இவ்வுலகில் புகழையும் பரலோகத்தில் சுபமான கதியையும் அடைவான். பாரதரே! வேதமோதியவர்களும் தவம்புரிந்தவர்களும் நல்லொழுக்கமுள்ளவர்களும் இந்திரியங்களை அடக்கினவர்களும் தானத்தால் பாவத்தை விலக்கினவர்களும் கபடமற்றவர்களும் சுத்தர்களும் சாந்தர்களும் ஹிம்ஸையும் பொய்யுமற்றவர்களும் ஆஸ்திகர்களும் ஸ்ரத்தையுள்ளவர்களும் தைரியமுள்ளவர்களுமான மனிதர்கள் ஆச்சரியமான இந்தப் பர்வத்தைக் கேட்டால் சிறந்த கதியை அடைவார்கள். மறுபடியும் காணப்படுதலை அடைந்த அவர்கள், அடிக்கடி கீர்த்திக்கப்படுவார்களானால் கேட்பவர்களுக்கு எப்பொழுதும் மேன்மேலும் அபயத்தைக் கொடுப்பார்கள்" என்று சொன்னார்.

முப்பத்தாறுவது அத்யாயம்.

புத்ரதரிசனபர்வம். (தொடர்ச்சி.)

—:o:—

(ஜனமேஜயர் இறந்தவர் திரும்புவதெப்படி என்று கேட்டதும், வைசம்பாயனர் காரணத்துடன் விடையளித்ததும்.)

அப்பொழுது, வித்வானான ஜனமேஜயராஜர் பிதாமஹர்களெல்லாரும் சென்றதும் வந்ததுமான இதைக் கேட்டு ஸந்தோஷமுள்ளவரானார். ஸந்தோஷமுள்ளவரான அவர், 'சரீரத்தை இழந்தவர்கள் மறுபடி

யும் அந்தஸ்வரூபத்தைக் காண்பித்ததென்பது எவ்விதம்?" என்று (அவர்கள்) மறுபடியும் வந்ததைப்பற்றி வினவினார். அவ்விதம் வினவப் பட்டவரும் பிராம்மணஸ்ரேஷ்டரும் வியாஸருடைய சிஷ்யரும் பிரதாப முள்ளவரும் பேசுகிறவர்களுள் சிறந்தவருமான அந்த வைசம்பாயனர், அந்த ஜனமேஜயராஜரை நோக்கி, (மறுமொழி) கூறலானார்.

வைசம்பாயனர், "அரசரே! எல்லாருக்கும் கர்மங்கள் (பயனை அனு பவிக்கும் வரையில்) அழிகிறதில்லையென்பது நிச்சயம். சரீரங்களும் சரீரங்களின் உருவங்களும் கர்மங்களாலுண்டானவை. (அவை) அநித்ய மானவை. [1]மஹாபூதங்களான பித்ராதி சரீரங்கள் பிராணிகளுக்கு அதி பதியான ஈஸ்வரனை அடுத்து (ஹ்ருதயாகாசத்தில்) இருப்பதால் நித்ய மானவை. அநித்யமான கர்மசரீரங்கள் நித்யமான பித்ராதி சரீரங்களோடு சேர்ந்திருக்கின்றன. கர்மசரீரங்கள் அழியும்பொழுது நித்யசரீரங் கள் அழிகிறதில்லை. கருதாமல் செய்த கர்மத்திற்கும் பயன் கிடைக்கு மென்பது (பெரியோர்களின்) கருத்து. ஜீவன் இந்தக் கர்மங்களோடு கூடினவனாகி ஸுகதுக்கங்களை அனுபவிக்கிறான். ஆத்மாவானவன் எக் காலத்திலும் அழியும்படி செய்யப்பட முடியாதவனென்பது நிச்சயம். ஆராய்ந்து பார்க்கும் பிராணிகளுக்கு ஆத்மாவென்னும் இந்தப் பொருள் நித்யமாகக் காணப்படுவதாகும். எதுவரையில் கர்மாவானது அழிய வில்லையோ அதுவரையில் அந்தச் சரீரமானது ஸ்வரூபத்துடன் கூடின தாக இருக்கும். கர்மமானது அழிந்தவுடன் உலகத்தில் மனிதன் வேறு சரீரத்தை அடைகிறான். வெவ்வேறாயிருக்கும் இந்திரியம் முத லானவைகள் சரீரத்தை அடைந்து ஒன்றாயிருக்கும் தன்மையை அடை கின்றன. சரீரத்தைக் காட்டிலும் ஜீவன் வேறு என்று அறிபவர்களுக்கு அவைகள் நித்யமானவைகளாகின்றன. அஸ்வமேதயாகத்தில் அஸ் வத்தைக் கொல்லும் விஷயத்தில் இவ்விதமான ஸ்ருதியும் இருக்கிறது. குதிரைக்கு இந்திரியங்கள் நிச்சயமாக நித்தியமானவைகளும் லோகாந் தரத்திலுமுள்ளவைகளுமாயிருக்கின்றனவல்லவா? ராஜரே! உமக்குப் பிரியமாக இருந்தால் நான் ஹிதமான இதைச் சொல்லுகிறேன். யாகத் தைச் செய்தால் தேவயான மார்க்கங்கள் உண்டென்று நீர் கேட்டிருக்கி

---

1. 'ஜீவர்கள் ஸ்வப்ன காலத்தில் வேறு சரீரத்தை அடைந்து ஸுகத் தையோ துக்கத்தையோ அநுபவித்துவிட்டு ஸ்வப்ன சரீரம் அழிந்தபின் அக் காலத்தில் அழியாத கர்ம சரீரத்தை அடைவதுபோலக் கர்ம சரீரத்தை அடை ந்து ஸுகத்தையோ துக்கத்தையோ அநுபவித்துவிட்டு அந்தக் கர்ம சரீரம் அழிந்த பின் ஹ்ருதயாகாசத்தில் ஈஸ்வரனுடனிருக்கும் நித்யமான பித்ராதி சரீ ரத்தை அடைகின்றனர்' என்பது பழைய உரை.

நீரன்றோ? நீர் எப்பொழுது யாகத்தை நன்றாகச் செய்கிறீரோ அப்பொழுதே தேவர்கள் உமக்கு ஹிதர்களாகிறார்கள். பிராணிகளை அந்த அந்த உலகங்களை அடையும்படி செய்வதில் ஈச்வரர்களான தேவர்கள் அப்பொழுதே ஒன்று சேர்ந்தவர்களாகின்றனர். ஆகையால், நித்யர்களான ஜீவர்கள் (தேவர்களைக் குறித்து) யாகம்செய்து கதியுள்ளவர்களாகின்றனர். யாகம்செய்யாதவர்கள் கதியற்றவர்களாகின்றனர். ஐந்து பூதங்களின் சேர்க்கையாலாகிய இச்சரீரமும் ஆத்மாவும் நித்யமானவைகளாகையால், எந்தப் புருஷன் இந்தச் சரீரத்திற்கு நாசத்தையும் சேர்க்கையையும் பார்க்கிறானோ அவன் வீணான புத்தியுள்ளவன். பிரிவில் மிக்க துயரப்படுகின்றவன் மூடனென்பது என்னுடைய எண்ணம். பிரிவில் தோஷத்தைப் பார்ப்பவன் சேர்க்கையை விலக்கவேண்டும். பற்றுதலற்ற ஆத்மாவுக்குச் சேர்க்கையும் பிரிவாலுண்டாகும் துக்கமும் உண்டாக மாட்டா. தத்வஞானமில்லாதவனோ பராபரங்களை அறிந்தவனும் அபிமானமற்றவனும் ஸகுணப் பிரம்மத்தை அறிந்தவனுமாகிப் (பிறகு) மேலான பிரம்மஞானத்தை அடைந்து அஜ்ஞானத்திலிருந்து விடப்படுகிறான். (முக்தனானவன்) அறியமுடியாத வஸ்துவினிடமிருந்து வந்தவன், மறுபடியும் அறியமுடியாத வஸ்துவை அடைந்தான் நானும் அவனை அறிகிறேனில்லை. அவனும் என்னை அறிகிறானில்லை; எனக்கோ வைராக்யமுண்டாகவில்லை. ஈச்வரனல்லாத இந்த ஜீவன் எந்தச் சரீரத்தால் எதை (எதைச்) செய்கிறானோ அந்த அந்தச் சரீரத்தால் (அதை அதை) அனுபவிக்கிறான். மனத்தால் செய்ததை மனத்தாலும் சரீரத்தால் செய்ததைச் சரீரத்தாலும் அடைகிறான்.

முப்பத்தேழாவது அத்யாயம்.

புத்ரதரிசனபர்வம். (தொடர்ச்சி.)

—:0:—

(ஜனமேஜயர் பரிக்ஷித்தைக் காட்டவேண்டினதும், வியாஸர், பரிக்ஷித்தையும் சமீகரையும் ச்ருங்கி முதலியவரையும் காட்டியதும் ஜனமேஜயர் அவப்ருதஸ்நானம் செய்து ஆஸ்திகரைப் பூஜித்ததும்.)

கௌரவ ச்ரேஷ்டரே! ரிஷியினுடைய அனுக்கிரகத்தினால் தமது வடிவத்துடன் கூடின புத்திரர்களுடைய தரிசனத்தை அடைந்தவனும் மனிதர்களைப் பரிபாலிப்பவனும் புருஷச்ரேஷ்டனுமான அந்த

அரசன, புத்திரர்கள் காணுமற் போனவுடன், வியாஸரிடமிருந்து ராஜ தர்மங்களையும் பிரம்மத்தைப்பற்றிய உபநிஷத்தையும் ஞானத்தின் நிச்சயத்தையும் அடைந்தான். மஹாபிராஜ்ஞரான விதுரர் தபோபலத்தால் ஸித்தியை அடைந்தார். திருதராஷ்டிரன் தபஸ்வியான வியாஸரை ஆஸ்ரயித்து ஸித்தியை அடைந்தான்'' என்று கூறினுர்.

ஜனமேஜயர், "வரமளிப்பவரான வியாஸர் என்னுடைய தகப்பனுரையும் அவ்வித ஸ்வரூபமும் வேஷமும் பிராயமுமுள்ளவராகக் காண்பித்தால் அதையெல்லாம் நம்புவேன்; எனக்குப் பிரியமாக இருக்கும். நான் நிச்சயமுள்ளவனும் கிருதார்த்தனுமாவேன். ரிஷிஸ்ரேஷ்டருடைய அனுக்கிரகத்தினுல் என்னுடைய இஷ்டம் நிறைவேறட்டும்'' என்று கூறினுர். அந்த அரசர் இவ்விதமான வசனத்தைச் சொன்னவுடன், பிரதாபமுள்ளவரும் புத்திசாலியுமான வியாஸர் கிருபைசெய்து பரிக்ஷித்தை வருவித்தார். பிறகு, அந்த அரசர், அதே ஸ்வரூபமும் வயதுமுள்ளவரும் ஸ்வர்க்கத்திலிருந்து வந்தவரும் காந்தியுள்ளவரும் தந்தையாருமான பரிக்ஷித்தென்னும் அரசரைப் பார்த்தார். மஹாத்மாவான சமீகரையும் அவருடைய புத்திரரான ஸ்ருங்கியையும் கொல்லப்பட்டவர்களான மன்னனுடைய மந்திரிகளையும் பார்த்தார். பிறகு, பூபதியான ஜனமேஜயராஜர் ஸந்தோஷமடைந்து அவபிருதத்தில் பிதாவுக்கு ஸ்நானம்செய்வித்துத் தாமும் ஸ்நானம் செய்தார். பரீக்ஷித்தும் அவ்விடத்திலேயே மறைந்தார்.

அப்பொழுது, அந்த ஜனமேஜயராஜர் ஸ்நானம் செய்துவிட்டு யாயாவரகுலத்தில் பிறந்தவரும் ஜரத்காருவின் புத்திரருமான ஆஸ்தீகரென்னும் அந்தணரை நோக்கி, "ஆஸ்தீகரே! இப்பொழுது என்னுடைய பிதாவானவர் வந்து என்னுடைய சோகத்தைப் போக்கினுராகையால் இந்தயாகமானது பலவித ஆச்சரியமுள்ளதென்பது என்னுடைய எண்ணம்'' என்று சொன்னுர். ஆஸ்தீகர், "குருகுலஸ்ரேஷ்டனே! புராணரும் தவத்திற்குநிதியும் ரிஷியுமான வியாஸர் எவருடைய யாகத்தில் இருக்கிறுரோ அவருக்கு இரண்டு உலகங்களும் ஜயிக்கப்பட்டனவாகும். பாண்டவகுமார! உன்னுல் விசித்திரமான கதையானது கேட்கப்பட்டது. ஸர்ப்பங்களும் நீருக்கப்பட்டு (உன்) தந்தையின் மார்க்கத்தை அடைந்தன. ராஜனே! நீ ஸத்யஸந்தனுதலால் தக்ஷகனும் மிக்க சிரமத்தால் விடப்பட்டான். எல்லா ரிஷிகளும் பூஜிக்கப்பட்டார்கள். மஹாத்மாவினுடைய கதியானது பார்க்கப்பட்டது. பாபத்தைப் போக்குகின்ற இதிஹாஸத்தைக் கேட்டு மிக்கவிஸ்தாரமான தர்மம்

அடையப்பட்டது. மஹாத்மாக்களான ஜனங்களைத் தரிசனம் செய்த தால் உள்ளத்திலுள்ள [1]முடிப்பானது அவிழ்க்கப்பட்டது. எவர்கள் தர்மத்தில் விஸ்வாஸமுள்ளவர்களோ எவர்கள் நல்லொழுக்கத்தில் பிரிய முள்ளவர்களோ எவர்களைக் கண்டால் பாவம் தொலையுமோ அவர்களை நமஸ்கரிக்கவேண்டும்" என்று சொன்னார். அந்த ஜனமேஜயராஜா பிராம்மணஸ்ரேஷ்டரிடமிருந்து இந்த வாக்கியத்தைக்கேட்டு அந்த ரிஷியை அடிக்கடி புகழ்ந்து பூஜித்தார். மிகச்சிறந்தவரே! தர்மத்தை அறிந்தவரான ஜனமேஜயர் (விரதத்தினின்று) தவறாதவரான வைசம் பாயனரென்னும் அந்த ரிஷியை நோக்கி வனவாஸத்தைப்பற்றிய கதை யின் மிச்சத்தையும் வினவலானார்.

முப்பத்தெட்டாவது அத்யாயம்.

புத்ரதரிசனபர்வம். (தொடர்ச்சி.)

—:0:—

(திருதராஷ்டிரன் முதலியோர் ஆஸ்ரமம் வந்ததும், வியாஸர் கட்டளைப் படி திருதராஷ்டிரன் முதலியவர்கள் யுதிஷ்டிராதியரை நகரம் செல்ல வற்புறுத்தியதும், அவர்கள் சென்றதும்.)

ஜனமேஜயர், "புத்திரர்களையும் பௌத்திரர்களையும் (மற்ற) உறவினர்களையும் பார்த்துவிட்டுத் திருதராஷ்டிரராஜரும் யுதிஷ் டிரராஜரும் என்னசெய்தார்கள்?" என்று வினவ, வைசம்பாயனர் சொல் லலானார். "அந்த ராஜரிஷியானவர் மீண்டும் புத்திரர்களுடைய தரிசன மென்னும் அந்தப் பெரிய ஆச்சரியத்தைக் கண்டு சோகமற்றவராகி மறுபடியும் ஆஸ்ரமத்திற்கு வந்தார். மற்ற எல்லா ஜனங்களும் அந்தப் பரமரிஷிகளும் திருதராஷ்டிரனிடம் அனுமதி பெற்றுக்கொண்டு இஷ் டப்படி திரும்பிச் சென்றார்கள். மஹாத்மாக்களான பாண்டவர்களோ மிகச்சிலரான வீரர்களுடனும் மனைவிகளுடனும் மஹாத்மாவான அந்தப் பூபதியைப் பின் தொடர்ந்து சென்றனர். புத்திசாலியும் பிரம்மரிஷியும் உலகங்களால் பூஜிக்கப்பட்டவருமான வியாஸர், ஆஸ்ரமத்தை வந்து அடைந்திருக்கும் அந்தத் (திருதராஷ்டிர) ராஜனை நோக்கிப் பின்வரும் வசனத்தைச் சொல்லலானார்.

'திருதராஷ்டிர! சிறந்தகைகளுள்ளவனே! கௌரவநந்தன! கேள். உன்னால் ஞானவ்ருத்தர்களும் புண்ணியமான செய்கையுள்ள

1 இடமான அஜ்ஞானம்.

வர்களும் நற்குலத்தில் பிறந்தவர்களும் பிராயம் முதிர்ந்தவர்களும் வேதங்களையும் வேதாங்கங்களையும் அறிந்தவர்களும் தர்மத்தை அறிந்தவர்களும் புராணர்களுமான ரிஷிகளால் சொல்லப்பட்ட பலவிதமான கதைகள் நன்கு கேட்கப்பட்டன. தேவர்களைக் கண்டவரான நாரதரிடமிருந்து தேவரஹஸ்யமானது உன்னால் கேட்கப்பட்டது. சோகத்தில் மனத்தைச் செலுத்தாதே. தெய்வத்தாலாகிய காரியத்தைப்பற்றி அறிஞன் வருத்தமடையான். அவர்கள் சஸ்திரத்தால் பரிசுத்தமானதும் சுபமுமான கதியை க்ஷத்திரியதர்மத்தால் அடைந்தார்கள். உன்னால் புத்திரர்கள் எவ்விதம் பார்க்கப்பட்டார்களோ அவ்விதம் இஷ்டப்படி ஸஞ்சரித்துக்கொண்டிருக்கின்றனர். இபற்றையிலேயே புத்திசாலியான யுதிஷ்டிரன் எல்லாப் பிராதாக்களோடும் மனைவிகளோடும் நண்பர்களோடும் கூடினவனாக உன்னைப் பின்பற்றுகிறான். இவனை அனுப்பு. இவன் சென்று தன்ராஜ்யத்தை ஆளட்டும். வனத்தில் வஸிக்கும் இவர்களுக்கு ஒருமாசத்திற்குமேல் சென்றுவிட்டது. அரசனே! இந்த (ராஜ்யமென்னும்) ஸ்தானமானது எப்பொழுதும் முயற்சியுடன் ரக்ஷிக்கப்படத்தக்கதன்றோ? கௌரவஸ்ரேஷ்டனே! இந்த ராஜ்யமானது பல பகைவர்களால் விரும்பக் கூடியதன்றோ?' என்று சொன்னார்.

அளவற்ற புத்தியுள்ளவரான வியாஸரால் இவ்விதம் சொல்லப்பட்டவனும் நன்குபேசும் திறமையுள்ளவனுமான கௌரவராஜன், பிறகு, யுதிஷ்டிரரை அழைத்துப் (பின்வரும்) வசனத்தைச் சொல்லலானான். 'பகைவரற்றவனே! உனக்கு க்ஷேமமுண்டாகுக. தம்பிகளுடன் என்னுடைய (வார்த்தையைக்) கேள். பூபாலனே! உன்னுடைய சித்தசுத்தியால் சோகமானது எங்களைப்பிடிக்கவில்லை. புத்திரனே! கற்றறிந்தவனே! நான் இஷ்டர்களிடத்தில் அன்புள்ளவனும் நாதனுமான உன்னுடன் சேர்ந்து முன் ஹஸ்தினபுரத்திற் போல மகிழ்கிறேன். நான் உன்னிடமிருந்து புத்திரனாலாகிய பயனை அடைந்தேன். எனக்கு உன்னிடத்தில் பிரீதி அதிகமாக இருக்கிறது சிறந்தகைகளுள்ளவனே! எனக்குக் கோபமில்லை. நீ போகலாம். தாமதிக்காதே. இங்கு உன்னைக் கண்டபின் நான் தவத்தை விட்டுவிட்டேன். [1]தவம்செய்துகொண்டிருந்த சரீரமும் உன்னைக்கண்டபின் மறுபடியும் போஷிக்கப்பட்டது. புத்ர! இலைச் சருகுகளைப் புஜித்துக்கொண்டு என்னைப் போல் வ்ரதத்தை அனுஷ்டிப்பவர்களும் உன்னுடைய தாயார்களுமான இவ்விருவர்களும், (இனி)

1. வேறுபாடம்.

நெடுங்காலம் இருக்கமாட்டார்கள். உன்னுடைய சேர்க்கையாலும் வியாஸருடைய தவத்தின் வன்மையினாலும் லோகாந்தரம் சென்றிருந்த துரியோதனன் முதலானவர்கள் பார்க்கப்பட்டார்கள் குற்றமற்றவனே! நான் ஜீவித்திருப்பதன் பிரயோஜனம் சென்று நெடுங்காலமாயிற்று. நான் கடுந்தவம் புரியப்போகிறேன். நீ அனுமதிகொடுக்கவேண்டும். இப்பொழுது பிண்டமும் கீர்த்தியும் இந்தக் குலமும் உன்னிடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. சிறந்தகைகளுள்ளவனே! நீ இன்றைக்காவது நாளைக்காவது போகவேண்டும். தாமதம் செய்யாதே. பரத ஶ்ரேஷ்டனே! நீ மிக்க அதிகமான ராஜநீதியைக் கேட்டிருக்கிறாய். பிரபுவே! (உனக்குச்) சொல்லத்தகுந்ததை நான் காணவில்லை. இவ்வளவே போதுமானது' என்று சொன்னான்.

இவ்விதவசனத்தைச் சொன்ன அந்த அரசனை நோக்கி, யுதிஷ்டிர ராஜர், 'தர்மங்களை அறிந்தவரே! குற்றமற்றவனான என்னை நீர் விடுவது தகுதியன்று. என்னுடைய பிராதாக்களெல்லாரும் வேலைக்காரர்களும் இஷ்டப்படி செல்லட்டும். நான் விரதங்களை அனுஷ்டித்துக்கொண்டு உமக்கும் இரண்டு தாயார்களுக்கும் பணிவிடை செய்துகொண்டிருக்கிறேன்' என்று சொன்னார். பிறகு, காந்தாரியானவள், அவனை நோக்கி, 'புத்திரனே! இவ்விதம் சொல்லாதே. (என்னுடைய வார்த்தையையும்) கேள். குருகுலமும் என் மாமனாருடைய பிண்டமும் உன்னை அடுத்திருக்கின்றன. புத்திரனே! நீ போகலாம். (உன்னால்) நாங்கள் பூஜிக்கப்பட்டோம். இவ்வளவு போதுமானது. புத்திரனே! பிதாவான அரசர் சொல்லும் வார்த்தையை நீ செய்யவேண்டும்' என்று சொன்னாள். காந்தாரியினால் இவ்விதம் சொல்லப்பட்ட அந்த யுதிஷ்டிரர் குந்தியை நோக்கி ஸ்நேஹத்தாலுண்டான கண்ணீரால் நிறைந்த இரண்டு கண்களையும் துடைத்து வணக்கத்துடன் பின்வரும் வசனத்தைச் சொல்லலானார்.

'மன்னரும் புகழ்பெற்ற காந்தாரியும் என்னைப் போகச் சொல்லுகின்றனர். உன்னிடத்தில் கட்டப்பட்ட சித்தமுள்ள நான் துக்கத்துடன் எவ்விதம் செல்வேன்?' தர்மத்தை அனுஷ்டிப்பவளே! நான் உன்னுடைய தவத்திற்கு இடையூற்றைச்செய்யத் துணியவில்லை. தவத்தைக் காட்டிலும் மேலானது இல்லை. தவத்தால் பெரும்பயனை அடையலாம். அரசியே! எனக்குப் புத்தியானது முன்போல ராஜ்யத்தில் பற்றவில்லை. என்னுடைய மனமானது எல்லாவிதத்தாலும் தவத்திலேயே ஆசையுள்ளதாயிருக்கிறது. கல்யாணி! சூன்யமாக இருக்

கும் இந்த அகண்டமான பூமியும் எனக்குப் பிரியத்தைச் செய்யவில்லை. என்னுடைய பந்துக்கள் அழிந்துவிட்டார்கள்; எனக்கு முன்போல வன்மையுமில்லை. பாஞ்சாலர்கள் கன்னிகையைமட்டும் மிச்சமாக வைத்துவிட்டு முழுதும் அழிந்துவிட்டனர். கல்யாணி! அவர்களுடைய குலத்தை விருத்திசெய்பவனை ஒருவனையும் நான் காணவில்லை. அவர்களெல்லாரும் துரோணரால் யுத்தகளத்தில் பஸ்மமாகச் செய்யப்பட்டார்கள். மிச்சமிருந்தவர்களும் முந்தி நம்மால் பார்க்கப்பட்ட சேதிதேசத்தார்களும் மாத்ஸ்யர்களும் அஸ்வத்தாமாவினால் இரவில் கொல்லப்பட்டார்கள். வாஸுதேவரை அடுத்திருந்தும் விருஷ்ணிகளுடைய படையும் சூன்யமாகிவிட்டது. அதைக்கண்டு நான் தர்மத்திற்காக இருக்கவிரும்புகிறேன்; பொருளுக்காக இருக்க விரும்பவில்லை. அம்மா! எங்களெல்லோரையும் சுபமான கண்களால் பார். உன்னுடைய தரிசனமானது கிடைப்பதற்கு அரிதாகப்போகிறது. மன்னரோ, கடுந்தவம் புரியப்போகிறார்' என்று சொன்னார்.

இந்த வார்த்தையைக்கேட்டுச் சிறந்த கைகளுள்ளவனும் போர் வீரர்களுக்குத் தலைவனுமான ஸஹதேவன் கண்ணீரால் கலங்கின கண்களுள்ளவனாகி யுதிஷ்டிரரை நோக்கிப் பின்வரும் வசனத்தைச் சொல்லலானான். 'பரதஸ்ரேஷ்டரே! நான் தாயாரை விடுவதற்குத் துணியவில்லை. நீர் சீக்கிரமாகத் திரும்பிப்போம். நான் வனத்தில் தவம்புரியப் போகிறேன். மன்னருடைய திருவடிகளிலும் இந்த இரண்டு மாதாக்களுடைய திருவடிகளிலும் பணிவிடைசெய்வதில ஆசையுள்ள நான் இவ்விடத்திலேயே இந்தச் சரீரத்தைத் தவத்தால் உலர்த்தப்போகிறேன்' என்று சொன்னான். பிறகு, குந்தியானவள், நீண்ட கைகளுள்ள அந்த ஸஹதேவனைக் கட்டிக்கொண்டு, 'புத்திரனே! நீ இவ்விதம் சொல்லாதே. நான் சொல்லுகிறபடி செய்; (ஊருக்குப்) போ. புத்திரர்களே! உங்களுக்குச் சாஸ்திரங்கள் க்ஷேமத்தைச் செய்பவைகளாக இருக்கட்டும். நீங்கள் கவலையற்றவர்களாயிருங்கள். நீங்கள் இவ்விதம் செய்தால் எங்களுடைய தவத்திற்கு இடையூறு உண்டாகும். உன்னிடத்திலுள்ள ஸ்நேகமாகிற பாசத்தால் கட்டப்பட்டவளான நான் சிறந்த தவத்திலிருந்து விலகிவிடவேண்டியவளாவேன். புத்திர! ஆகையால், நீ போ. பிரபுவே! எங்களுக்கு ஆயுள் சிறிதே மிச்சமிருக்கிறது' என்று சொன்னாள்.

ராஜேந்திரரே! இவ்விதம் குந்தியினால் பலவிதவாக்கியங்களால் ஸஹதேவனுடைய மனமும் யுதிஷ்டிரராஜருடைய மனமும் விசேஷ

மாக நன்கு நிலைநிறுத்தப்பட்டன. தாயாராலும் அரசனாலும் நன்கு அனுமதி கொடுக்கப்பட்டவர்களான அந்தக் கௌரவஸ்ரேஷ்டர்கள் கௌரவஸ்ரேஷ்டனான திருதராஷ்டிரனை நமஸ்கரித்து விடைபெற்றுக் கொள்ளத் தொடங்கினார்கள். யுதிஷ்டிரர், 'அரசரே! நாங்கள் உம்மால் க்ஷேமாசீர்வாதத்தால் ஸந்தோஷிக்கும்படி செய்யப்பட்டவர்களும் அனுமதி கொடுக்கப்பட்டவர்களுமாக மனக்கலக்கமின்றி ராஜ்யத்தைக் குறித்துச் செல்லுகிறோம்' என்று சொன்னார். மஹாத்மாவான தர்ம ராஜரால் இவ்விதம் சொல்லப்பட்ட அந்த ராஜரிஷியானவன் யுதிஷ்டிர ருக்கு மரியாதைசெய்து ஜயாசீர்வாதம் கூறி அனுமதிகொடுத்தான். அரசன் பலசாலிகளுள் சிறந்தவனான பீமனையும் ஸமாதானம்செய்தான். மேதாவியும் பராக்ரமமுள்ளவனுமான அவனும் அவனுடைய (நன்மொழியை) நன்கு ஏற்றுக்கொண்டான். அந்தக் கௌரவன் அர்ஜுனனையும் பரதஸ்ரேஷ்டர்களான இரட்டையர்களையும் ஆலிங்கனம் செய்து (ஆசீர்வாதத்தால்) ஆனந்தப்படுத்தி அனுமதி கொடுத்தான். காந்தாரியினுடைய பாதங்களில் வந்தனம் செய்து அவளால் அனுமதி கொடுக்கப்பட்டவர்களும் தாயாரால் ஆலிங்கனம் செய்து (சிரத்தில்) மோக்கப்பட்டவர்களுமான அவர்களெல்லாரும் பால் குடிப்பதினின்று தடுக்கப்பட்ட கன்றுகள் (தாயைப்) பார்ப்பதுபோலத் திருதராஷ்டிரராஜனை அடிக்கடி பார்த்துக்கொண்டு பிரதக்ஷிணம் செய்தார்கள். திரௌபதி முதலான எல்லாக் கௌரவ ஸ்திரீகளும் மாமனாருக்கு முறைப்படி (வந்தனம் முதலான) உபசாரத்தைச்செய்து பிறகு இரண்டு மாமியார்களாலும் ஆலிங்கனம் செய்து கொண்டாடப்பட்டவர்களும் அனுமதி கொடுக்கப்பட்டவர்களும் செய்யவேண்டிய காரியத்தைப்பற்றி உபதேசிக்கப்பட்டவர்களுமாகிக் கணவர்களுடன் சென்றார்கள். பிறகு, 'பூட்டுங்கள்' என்று சொல்லும் ஸாரதிகளுடைய ஒலியும் சப்திக்கின்ற ஒட்டகங்களுடைய ஒலியும் கனைக்கின்ற குதிரைகளுடைய ஒலியும் நன்கு உண்டாயின. பிறகு, யுதிஷ்டிரராஜர் மனைவிகளுடனும் ஸைனிகர்களுடனும் பந்துக்களுடனும் மறுபடியும் ஹஸ்தினாபுரமென்னும் பட்டணத்திற்கு வந்தார்.

புத்ரதர்சனபர்வம் முற்றிற்று.

முப்பத்தொன்பதாவது அத்யாயம்.

நாரதாகமனபர்வம்.

—:0:—

(நாரதர் ஹஸ்திநாபுரம் வந்து திருதராஷ்டிரன் முதலியோர் ஸ்வர்க்கம் சென்றதையும் திருதராஷ்டிரன்கட்டளைப்படி ஸஞ்சயன் இமயமலைக்குச் சென்றதையும் கூறியது.)

அரசரே! [1]அந்தப் பாண்டவர்கள் திரும்பிவந்த பிறகு, தேவ ரிஷியான நாரதர் தற்செயலாக யுதிஷ்டிரரிடம் வந்தார். சிறந்த கைக ளுள்ளவரும் பேசுகிறவர்களுள் சிறந்தவரும் கௌரவராஜருமான யுதிஷ் டிரர் அவரைப் பூஜித்து, (அவர்) உட்கார்ந்து களைப்பாறியபின், அவரை நோக்கி, 'பிராம்மணரே! பகவானான நீர் இவ்விடம் வந்து எனக் குத் தரிசனம் கொடுத்து நீண்ட காலமாயிற்று. நீர் க்ஷேமமா? உமக்கு நல்வரவா? உம்மால் எந்தத் தேசங்கள் பார்க்கப்பட்டன? உமக்கு யான் என்ன செய்யவேண்டும்? அதைச் சொல்லும். நீர் பிராம்மணர்களுள் சிறந்தவர். எங்களுக்கும் பிரியமான அதிதியாயிருக்கிறீர்' என்று வின வினார். நாரதர், 'ராஜனே! நான் உன்னைப் பார்த்து வெகுகாலமாயிற் றென்று தபோவனத்திலிருந்து வந்தேன். என்னால் மற்றத் தீர்த்தங் களும் கங்கையும் பார்க்கப்பட்டன' என்று சொன்னார். யுதிஷ்டிரர், 'பக வானே! கங்காதீரத்தில் வசிப்பவர்களான புருஷர்கள், 'மஹாத்மாவான திருதராஷ்டிரர் சிறந்த தவத்தைச் செய்கிறார்' என்று என்னிடத்தில் இப்பொழுது சொல்லுகின்றனர். அவரை அங்கு நீர் பார்த்ததுண்டா? கௌரவ ச்ரேஷ்டரான அவரும் காந்தாரியும் குந்தியும் ஸூதபுத்திர னான ஸஞ்சயனும் க்ஷேமமாக இருக்கின்றனரா? என் தந்தையாரான அம்மன்னவர் இப்பொழுது எவ்விதம் இருக்கிறார்? உம்மால் (அந்த) அரசர் பார்க்கப்பட்டிருந்தால் (சொல்லும்.) கேட்க விரும்புகிறேன்?' என்று வினவினார்.

நாரதர், 'மஹாராஜனே! நான் அந்தத்தபோவனத்தில் கண்டதும் கேட்டதுமான வரலாற்றை உள்ளபடி (சொல்லுகிறேன்.) நீ உறுதி யாக இருந்து கேள். குருநந்தன! வேந்தே! நீங்கள் வனவாஸத்திலி ருந்து திரும்பிய பின், புத்திசாலியான உன்னுடைய பிதாவானவன் காந் தாரி மருமகப்பெண்ணான குந்தி ஸூதனான ஸஞ்சயன் அக்னிஹோத்ர

1. 'பாண்டவர்கள் வந்து இரண்டு வருஷங்களான பிறகு' என்பது வேறு பாடம்.

ரம் புரோஹிதர் இவர்களுடன் குருக்ஷேத்திரத்திலிருந்து கங்காத்வாரம் சென்றான். உன்னுடைய தந்தையும் தவத்தைத் தனமாகக் கொண்டவனுமான அம்முனிவன் (அங்குக்) காற்றைப் புஜிப்பவனாகி வாயில் [1]அக்னியை வைத்துக்கொண்டு கடுந்தவம் புரிந்தான். சிறந்த தவமுள்ளவனான அந்த அரசன் (அந்த) வனத்தில் எல்லாமுனிவர்களாலும் பூஜிக்கப்பட்டுத் தோலும் எலும்பும் மட்டும் மிச்சமுள்ளவனாக ஆறு மாஸங்கள் வஸித்தான். பாரத! காந்தாரியானவள் ஜலத்தை ஆஹாரமாகக் கொண்டவளும் குந்தியானவள் மாஸோபவாஸம் இருப்பவளும் ஸஞ்சயன் ஆறுவது காலத்தில் புஜிப்பவனுமாக இருந்தனர். பிரபுவே! அப்பொழுது, அந்த வனத்தில் அரசன் பார்த்துக்கொண்டிருந்தாலும் பாராமலிருந்தாலும் புரோஹிதர்கள் விதிப்படி அக்னிகளில் ஹோமம் செய்தார்கள். பிறகு, அந்த அரசன் நிலையற்றவனாகி வனத்தில் ஸஞ்சரித்துக்கொண்டிருந்தான். ஒன்றுசேர்ந்திருக்கும் அவ்விரு தேவிகளும் ஸஞ்சயனும் அவரைப் பின்தொடர்ந்தனர். ஸமமான இடங்களிலும் மேடுபள்ளமான இடங்களிலும் ஸஞ்சயன் அரசனுக்கு (வழி சொல்லி) அழைத்துக்கொண்டுபோகிறவனாக இருந்தான். புகழ்ப்பட்டவளான குந்தியானவள் காந்தாரிக்குக் கண்ணாக இருந்தாள். பிறகு, ஒரு ஸமயம் புத்திசாலியான அந்த ராஜஶ்ரேஷ்டன் கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டுக் கங்கைக்கரையிலுள்ள ஆஶ்ரமத்தை நோக்கிச் சென்றான். பிறகு, காற்றுடன் பெரியகாட்டுத்தீயானது உண்டாகி அந்த வனத்தை நாற்புறமும் பற்றிக்கொண்டு முழுதும் எரித்தது. நாற்புறங்களிலும் மான்களுடைய கூட்டங்களும் அரவங்களும் எரிக்கப்பட்டன. பன்றிகளுடைய கூட்டங்கள் தடாகங்களை அடைந்தன. (இவ்விதம்) அந்தவனம் எரிக்கப்பட்டுப் பெரிய துயரம் நேரிடவே, ஆகாரமின்மையால் வன்மையும் செய்கையும் குன்றின மன்னனும் மிக இளைத்திருந்த உன் இருதாயார்களும் விலகிச்செல்லத் திறமை அற்றவர்களாயினர். பிறகு, வெற்றி பெறுபவருள் சிறந்தவனான அந்த அரசன் அருகில் வரும் அக்னியைக் கண்டு, பிறகு, ஸூதனான ஸஞ்சயனை நோக்கி, 'ஸஞ்சய! எந்த விடத்தில் அக்னியானது உன்னை ஒருகாலும் எரிக்காதோ அவ்விடம் செல். நாங்கள் இங்கு அக்னியுடன் கூடிச் சிறந்த கதியை அடைகிறோம்' என்று சொன்னான். பேசுகிறவர்களுள் சிறந்தவனான ஸஞ்சயன் அவனை நோக்கி, 'ராஜேந்திர! வீணான அக்னியால் அநிஷ்டமான இந்த மரணமானது உமக்கு உண்டாகக் கூடாது.

1. 'வீடாய' என்பது வேறுபாடம், 'கல்லை' என்பது பழையவுரை.

தீயினின்று விடுவிப்பதற்குரிய உபாயமும் எனக்குத் தெரியவில்லை. இப்பொழுது மேலே செய்யவேண்டியதை நீர் சொல்லவேண்டும்' என்று சொன்னான். ஸஞ்சயனால் இவ்வாறு சொல்லப்பட்ட அந்த அரசன் மறுபடியும் (ஸஞ்சயனை நோக்கி), 'ஸஞ்சய! வீட்டிலிருந்து தாமாக வெளிப்புறப்பட்ட எங்களுக்கு இந்த மரணம் அனிஷ்டமன்று. ஜலமும் அக்னியும் வாயுவும் உண்ணாமையும் தபஸ்விகளுக்குப் புகழப்படுகின்றன. நீ போ; தாமதிக்காதே' என்று சொன்னான்.

அப்பொழுது, மன்னன், ஸஞ்சயனிடம் இவ்விதம் சொல்லிவிட்டு, மனத்தை ஒருவழிப்படுத்திக்கொண்டு காந்தாரியுடனும் குந்தியுடனும் கிழக்கு முகமாக உட்கார்ந்தான். பிறகு, மேதாவியான ஸஞ்சயன் அவ்விதமிருக்கும் அவனைக்கண்டு பிரதக்ஷிணம் செய்து அவனை நோக்கி, 'பிரபுவே! ஆத்மாவை யோகத்தைச் செய்யும்படி செய்யும்' என்று சொன்னான். ரிஷியின் புத்திரனும் வித்வானுமான அந்த அரசன் அவனுடைய வசனப்படி அப்பொழுது இந்திரிய ஸமூகத்தைத் தடுத்துக் கட்டை போலிருந்தான். பெரிய பாக்கியம்பெற்ற காந்தாரியும் உன்னுடைய தாயான குந்தியும் உன்னுடைய பிதாவான அந்த அரசனும் காட்டுத்தீயுடன் சேர்ந்துவிட்டார்கள். மஹாப்பிராஜ்ஞனான ஸஞ்சயனோ அந்தக் காட்டுத்தீயினின்று விடப்பட்டுக் கங்கையின் கரையில் தாபஸர்களால் சூழப்பட்டிருக்க நான் பார்த்தேன். தேஜஸ்வியும் புத்திசாலியுமான அந்த ஸஞ்சயன் அந்தத் தாபஸர்களிடம் இதை முழுதும் தெரிவித்து அனுமதிபெற்றுக்கொண்டு இமயமலையை நோக்கிச் சென்றான். வேந்தே! உறுதியான சித்தமுள்ள அந்தக் கௌரவ ராஜனும் உன்னுடைய தாயார்களான காந்தாரியும் குந்தியும் இவ்விதம் மரணமடைந்தனர். பாரத! பிறகு, அங்கே தொடர்ந்து சென்ற என்னால் அரசனுடைய சரீரமும் அந்த இரண்டு தேவிமார்களுடைய சரீரங்களும் தற்செயலாகப் பார்க்கப்பட்டன. பிறகு, அந்தத் தபோதனர்கள் அந்தத் தபோவனத்திற்கு வந்து அப்பொழுது அரசனுடைய நிஷ்டையையும் கதிகளையும் கேட்டுத் துயரப்படவில்லை. புருஷர்களுள் மிகச் சிறந்தவனே! பாண்டவ! அரசனும் அந்த இருதேவிகளும் எரிக்கப்பட்டனரென்னும் இதை முழுதும் நான் அவ்விடத்தில் கேட்டேன். ராஜஶ்ரேஷ்டனே! துயரப்படவேண்டாம். மன்னவனும் காந்தாரியும் உன் அன்னையும் அக்னியின் சேர்க்கையைப் பெற்று ஸ்வர்க்கத்திலிருக்கின்றனர்' என்று சொன்னார்.

திருதராஷ்டிரனுடைய இந்த மரணத்தைக் கேட்டு, மஹாத்மாக்

களான எல்லாப் பாண்டவர்களுக்கும் பெரியசோகமுண்டாயிற்று. மஹாராஜரே! அப்பொழுது அரசனுடைய கதியைக்கேட்டு அந்தப்புரஸ்திரீகளும் பட்டணத்திலிருப்பவர்களும் தீனமான ஸ்வரத்தை உரக்க வெளியிட்டனர். யுதிஷ்டிரராஜர் தாயைநினைத்து மிக்கதுயரமடைந்து கைகளை உயரத்தூக்கிக்கொண்டு, 'ஓ! ஓ! கஷ்டம்!' என்று சொல்லி அலறியழுதார். பீமஸேனன் முதலான அந்தப் பிராதாக்களெல்லாரும் அப்பொழுது துக்கத்தால்வாடிக் குந்தியை வர்ணித்துக்கொண்டு அழுதார்கள். மஹாராஜரே! குந்தி அவ்விதநிலைமையை அடைந்ததைக்கேட்டு அப்பொழுது அந்தப்புரங்களிலும் மிகப்பெரிய அழுகையொலி உண்டாயிற்று. வயது சென்றவனும் புத்திரர்கள் கொல்லப்பட்டவனும் அவ்விதம் எரிக்கப்பட்டவனுமான அவ்வரசனையும் துயரப்படத்தக்கவளான காந்தாரியையும்பற்றி அவர்களெல்லாரும் துயரப்பட்டார்கள். பாரதரே! ஒரு முகூர்த்தத்திற்குள் அந்தச் சப்தமானது ஓய்ந்தவுடன், தர்மராஜர் தைரியத்தினால் கண்ணீரை அடக்கிக்கொண்டு பின்வரும் வசனத்தைச் சொல்லலானார்.

நாற்பத்நாலவது அத்யாயம்.

நாரதாகமனபர்வம். (தொடர்ச்சி.)

---:o:---

(யுதிஷ்டிரர் முதலியவர்கள் திருதராஷ்டிரன் முதலியோரின் மாணத்தைக் கேட்டுப் புலம்பி அவர்கள் காட்டுத் தீயாலெரிக்கப்பட்டதற்கு வருந்தியது.)

யுதிஷ்டிரர், 'மஹாத்மாவும் கடுந்தவம் புரிகின்றவருமான அவருக்குப் பந்துக்களான நாங்கள் இருக்கும்போது நாதனற்றவனுக்குப் போல அவ்விதம் மரணம் நேர்ந்தது. பிராம்மணரே! விசித்ரவீர்யருடைய புத்திரரான இவர் இவ்விதம் காட்டுத் தீயினால் எரிக்கப்பட்டாரானபடியால் மனிதர்களுடைய கதியானது அறியஅரிதென்பது என்னுடைய எண்ணம். எவருக்கு ஸ்ரீமான்களும் கைவண்மையால் விளங்குகின்றவர்களுமான நூறுபுத்திரர்களிருந்தார்களோ பதினாயிரம் யானைபலமுள்ளவரான அந்த அரசர் காட்டுத் தீயினால் எரிக்கப்பட்டார். எவரை முந்தி உத்தம ஸ்திரீகள் விசிறிகளால் விசிறினார்களோ காட்டுத்தீயினால் கவரப்பட்ட அவரை (இப்பொழுது) கழுகுகள் விசிறின. (முன்)

32873

சயனம் செய்துகொண்டிருக்கும் எவரை ஸூதமாகதர்களுடைய கூட டங்கள் எழுப்பினவோ, அந்த அரசர் (இப்பொழுது) கழுகுகளாலும் காக்கைகளாலும் இழுக்கப்பட்டுப் பூமியில் படுத்திருக்கிறார். புத்திரர்களை இழந்தவளும் புகழ்பெற்றவளும் பர்த்தாவினுடைய விரதத்தை அனுஷ் டித்துப் பர்த்தாவினுடைய உலகத்தைக் கூடஅடைந்தவளுமான காந் தாரியைப்பற்றி நான் துயரப்படவில்லை. நிறைந்த செல்வமுள்ளதும் மிகப்பெரிதும் பிரகாசிக்கின்றதுமான புத்திரர்களுடைய ஐய்வரி யத்தை விட்டுவிட்டு வனவாஸத்தில் பிரியப்பட்டவளான குந்தியைப் பற்றியே துயரப்படுகிறேன். மரித்தவர்கள் (போன்ற) நாங்கள் ஜீவித்தி ருக்கிறோம். ஆகையால், எங்களுடைய இந்த ராஜ்யம் நிந்திக்கத்தக்கது; பலம் நிந்திக்கத்தக்கது; பராக்ரமம் நிந்திக்கத்தக்கது; க்ஷத்தி ரிய தர்மமும் நிந்திக்கத்தக்கது. பிராம்மணச்ரேஷ்டர்களுள் சிறந்த வரே! அந்தக் குந்தியானவள் ராஜ்யத்தை விட்டுவிட்டு வனவா ஸத்தில் பிரியப்பட்டாளாகையால், உலகத்தின் கதியானது மிக்க ஸூக்ஷ்மமானது. யுதிஷ்டிரனுக்கும் பீமனுக்கும் விஜயனுக்கும் தாயானவள் அநாதைபோல் எவ்வாறு எரிக்கப்பட்டாளென்று ஆலோசித்து மதிமயங்குகிறேன். 'ஸவ்யஸாசியினால் காண்டவ வனத் தில் அக்னியானவன் வீணாகத் திருப்தியடையும்படி செய்யப்பட் டான். அவன் உபகாரத்தை அறியாமல் நன்றி கொன்றவனானான்' என் பது என்னுடைய எண்ணம். எவன் (முந்தி) பிராம்மணவேஷம் பூண்டு பிக்ஷையை யாசித்துக்கொண்டு வந்தானோ பகவானான அந்த அக்னி (இப்பொழுது) அர்ஜுனனுடைய தாயையே கொன்றான். ஆகையால், அக்னியையும் அர்ஜுனனுடைய பிரஸித்திபெற்ற ஸத்யப்பிரதிஜ்ஞை யையும் நிந்திக்கவேண்டும். பகவானே! ராஜாவுக்கு வீணான அக்னி யோடு சேர்க்கை நேர்ந்ததென்னும் இது வேறு பெரிய கஷ்டமாக எனக் குத் தோன்றுகிறது. இந்தப் பூமியை ஆண்டுவிட்டு அவ்வாறு தவம் புரிந்தவரும் ராஜரிஷியுமான அந்தக் கௌரவருக்கு இவ்விதமரணம் எவ் வாறு நேர்ந்தது? அவருக்கு மந்திரத்தால் பரிசுத்தமான அக்னிகள் இருக் கும்பொழுது, என்னுடைய பிதாவான அவர் மஹாவனத்தில் வீணான அக்னியுடன் சேர்ந்து முடிவை அடைந்தார். இளைத்தவளும் நரம்புகள் நிறைந்தவளுமான என் தாயான குந்தியானவள் பெரிய பயம் நேர்ந்த வுடன், நடுக்கமுற்று, 'அப்பனே! தர்மராஜனே!' என்று என்னை அழைப்பவளும், 'பீம! பயத்தினின்று காப்பாற்று' என்று அலறுகின்ற வளுமாயிருந்துகொண்டு காட்டுத்தீயினால் நாற்புறங்களிலும் பற்றப்பட்

டிருப்பானென்று நினைக்கிறேன். அவனுக்கு (எல்லா)ப் புத்திரர்களையும் காட்டிலும் ஸஹதேவனிடத்தில் பிரியம் அதிகம். வீரனும் மாத்திரியின் புத்திரனுமான அவனும் இவளைவிட்டுப் பிரிந்ததேயில்லை' என்று சொன்னார். அதைக் கேட்டுப் பஞ்சபாண்டவர்களனைவரும் யுகாந்தத்தில் பிராணிகள்போலத் துக்கத்தால் பீடிக்கப்பட்டு ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு அழுதார்கள். அழுகின்றவர்களான அந்தப் புருஷஸ்ரேஷ்டர்களுடைய அழுகையொலியானது அரண்மனையினுடைய விஸ்தாரத்தால் தடுக்கப்பட்டிருக்கும் ஆகாயத்தையும் பூமியையும் எதிரொலியிடும்படி செய்தது.

நாற்பத்தோராவது அத்யாயம்.

நாரதாகமனபர்வம். (தொடர்ச்சி.)

——:o:——

(நாரதர் திருதராஷ்டிராதிகளை எரித்தது அவனுடைய மந்திராக்னிதானென்றதும், யுதிஷ்டிரர் யுயுத்ஸுவைக்கொண்டு காந்தாரி திருதராஷ்டிரர்களுக்கும் தாமே தந்நிக்கும் தர்ப்பணம் ஸ்ராத்தமுதலியன செய்ததும், பிறகு ஸுகமாக அரசாட்சி செய்ததும்.)

நாரதர், 'ராஜனே! விசித்ரவீர்யனுடைய புத்திரனை (திருதராஷ்டிர) ராஜன் வீணை அக்னியினால் எரிக்கப்படவில்லை. அவ்விதம் நான் அவ்விடத்தில் கேள்வியுற்றேன். (ஆகையால்,) அவனைப்பற்றி நீ துயரப்படவேண்டாம். காற்றைப் புஜிப்பவனும் சிறந்த புத்தியுள்ளவனுமான அவன் வனத்தில் பிரவேசிக்கும்போது இஷ்டியைச் செய்வித்து அக்னிகளை உண்டுபண்ணினானென்று நமக்குக் கேள்வி. பரதஸ்ரேஷ்டனே! பிறகு, அவனுடைய புரோஹிதர்கள் அந்த அக்னிகளை நிர்ஜனமான வனத்தில் போட்டுவிட்டு இஷ்டப்படி சென்றார்கள். அப்பொழுது, அந்த அக்னியானது அந்தவனத்தில் விருத்தியடைந்ததாம். அதனால், அந்த வனமானது நாற்புறத்திலும் பற்றப்பட்டதென்று அந்தத் தாபஸர்கள் சொன்னார்கள். பரதருள் சிறந்தவனே! நான் உனக்குக் கூறியவண்ணம் அந்த அரசன் கங்கைக் கரையில் தன்னுடையதாகவே இருக்கும் அந்த அக்னியோடு கூடினவனானான். குற்றமற்றவனே! யுதிஷ்டிர! கங்கைக் கரையில் என்னால் பார்க்கப்பட்டவர்களான அந்த முனிவர்கள் இவ்விதமே என்னிடம் சொன்னார்கள். பூபதியே! இவ்விதம் (அந்த) அரசன் தன்னு

டையதான அக்னியோடு சேர்க்கைபெற்று உத்தம கதியை அடைந்தான். நீ மன்னனைப்பற்றித் துயரப்படவேண்டாம். ராஜனே! உன்னுடையதாயும், குருவுக்குப் பணிவிடை செய்ததினாலேயே மிகச் சிறந்த ஸித்தியை அடைந்தாள். இதுவிஷயத்தில் எனக்கு ஸந்தேகமில்லை. ராஜேந்திர! நீ எல்லாப் பிரதர்க்களுடனும் அவர்களுக்கு உதகக்கிரியையைச் செய்யவேண்டும். இப்பொழுது இது செய்யப்படட்டும்' என்று கூறினார்.

பிறகு, பூபாலரும் பாண்டவர்களுள் தலைமை பெற்றவரும் புருஷ ச்ரேஷ்டருமான அந்த யுதிஷ்டிரர் ஸஹோதரர்களுடனும் மனைவியுடனும் வெளிப்புறப்பட்டார். பட்டணத்தார்களும் தேசத்தார்களுமான ஜனங்களும் ராஜபக்தியை முன்னிட்டு ஒற்றைவஸ்திரத்தை உடுத்து அவரைச் சூழ்ந்துகொண்டு கங்கைக்குச் சென்றனர். பிறகு, அந்தக் கௌரவ ச்ரேஷ்டர்களெல்லாரும் ஜலத்தில் ஸ்நானம்செய்து யுயுத்ஸுவை முன்னிட்டுக்கொண்டு மஹாத்மாவான திருதராஷ்டிரனுக்கும் காந்தாரிக்கும் குந்திக்கும் பெயரையும் கோத்திரத்தையும் சொல்லி விதிப்படி உதகதானம் செய்தார்கள். அப்பொழுது, அவர்கள் சுத்தியை உண்டுபண்ணிக்கொள்ள வேண்டியதற்காகப் பட்டணத்திற்கு வெளியில் வாஸம் செய்தார்கள். அந்த யுதிஷ்டிரர், விதியை அறிந்தவர்களும் ஆப்தர்களாகக் காரியம் செய்பவர்களுமான மனிதர்களைக் கௌரவ ச்ரேஷ்டனை அரசன் எரிக்கப்பட்ட இடமான கங்காத்வாரத்திற்கு அனுப்பினார். யுதிஷ்டிரராஜர் அப்பொழுது அந்தக் கங்காத்வாரத்திலேயே அவர்களுக்குத் தக்க கிருத்யங்களைச் செய்ய வேண்டுமென்று அந்த மனிதர்களிடம் வேண்டியவற்றைக் கொடுத்து உத்தரவு செய்தார். அந்த யுதிஷ்டிரராஜர் பன்னிரண்டாவது தினத்தில் சுத்தியைச் செய்துகொண்டு அவர்களுக்கு விதிப்படி தக்ஷிணையுள்ள ச்ராத்தங்களைச் செய்தார். அந்த அரசர், திருதராஷ்டிரரை உத்தேசித்து ஸுவர்ணத்தையும் வெள்ளியையும் பசுக்களையும் மிக்க அதிகமான விலைபெற்ற படுக்கைகளையும் தானம் செய்தார். தேஜஸ்வியான அரசர், காந்தாரியினுடைய பெயரையும் குந்தியினுடைய பெயரையும் தனித்தனியாகச் சொல்லி மிகச் சிறந்த தானத்தைக் கொடுத்தார். படுக்கை போஜனம் வாகனம் மணிகள் ரத்தினங்கள் தனம் இவற்றுள் எதை எந்தப் பிராம்மணன் எவ்வளவு விரும்பினானோ அவன் அதை அவ்வளவையும் அடைந்தான். பூபதியான அரசர், அந்த இரண்டுதாயார்களையும் உத்தேசித்து வாகனத்தையும் போர்வையையும் போகங்களையும் நன்கு அலங்கரிக்கப்பட்ட

வேலைக்காரிகளையும் கொடுத்தார். பிறகு, புத்திசாலியான அந்தப் பூபாலர் மிகுதியான ப்ராத்தங்களைக் கொடுத்துவிட்டு மறுபடியும் ஹஸ்தின புரம் சென்றார். அரசருடைய உத்தரவின்மேல் சென்றிருந்த புருஷர்களும் அவர்களுடைய எலும்புகளைப் பொறுக்கிக்கொண்டு அவ்விடமிருந்து திரும்பிவந்தார்கள். அவர்கள் அவர்களுடைய எலும்புகளைப் பலவிதமான மாலைகளாலும் சந்தனங்களாலும் விதிப்படி பூஜித்து (கங்கையில்) சேர்த்துவிட்டு, அதை அரசரிடம் சொன்னார்கள். நாரதமஹரிஷியும் தர்மாத்மாவான யுதிஷ்டிரராஜரைத் தேற்றிவிட்டு ஸந்தோஷத்துடன் இஷ்டப்படி சென்றார். யுத்தத்தில் புத்திரர்கள் கொல்லப்பட்டவனும் ஞாதிகளுக்கும் ஸம்பந்திகளுக்கும் மித்திரர்களுக்கும் பிராதாக்களுக்கும் பந்துக்களுக்குமாக எப்பொழுதும் தானங்களைக் கொடுக்கின்றவனும் சிறந்த புத்தியுள்ளவனுமான திருதராஷ்டிரனுக்கு இவ்விதம் நகரத்தில் பதினைந்து வருஷங்களும் வனவாஸத்தில் மூன்று வருஷங்களும் சென்றன. ஞாதிகளையும் பந்துக்களையும் இழந்தவரான யுதிஷ்டிரராஜரோ அப்பொழுது மனத்தில் அதிக ஸந்தோஷமில்லாமல் அந்த ராஜ்யத்தைப் பரிபாலித்தார்" என்று கூறினார்.

நாரதாகமன பர்வம் முற்றிற்று.

ஆஶ்ரமவாஸிகபர்வம் முற்றிற்று